# நமது செட்டிநாடு

மலர் 11 ✿ மணம் 01 ✿ ஸ்ரீ விசுவாவசு ஆண்டு ✿ வைகாசி ✿ மே 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 11 ✿ Issue 01 ✿ May 2025 ✿ Rs.25




பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நமது செட்டிநாடு இதழுக்கு சிறப்பு சேர்க்கும் செட்டிநாடு குழுமத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்களுடன் இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிச் சிறப்பு சேர்த்த, சேர்க்கும் நகரத்தார் எழுத்தாளர்கள்.


Institute of Technology
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
MANAMAI CAMPUS
From bridges to AI, Engineering makes it possible!
B.Tech (AI&DS)*
B.Tech (Cyber Security)*
B.Tech (CS & Medical Engg)*
B.Tech (IT)*
B.Tech (ECE)*
B.Tech(CSE)*
B.Tech*
4 years
SCAN TO REGISTER
ADMISSION OPEN 2025-26
MANAMAI CAMPUS
844 789 2022
manamaiadmissions.care.edu.in
Nallur - Manamai, ECR, Behind Great Lakes Institute of Management, Thirukalukundram taluk, Chennai - 603102.
*Subject to Approval

நமது
செட்டிநாடு

மலர் 11 மணம் 01 மே 2025
ஸ்ரீ விசுவாவசு ஆண்டு வைகாசி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750
இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கரு.மணிகண்டன்
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்
9962243750



ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை 600 006.

# பத்தாண்டுகள் பயணம்...

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே உங்களது ஆதரவுடன் நமது செட்டிநாடு இதழ் பத்து ஆண்டுகளாகப் பயணம் செய்து தொடர்ந்து பதினோராம் ஆண்டாக இந்த மாதம் அடி எடுத்து வைக்கின்றது. சமுதாய இதழ்களில் நம் நகரத்தார் சமுதாயத்தில் தான் ஒரே நேரத்தில் அதிக இதழ்கள் வெளிவந்தன. அவற்றில் பல இதழ்கள் இடைநிறுத்தம் ஆகிவிட்டன என்றாலும், இன்றும் சில இதழ்கள் அச்சு வடிவிலும் சில இதழ்கள் இணைய வழியிலும் வெளியாகி சமூகப் பணி ஆற்றி வருகின்றன. இருந்தாலும் ஒட்டுமொத்த சமூகத்தின் பிரதிபலிப்பாக குறிப்பாக நகரத்தார் நலன், இளைஞர்கள், பெண்கள், தொழில் முனைவோர், தொழிலதிபர்கள், ஆன்மிகம், இலக்கியம், சமுதாய வரலாறு, வழிகாட்டிய முன்னோர்கள், அறிவியல், சுய முன்னேற்றம், மேலாண்மை, பயணம், பிற மாநிலங்கள் மற்றும் அயல் நாடுகளில் வசிக்கும் நகரத்தார்களின் செய்திகள் என அனைத்தும் அடங்கிய பல்சுவை இதழாக நமது செட்டிநாடு இதழ் மட்டும் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு நகரத்தார்களின் நன்மதிப்பைப் பெற்று வருவதோடு அவர்கள் மனதில் நீங்காத இடத்தை பிடித்துள்ளது என்பதற்கு குறிப்பிட்ட தேதியில் இதழ் வரவில்லை என்றால் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விவரத்தை அறிகின்றவர்களின் எண்ணிக்கையே அதற்கு சான்றாக உள்ளது. இவையெல்லாம் எப்படி சாத்தியமானது. செட்டிநாடு குழுமத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்கள் அளித்து வரும் பேராதரவும் நகரத்தார்களில் தலைசிறந்து விளங்கும் எழுத்தாளர்கள் நமது செட்டிநாடு இதழில் தொடர்ந்து எழுதி வரும் கட்டுரைகளின் சிறப்பும் நமது இதழை நகரத்தார் பெருமக்கள் விரும்பிப் படிக்கும் முதன்மை இதழாக உயர்த்தி உள்ளது என்றால் மிகையில்லை. நவீன விஞ்ஞான யுகத்திற்கு ஏற்ப நகரத்தார் பெருமக்களும் புதிய மாற்றத்திற்கு மாற வேண்டும் என்ற உயரிய நோக்கில் நமது செட்டிநாடு மின் இதழும் புதிய வடிவமைப்பில் நிகழ்ச்சிகளின் காணொளிகளோடு செய்திகளை படிக்கின்ற வசதியோடு மாதம் தோறும் கட்டணமில்லா இதழாக வெளிவருகிறது. நகரத்தார்களின் ஒற்றுமைக்கும் மேம்பாட்டிற்கும் தொடர்ந்து செயல்பட்டு வரும் நமது செட்டிநாடு இதழுக்கு பக்கபலமாக விளங்கும் செட்டிநாடு குழுமத்திற்கும், விளம்பரங்கள் வழங்கி ஆதரித்து வரும் நிறுவனங்களுக்கும், சிறப்பான முறையில் கட்டுரைகள் எழுதி வரும் எழுத்தாளர்களுக்கும், அச்சு மற்றும் மின் இதழ் வாசகர்களுக்கும் நமது செட்டிநாடு இதழ் நிர்வாகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து தங்கள் மேலான கருத்துக்களை தெரிவித்து, ஆதரவு நல்கவும் கேட்டுக் கொள்கிறோம். ♦




திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064

★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com


## முன் அட்டையை அலங்கரிப்பவர்கள்...

செட்டிநாடு குழுமத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்களுடன் வெளிவட்டம் (இடமிருந்து வலம்): திருவாளர்கள் புதுவயல் செல்லப்பன், காரைக்குடி நாராயணன், சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன், சேதுராமன் சாத்தப்பன், பெரி.முத்துராமன், சேதுராமன் குமரப்பன், பழ.பழனியப்பன், M.கண்ணன், நெற்குப்பை தியாகராஜன். ஆத்தங்குடி GE.ராமநாதன், இராம்குமார் சிங்காரம், பேராசிரியர் N.அழகப்பன், சீத்தலைச் சாத்தன், மா.இளங்கோ, சோமலே சோமசுந்தரம், சோம. வள்ளியப்பன், என்.எஸ். ராஜன், லேனா தமிழ்வாணன், கவிஞர் செல்ல கணபதி. உள்வட்டம் (இடமிருந்து வலம்): கலைமாமணி ஆறு.அழகப்பன், சொ.சொ.மீ. சுந்தரம், அரியக்குடி ஸ்ரீ சபாரத்தினம், ALS. நாச்சியப்பன், பேராசிரியர் மு.பழனியப்பன், கண்மணி சுப்பு, இஸ்ரோ லெ.முத்து, திருமதி மணிமேகலை சரவணன், என். நாச்சாள், தேனம்மை லெஷ்மணன், கோட்டையூர் R.மீனாட்சி, பிரேமா நாராயணன். வெளிப்புறம்: அபிராமி சுவாமிநாதன் (USA) மற்றும் பழ. கைலாஷ்

## உள்ளே...


'தி ஸ்டார்ட் பேஸ்ட்ரி' ஸ்வர்ணலக்ஷ்மி ....... 06
வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க.... 10
நகரத்தார் திருப்பணிகள்.......................... 12
திருமாலின் திவ்ய தேசங்கள் .................... 14
ஆளுமை மேம்பாட்டு பயிற்சி .................... 16
நன்றியும் பாராட்டும் ................................ 18
உங்களுடன் உரையாடுங்கள் .................... 20
தொழில் தொடங்கலாம் வாங்க ................. 21
இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ............................ 26
நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ....... 28
நிகழ்ந்த தவறில் என் பங்கு என்ன? ........... 32
அழகப்பரின் பிள்ளைகள் ........................... 34
பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ........ 36
திருமந்திரச் சுவை ................................... 38
இராம காவியம் ........................................ 39
நகரத்தார் சிகரத்தார் ................................ 40
ஓவியம் .................................................. 42

Vees Star™ Diamonds & Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA CERTIFIED SOLITAIRE



CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com





S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்

CHENNAI - 044 4553 6003 1, 9383007477

MADURAI - 9884473330

KARAIKUDI - 9884803349



# கோவையில் கொடிகட்டிப் பறக்கும்

# 'தி ஸ்டார்ட் பேஸ்ட்ரி' ஸ்வர்ணலக்ஷ்மி

**கோ**வையில் புகழ்பெற்ற தொழில்களில் ஒன்றான பேக்கரி தொழிலில் கொடிகட்டிப் பறக்கிறார் அரு. ஸ்வர்ணலக்ஷ்மி. கோவையில் 'தி ஸ்டார்ட்' என்ற பெயரில் இவர் மைக்ரோ பேக்கரி நடத்தி வருகிறார். இவருடைய சொந்த ஊர் – தேவகோட்டை. மாத்தூர் – உறையூர் பிரிவைச் சேர்ந்தவர். இவருடைய பெற்றோர் ஏஆர். அருணாச்சலம் செட்டியார், ஞானாம்பாள் ஆச்சி.

'எப்படி தேர்ந்தெடுத்தார் இந்தத் துறையை' என்று நமக்குள் ஆச்சரிய வினா எழுந்தது. நமது எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொண்டவர் போல, ஸ்வர்ணலக்ஷ்மி பேசினார்.

"நான் பிளஸ் டூவில் காமர்ஸ் குரூப் எடுத்திருந்தாலும், அதை முடிச்சதும் எல்லாரையும் போல சி.ஏ., ஏ.சி.சி.ஏ. போகணும்னு எனக்கு ஆசை இல்லை. சின்ன வயசுல இருந்து தனியா ஒரு பிசினஸ் பண்ணனும். அதுவும் ஃபர்ஸ்ட் ஜெனரேஷன் பிசினஸ் மாதிரி ஏதாவது செட் அப் பண்ணனும்னு லட்சியம் இருந்தது. அதனால சென்னையில் எம்.ஓ.பி. வைஷ்ணவா காலேஜ்ல பி.காம். சேர்ந்தேன். தொழில் முனைவராக வரணும்னு விரும்புறவங்களுக்கு அந்தக் கல்லூரி ஒரு அருமையான களம். படிப்பில் மட்டும் கவனம் செலுத்த வைக்காமல், அவங்கவங்க திறமையைப் பார்த்து, அவங்களுக்கு பிடிச்ச துறையிலயும் டெவலப் பண்ண எல்லா வகையிலும் வழிகாட்டுவாங்க. எனக்கு அங்கே நிறைய எக்ஸ்போஷர் கிடைச்சது. எனக்கு இருந்த தொழில் தொடங்கும் ஆர்வத்தை நல்லா ஊக்குவிச்சாங்க.

ஒவ்வொரு வருஷமும் நடக்கும் எம்.ஓ.பி. பஜார் என்னும் கண்காட்சியில், பிசினஸ் ஸ்டால் மாதிரி போடலாம். நான் ஒவ்வொரு வருஷமும் ஸ்டால் போட்டேன். அந்த ஸ்டாலில் வெறும் விற்பனை மட்டும் இல்லாமல், ஒரு தொழிலைத் தொடங்கினால் அதனுடைய முதல் படியிலிருந்து, பிராண்டிங், மார்க்கெட்டிங், டிஜிட்டல் மார்க்கெட்டிங், அக்கவுண்டிங், பைனான்ஸ் என சகலமும் கத்துக்கலாம். ஸ்டால் எல்லாம் முடிச்ச உடனே நம்முடைய வரவு செலவுக் கணக்கை சமர்ப்பிக்கணும். எனக்கு ஃபைனல் இயர்ல 'பெஸ்ட் ஆன்ட்ரபிரனர்' அவார்டு கிடைச்சது." – தன்னுடைய தொழில் ஆர்வத்தை தூண்டிவிட்ட கல்லூரியை நன்றியுடன் நினைவு கூர்ந்தார் ஸ்வர்ணலக்ஷ்மி.

**இப்போது செய்யும் தொழில் பத்தி விரிவாக சொல்லுங்க. அதில் ஆர்வமும் ஈடுபாடும் வந்தது எப்படி? எங்கே பயிற்சி எடுத்துக்கிட்டீங்க?**

"பி.காம். கடைசி வருஷத்தில் எனக்கு ஹெச்.சி.எல்.–லில் வேலை கிடைச்சது. ஆனா நம்முடைய உழைப்பை அடுத்தவங்களுடைய நிறுவனத்தில் போடுவதில் எனக்கு அவ்வளவாக உடன்பாடு இல்ல. நானே ஏதாவது ஒரு பிசினஸ் தொடங்கணும் என்பதுதானே என் சின்ன வயசில் இருந்து எனக்குள் இருக்கும் ஆசை. என்ன பிசினஸ் பண்ணலாம்னு யோசிக்கும் போது, பள்ளிப் பருவத்திலிருந்தே எனக்கு ரொம்பப் பிடிச்ச 'பேக்கிங்' (baking) தொழிலையே பண்ணலாம்னு தோணுச்சு. ஸ்கூலில் படிக்கிறப்பவே என்னுடைய உறவினர்கள், நண்பர்கள் எல்லாருக்கும் பர்த்டே கேக்ஸ், கப் கேக்ஸ் எல்லாம் பண்ணி கொடுத்துட்டு இருந்தேன். காலேஜ் படிக்கும் போது கூட, 'பார்ட் டைம்' வேலையாக நண்பர்கள், உறவினர்களுக்கு கேக் பண்ணி கொடுத்துட்டிருந்தேன். அதையே ஏன் தொழிலாகப் பண்ணக் கூடாதுன்னு யோசிச்சேன். ஏன்னா, தினமும் நாம பார்க்கும் வேலை நமக்குப் பிடிச்சதாக இருக்கணுமே தவிர, வேலைக்குப் போறதே ஒரு கஷ்டமாயிடக் கூடாது. வாரம் முழுவதும்



கஷ்டப்பட்டுட்டு, வாரக் கடைசி நாட்களில் மட்டும் சந்தோஷத்தை அனுபவிக்கும் வாழ்க்கை எனக்குப் பிடிக்கலை. வாழ்க்கை முழுவதும் நமக்குப் பிடிச்ச வேலையைப் பார்த்து சந்தோஷமாக இருக்கணும்னு நினைச்சுதான் எனக்கு ரொம்பப் பிடிச்ச பேக்கிங் ஃபீல்டையே தேர்ந்தெடுத்தேன். நான் பேக் (bake) பண்ணி அடுத்தவங்களுக்குக் கொடுக்கணும்னு நினைச்சேன். என்னுடைய பாஷனை (passion) ஆம்பிஷனாக மாத்திட்டேன்.









அதை செயல்படுத்தும் விதமாக பெங்களூரில் பிரபல லவ்வொன் அகாடமி ஆஃப் பேக்கிங் சயின்ஸ் அண்ட் பேஸ்ட்ரி ஆர்ட்ஸ் என்னும் இன்ஸ்டிட்யூட்டில் ஆறு மாசம் பேக்கிங் கோர்ஸ் பண்ணினேன். இந்தியாவின் சிறந்த பேக்கிங் ஸ்கூல் அது. அதுக்கப்புறம் கோயம்புத்தூர்ல வந்து இன்டெர்ன்ஷிப் பண்ணினேன். அதுவும் இந்தியாவின் பெங்களூர் அகாடமியில் படிக்கும்போது நிறைய இன்டர்நேஷனல் 'செஃப்'களுடன் வேலை செய்த அனுபவம் கிடைச்சது. அவங்களும் எனக்கு நல்ல ட்ரெயினிங் கொடுத்தாங்க. நிறைய கத்துக்க முடிஞ்சது. கோயம்புத்தூரில் இன்டர்ன்ஷிப் பண்ண கம்பெனியும் இந்தியாவின் தலைசிறந்த, இந்தியன் ஆரிஜின் சாக்லேட் பிராண்ட் கம்பெனி. அங்கே வொர்க் பண்ணும்போது எப்படி ஒரு கமர்ஷியல் கிச்சன்ல வொர்க் பண்ணனும், நாலைந்து செஃப்ஸகளை எப்படி மேனேஜ் பண்ணனும், வாடிக்கையாளர்களை எப்படி கையாளனும், கோயம்புத்தூரில் இருக்க கஸ்டமர் பேஸ். இதெல்லாம் எனக்கு நல்லா புரிஞ்சுக்க முடிஞ்சுது. இன்டர்ன்ஷிப் முடிச்சுட்டு நானே என்னோட சொந்த பிராண்ட் 'தி ஸ்டார்ட்' அப்படிங்கிற பெயரில் ஆரம்பிச்சேன்."




**வீட்டில் உங்களுக்கு சப்போர்ட் இருக்கா? என்ன மாதிரியான சப்போர்ட் தர்றாங்க?**

சின்ன வயசிலிருந்தே என்னுடைய பெற்றோர் என் விருப்பத்துக்கு குறுக்கே நின்னதில்லை. 'உனக்கு பிடிச்சதை பண்ணு, அப்போதான் நீ வாழ்க்கையில் சந்தோஷமா இருக்க முடியும்'னு சொல்லி ஊக்குவிப்பாங்க. எனக்கு பிடிக்காத விஷயத்தை என் மீது திணித்து கட்டாயப்படுத்தினதே இல்லை. என் அக்காவுக்கும் சரி எனக்கும் சரி.. 'பிடிச்சதைப் பண்ணலாம்' என்பதை நல்லா ஆழமாகப் பதிய வச்சுட்டாங்க. நாங்க என்ன பண்ணனும்னு நினைச்சாலும் நல்லா தட்டிக்கொடுத்து, பாராட்டுவாங்க. பேக்கிங் ஆரம்பிச்ச புதிதில் நான் கமர்சியலா பண்ணாம வீட்ல இருந்து பண்ணும் போது, உதவிக்கு எந்த ஆளும் வச்சுக்கல. அம்மா தான் எனக்கு எல்லா உதவியும் பண்ணிட்டு இருந்தாங்க. எனக்க உதவணும் என்பதற்காகவே அம்மா ஒரு நாள் பேக்கிங் வொர்க் ஷாப் எல்லாம் போயி பேக்கிங் டிப்ஸ் எல்லாம் கத்துக்கிட்டு வந்து எனக்கு ஹெல்ப் பண்ணாங்கன்னா பார்த்துக்குங்க!"

**நீங்க தயாரிக்கும் பேக்கரி தயாரிப்புகளில் என்ன ஸ்பெஷல்?**

"கோயம்புத்தூரில் நிறைய பேக்கர்ஸ் இருக்காங்க. எங்கே பார்த்தாலும் பிரவுனிஸ், கேக்ஸ், கப் கேக்ஸ் எல்லாமே கிடைக்குது. ஆனா தரமா இருக்கா என்பது தான் கேள்வியே. நான் என்னுடைய சொந்தமா பிராண்ட் ஆரம்பிக்கும் போது தரமான தயாரிப்புகளாக கொடுக்கணும், என்கிற கொள்கையில் உறுதியாக இருந்தேன். உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களை, உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யற பொருட்களை வைத்து பண்ணனும். தரமான பிரெட் வகைகள் என் கிச்சனை விட்டு வெளியில போகணும். உலகத் தரம் வாய்ந்த உணவுகள் கோயம்புத்தூரில் இருக்கும் கஸ்டமர்களுக்கு போகணும் என்கிற நோக்கத்தில் தான் நான் ஸ்டார்ட் என்கிற பிராண்ட் ஆரம்பிச்சேன். என் தயாரிப்புகளில் உபயோகிக்கிற பொருட்கள் எல்லாமே உள்ளூரில் கிடைக்கிற பொருட்கள் தான். உதாரணமா கோதுமை மாவு, மைதா அதெல்லாம் எடுத்துக்கிட்டா ஃபிரெஷா அரைக்கப்பட்டு பஞ்சாபில் இருந்து நேரடியாக வாங்குறேன். கமர்சியலா கிடைக்கிற மைதா, கோதுமை எல்லாம் வாங்குவதில்லை. எந்த செயற்கையான வாசனை பொருளையும் நாங்க உபயோகிப்பதில்லை. அந்தந்த சீசன்ல என்ன கிடைக்குதோ அதை வைத்துத் தான் பண்றோம். உதாரணமா ஸ்ட்ராபெரி சீசன்ல மட்டும்தான் ஸ்ட்ராபெர்ரி ஃபிளேவர் வர்ற மாதிரி பண்ணுவேன். எசன்ஸ் எல்லாம் சேர்க்கிறது இல்லை.

அது மாதிரி தான் வெனிலாவும். கேரளாவில் இருந்து வருது. நான் இன்டெர்ன்ஷிப் பண்ணின பிராண்ட்ல இருந்து தான் சாக்லேட்டை வாங்குறேன். வெளியில








கிடைக்கும் நிறைய சாக்லேட் வகைகளில் காய்கறி எண்ணெய் கலந்திருக்கு. நான் பயன்படுத்தும் சாக்லேட்டில் 100% கொக்கோ தான். காபி டைரக்டா கூர்கில் இருந்து வருது. இதுமாதிரி என்னுடைய மூலப்பொருட்கள் எல்லாமே ஃபிரெஷ்ஷானவை. செயற்கையான வாசனையும் நிறமும் கலப்பதே இல்லை. இயற்கையாக அந்தப் பழத்திலிருந்து என்ன நிறம் வருமோ அந்த நிறம் தான் கேக்கில் இருக்கும். பார்ட்டி மாதிரி விசேஷங்களுக்கு 'எனக்கு ரெயின்போ கலர்ல கேக் வேணும்'னு கேட்டாங்கன்னா அந்த மாதிரி எல்லாம் நான் கொடுக்கிறது இல்லை. என்னோட முக்கியமான சிறப்பு அம்சங்கள் இவை எல்லாம்!"

**"உங்க பிரெட் வகைகளையும் வாடிக்கையாளர்களையும் பத்திச் சொல்லுங்க."**

"எங்களின் தற்போதைய பெஸ்ட் செல்லர் சவர்ட்ஃப் பிரெட். இயற்கையிலேயே நொதிக்கவைக்கப்பட்ட பிரெட். எப்படி நம்ம ஊரில் தயிர், மாவெல்லாம் இயற்கையிலேயே நொதிக்க வைக்கிறார்கள். நீங்க மார்க்கெட்டில் வாங்கும் பிரெட்டில் சேர்ந்திருக்கும் பொருட்களின் பட்டியல் பாத்தீங்கன்னா குறைந்தது ஒரு 20 பொருட்களாவது இருக்கும். ஒரு பிரெட் செய்வதற்கு அவ்வளவு பிரிசர்வேட்டிவ்ஸ் அவ்வளவு இன்கிரிடியன்ஸ் தேவையே இல்லை. அது எல்லாமே உடல் நலனுக்கு ரொம்ப கெடுதல். இதையே சவர் டஃப் பிரெட் எடுத்துக்கிட்டால் மூணே மூணு தான் தேவை. மாவு, தண்ணீர், உப்பு இது மூணும் தான் தேவை. ஒரு இரவு முழுவதும் நொதிக்க வைக்கிறதுனால இதோட கிளைசெமிக் இன்டெக்ஸ் ரொம்ப கம்மி. சர்க்கரை நோயாளிகளுக்கு இதை சாப்பிட்டதும் உடனே சர்க்கரை அளவு கூடாது. எனவே, சர்க்கரை நோயாளிகளுக்கு இது ரொம்ப நல்லது. நார்மல் பிரெட்டை விட சவர் டோ பிரெட்ல நார்ச்சத்து ரொம்ப ஜாஸ்தி. நொதிக்க வைக்கப்பட்ட உணவு எதுவுமே நம்முடைய குடலுக்கு ரொம்ப நல்லது. மேலும், உடல் நலனுக்கு நிறைய நல்ல விஷயங்கள் இருக்கு. கோயம்புத்தூர்ல ரொம்ப சிலர் தான் இந்த சவர் டோ பிரெட் பண்றாங்க. ஆனா இதுக்கு நல்ல கஸ்டமர் பேஸ் இருக்காங்க.. நிறைய பேர் இதைத்தான் விரும்புறாங்க. அதனால எனக்கு நிறைய ரிப்பீட்டட் கஸ்டமர்ஸ் இருக்காங்க. திருப்பூர்ல இருந்து வாரத்துக்கு ரெண்டு நாள் வந்து என்கிட்ட பிரெட் வாங்குறவங்க இருக்காங்க. காரமடையில் இருந்து வந்து வாங்குறவங்க கூட இருக்காங்க."

**உங்க தொழிலில் அடுத்தகட்டமாக என்ன செய்யலாம்னு ஐடியா வச்சிருக்கீங்க?**

"இப்போதைக்கு 'தி ஸ்டார்ட்' ஒரு மைக்ரோ பேக்கரி. அப்படின்னா ஒன்லி ஃபார் டெலிவரி. டைனிங் பண்ண முடியாது. எல்லாமே ஆர்டர்களுக்கு தயாரிப்பதுதான். எனக்கு வாரத்துக்கு சந்தா மாதிரி கட்டிடுவாங்க. இல்லனாலும் முதல் நாளாவது ஆர்டர் பண்ணிடுவாங்க. அவங்க ஆர்டர் கொடுத்ததுக்கு அப்புறம் தான் நான் ஃபிரெஷா செய்யவே ஆரம்பிப்பேன். நான் மார்க்கெட்டிங் பண்றது இன்ஸ்டாகிராம் பக்கம் மூலமாகத்தான். எதையுமே சிறியதாகவாவது ஆரம்பிக்கணும் என்பதால் இதுதான் என் முதல் படி. இதுக்கு அடுத்த கட்டமாக நான் கமர்சியல் ஷாப் ஒண்ணு ஆரம்பிக்கணும். கோயம்புத்தூர்ல மெயினான ஏரியாவில்தொடங்கணும். அப்படி பண்ணினா இன்னும் என் பிராண்ட் பத்தி நல்லா தெரியவரும். நிறைய பேர் நேரடியாவே கிச்சனுக்கு வந்து ப்ராடக்ட் பார்த்து வாங்கலாம்.. அங்கேயே இருந்து சாப்பிடுவது போல ஒரு இடமாக அது இருக்கனும் என்பதுதான் என் அடுத்த கட்ட குறிக்கோள்!

பேக்கரி நடத்துவதைத் தவிர நான் பேக்கிங் வகுப்புகள், வொர்க் ஷாப்ஸ் நடத்திக்கிட்டு இருக்கேன். ஸ்டார்ட் ஆப்ஸ் அண்ட் கஃபே ஆரம்பிக்கிறவங்களுக்கு எல்லாம் பேஸ்ட்ரி செஃப்பாக கன்சல்டிங் பண்ணிக்கிட்டு இருக்கேன். அவங்களுடைய பணியாளர்களை எல்லாம் ட்ரெயின் பண்ணி, அவங்களுடைய தயாரிப்புகளுக்கு மெனு மற்றும் விலை நிர்ணயம் பண்ணிக் கொடுக்கிறேன்."

**ஒரு பேக்கரி செஃப் உங்களுக்கு மிகவும் பிடித்த பேஸ்ட்ரி ஐட்டம் என்ன?**

"என்னோட ஃபேவரிட் ஐட்டம், நான் தயாரிக்கிற சாக்லேட் டெஸர்ட் பாக்ஸ் தான். என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு டெஸர்ட் என்பது திகட்டக் கூடாது. சாப்பிட்டால் இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் சாப்பிடணும் அப்படின்னு தான் இருக்கணும். சாக்லேட் டெஸர்ட் பாக்ஸை ஒருமுறை சாப்பிட ஆரம்பித்தால், அதை முழுமையாக முடிச்சிட்டுத்தான் நிறுத்த முடியும். அதன் சுவை அப்படிப்பட்டது!"

ஸ்வர்ணலக்ஷ்மி கூறும்போதே சாப்பிட வேண்டும் போல ஆவல் இழுக்கிறது. இன்ஸ்டாகிராம் பக்கத்துக்குப் போய் ஆர்டர் போட்டுவிடவேண்டியதுதான்! – மித்ரா


Innovative Homes & Developers Pvt. Ltd.
Creating Value & Lifestyles
SINCE 1999
25
YEARS OF EXCELLENCE
சொந்த நிலத்தில வீடா? உங்கள் கனவில்லத்தை கட்ட
Innovative Homes தயார். Joint venture-ஆ? இல்ல contract-வீடா?
We do both, Flat development & Individual house construction!
Book your Flat Now!
Karaikudi
G+2 floors.
K.K.Nagar
Chennai, S+5 floors.
Virugambakkam
Chennai, S+5 floors.
RERA NO. TN/29/Building/077/2023
98410 12145
www.innovativehomes.in
7/11,1-A, Bharathi Nagar 2nd Street,T.Nagar, Chennai - 17
இன்னோவேடிவ் அண்ணாமலை

# வாங்க... வாங்க... தாய்லாந்துக்கு வாங்க...

## 1 புன்னகை பூமி



சோமலெ
சோமசுந்தரம்




தாய்லாந்து என்றவுடன் நினைவில் வரும் காட்சிகள்: பாரம்பரியம் மிக்க அரச பரம்பரை, யானைகள், காரமான உணவு, அழகிய கடற்கரைகள், புன்னகை, தேகத்தை பிடித்து விடுதல் (massage), புலிகளை கட்டித்தழுவி புகைப்படம் எடுத்துக்கொள்தல்!

தாய்லாந்து வரை படத்தை உற்று நோக்கிப் பார்க்கும்போது உங்கள் கற்பனையில் எந்த மிருகம் வருகிறது?

'யானையின் முன்புறத் தோற்றம் - இடது பக்கமும், வலது பக்கமும் அகன்ற காதுகள், கீழே நீண்டு வளர்ந்து தொங்கும் தும்பிக்கை; இதுதான் தாய்லாந்து நாட்டின் வடிவம். இதை படத்தில் காணலாம்' என்று 1960-இல் தான் எழுதிய 'தாய்லந்து' நூலில், அந்நாட்டை அறிமுகப்படுத்துகிறார் அறிஞர் சோமலெ.

### வெள்ளை யானை!

தாய்லாந்தில்தற்போது (2025-இல்) 3,800 யானைகள் உள்ளன. அந்த எண்ணிக்கை இந்திய யானைகளை விட நான்கரை மடங்கு குறைவாக இருந்தாலும் தாய்லாந்தின் கலாச்சாரம் மற்றும் வரலாற்றில் யானைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பதிமூன்றாம் நூற்றாண்டில் போர்களில் பயன்படுத்தப்பட்ட யானைகள், தொன்றுதொட்டு இந்நாட்டின் வரலாற்றில் தனி முத்திரை பதித்துள்ளன. போராளிகளாக பணியாற்றிய யானைகள், போர் காலங்கள் முடிந்து நாட்டில் அமைதி திரும்பிய பின் தொழிலாளிகளாக, காடுகளில் வெட்டிய மரங்களை இழுத்து வரும் கடினமான பணிகளைச் செய்தன. அத்தொழில் தடை செய்யப்பட்ட சூழ்நிலையில், சுற்றுலா பயணிகளை கவரும் நட்சத்திரங்களாக காலத்திற்கு ஏற்றாற் போல் பணிபுரிகின்றன இந்த யானைகள்.



இந்தியாவில் நிறைய யானைகளைப் பார்த்துவிட்டோம், தாய்லாந்தில் வேறு ஏதாவது பார்ப்போம் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால், தாய்லாந்தில் யானைகளிடமிருந்து எளிதில் தப்பி விட முடியாது என்பதை விரைவில் உணர்ந்தோம். யானைகளின் நடனம், கால்பந்து போட்டி போன்று எதையாவது பார்க்காமல் உங்களின் தாய்லாந்துப் பயணம் நிறைவடையாது. நிஜமான யானையைப் பார்க்காவிட்டாலும், யானை சிலைகள், படங்கள், சிற்பங்கள், 'யானைகள் கடக்கும் பகுதி' என்ற சாலை அறிவிப்புகளையாவது பார்த்துவிடுவீர்கள். இங்குள்ள யானைகள் சரணாலயங்கள் நீலகிரி மற்றும் கேரளாவில் உள்ள சரணாலயங்களை நினைவுபடுத்தின.




தாய்லாந்து யானைகள் இந்திய யானைகளைப் போன்று சாம்பல் நிறத்தில் உள்ளன, மிக மிக அரிதாகக் காணப்படும் வெள்ளை யானைகள் அரச பரம்பரையின் சின்னமாக போற்றப்படுகின்றன. கடைசி கணக்கெடுப்பில் அவற்றின் எண்ணிக்கை பதினொன்று! வெள்ளை யானை என்று அழைக்கப்பட்டாலும் அவற்றின் நிறம் இளம் சிவப்பு (pink). இந்த யானைகளின் தனித்துவத்தால் 'வெள்ளை யானைகள் நாடு' (Land of White Elephants) என தாய்லாந்து அழைக்கப்படுகிறது. புத்த மதத்தில்




புனிதமானவை என வணங்கப்படும் இவற்றை எங்காவது பார்த்தால் மக்கள் அவற்றை அரச குடும்பத்திற்கு பரிசாக வழங்கி விடுவார்களாம்.

### அண்டை நாடுகள்

மியன்மார், லாவ், கம்போடியா, மலேசியா ஆகியவை புன்னகை பூமியின் அண்டைநாடுகள். அவை அனைத்தையும் விட முன்னேறிய நாடாக தாய்லாந்து இருப்பதால் வேலைவாய்ப்புக்காக தாய்லாந்தில் குடியேற அதன் அண்டை நாட்டினர் விரும்புகின்றனர்.

நிலப்பரப்பில் இந்தியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையே எல்லை இல்லையென்றாலும் (இடையே மியான்மார் நாடு உள்ளது), இரண்டு நாடுகளும் அந்தமான் கடலில் எல்லையைப் பகிர்வதால் இந்தியாவையும் புன்னகை பூமியின் அண்டை நாடென்றே கூறலாம். கொல்கத்தாவில் இருந்து தாய்லாந்து தலைநகர் பேங்காக் நகரை, மியன்மார் நாட்டின் வழியாக, இணைக்கின்ற 2800 கிலோமீட்டர் நீள பன்னாட்டு நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் 2027-ஆம் ஆண்டில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு, காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி செல்லும் நேரத்தை விட பல மணி நேரங்கள் முன்னதாகவே கொல்கத்தாவிலிருந்து பேங்காக் சென்றுவிடலாம்!

இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் நீங்கள் விமானத்திலோ, கப்பலிலோ பயணம் செய்யாமல், மகிழ்வுந்து மூலமாகவே மியன்மார், தாய்லாந்து, கம்போடியா, லாவ், வியட்நாம், மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளைப் கண்டுகளிக்கும் காலம் விரைவில் வரப்போகிறது!



### புன்னகை பல விதம்!

தாய்லாந்திற்கு 'புன்னகை பூமி' (Land of Smiles) என்ற புனைப்பெயர் எப்படி வந்தது? வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கத்தில் தம் நாட்டை 'புன்னகை பூமி' என 1960-களில் விளம்பரப்படுத்தத் தொடங்கிய தாய்லாந்து அம்முயற்சியில் பெரும் வெற்றி அடைந்துள்ளது. ஜப்பானையும் இந்தியாவையும் விட அதிக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து ஆசியாவில் சீனாவிற்கு அடுத்து வெளிநாட்டவரை ஈர்க்கும் காந்தமாக உள்ளது தாய்லாந்து. 2024-ஆம் ஆண்டில் மட்டும் 350 இலட்சம் வெளிநாட்டவர்கள் இவர்களின் புன்னகையைப் பார்த்து மகிழ வந்துள்ளனர்.



விளம்பரத்திற்காக மட்டுமன்றி புன்னகையை ஒரு மொழியாகவே பயன்படுத்துபவர்கள் இந்நாட்டினர். நாம் பெரும்பாலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்த புன்னகையைப் பயன்படுத்துகிறோம். அவர்களோ பதட்டம், வருத்தம், கோபம், வெட்கம், காதல், கேலி, கிண்டல், விளையாட்டுத்தனம், ரகசியம், மன்னிப்பு, தயக்கம், முடிவெடுக்க முடியாமை, சங்கடம், மரியாதை, வஞ்சகம், இவை அனைத்தையும் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் புன்னகை மூலமே வெளிப்படுத்துகிறார்கள்! அவர்களின் 13 வகை புன்னகைகளில் மூன்றே மூன்று புன்னகைகள் தான் மகிழ்ச்சியை வெளிப்படுத்துபவை.




'இம்' (yim) என்றால் 'தாய்' மொழியில் புன்னகை என்று பொருள். ஒவ்வொரு விதமான புன்னகைக்கும் தனித்துவமான பெயர் இருக்கிறது. ரகசியப் புன்னகைக்குப் பெயர் 'இம் சூ' (yim soo). உங்கள் நாட்டில் புன்னகைக்கு இத்தனை அர்த்தமா என்ற வியப்புப் புன்னகையோடு எங்களுடன் வந்த பயண வழிகாட்டியிடம் நான் கேட்டபோது அவர் முகத்தில் குழப்பப் புன்னகையைப் பார்த்தேன்!

புன்னகை தொடரும்...



சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

**124) திருஇலம்பையங்கோட்டூர் (Pincode - 631 053):**

காஞ்சிபுரத்திலிருந்து செல்லம்பட்டிடை என்ற சிற்றூருக்குச் சென்று அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இத்தலத்தை அடையலாம். அரம்பை வழிபட்டதால் அரம்பையங் கோட்டூர் என்றழைக்கப்பட்டுப் பின் இலம்பையங் கோட்டூராகி இப்பொழுது எலுமியன் கோட்டூர் ஆகிவிட்ட இத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது. சம்பந்தர் இங்கே வந்த போது இறைவன் ஒரு பாலகனாகவும், கிழவனாகவும் வந்து வழிகாட்டினார். உடன் வந்த அடியார்கள் உணர்ந்து கொள்ளாததால் வெள்ளைப் பசுவாகி வந்து சம்பந்தர் ஏறி வந்த முத்துப் பல்லக்கை முட்டிக் காட்ட, அதனால் இங்கு வந்த சம்பந்தர் இவ்வூர்ப் பதிகத்தில் "பாலனாம் விருத்தனாம் பசுபதி தானாம்" என்று பாடினார் என்று கூறப்படுகிறது. இப்பதிகம் முழுவதும் சம்பந்தர் "எனதுரை தனதுரையாக" என்று பாடி "நானுரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் தன் வார்தை" என்பதை நிலைநாட்டுகிறார். இங்கு இறைவர் அரம்பேஸ்வரர். இறைவி கோடேந்து முலையம்மை. இத்தல மரம் மல்லிகை. இத்தலம் கூவம் ஆற்றின் மறுகரையில் உள்ளது. இங்குள்ள தட்சிணாமூர்த்தி யோக தட்சிணாமூர்த்தி. இவர் சின் முத்திரையை இதயத்தில் வைத்துள்ளார். மூலவர் தீண்டாத் திருமேனி. அவர் மேல் உருத்திராக்க மாலை சார்த்தப்பட்டுள்ளது. சிவலிங்கத் திருமேனி வெளிர் நிறமுடைய செம்மண் நிறத்தில் உள்ளது. இத்தலத்தில் தேவகோட்டை நகரத்தார் சிலர் பத்தாயிரம் ரூபாய் செலவில் சில திருப்பணிகளைச் செய்தனர். அதன் பிறகு 1943-ல் தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்தார்கள். சிவபூசைச் செல்வரான இவர் இலம்பையங் கோட்டூர் அரம்பேசன் திருவிருத்தப் பதிகம் பாடினார். ஊர் மக்களை ஆலயத்தில் வழிபாடு செய்யச் செய்த இவர் பணியால் இங்கு, கிறித்தவ மத மாற்றம் தடுக்கப்பட்டது.

**125) திருவிற்கோலம் (Pincode - 631 203):**

இத்தலம் சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் சுங்குவார் சத்திரத்துக்கு அருகில் உள்ளது. ஊருக்கு அருகில் தர்க்க மாதா அம்மன் கோவில் உள்ளது. திருவாலங்காட்டு நடராஜப் பெருமானுடன் தர்க்கம் செய்து நடனமாடிய காளி மாதாவின் கால் சிலம்பில் உள்ள முத்துகள் வீழ்ந்த இடம் என்று இக்கோயிலைப் பற்றிக் கூறப்படுகிறது. சம்பந்தர் பாடிய சிவாலயம் ஊருக்குள் உள்ளது. இறைவர் மேரு மலையை வில்லாகக் கையில் பிடித்த கோலம் என்பதால் இது விற்கோலமாயிற்று. சுவாமி பெயர் திருவிற்கோலநாதர் அம்மை திரிபுரசுந்தரி. இத்தலம் நைமிசாரண்ய க்ஷேத்திரம் எனப்படுகிறது. இங்குள்ள அக்னி தீர்த்தம் அச்சிறு கேணி எனப்படுகிறது. இதில் தவளைகளே வருவதில்லை. இக்குளத்தில் மூழ்கி இறைவனை வழிபட்டுப் புத்திரப் பேறு பெற்றவரகள் பலர். இங்குள்ள வயிரவருக்கு வாகனமில்லை. மூலவர் அருமையான சுயம்பு மூர்த்தி. இது தீண்டாத் திருமேனி. இது மணல் இலிங்கம். மூர்த்தியைப் பாலாலயம் செய்வதில்லை. சுவாமிக்குப் பதினாறு முழ வேட்டிதான் சார்த்தப்படுகிறது. அதிக மழை வெள்ளம் வரும் அறிகுறி இருந்தால் சுவாமி மீது வெண்மை படரும். போர் நிகழ்வதானால் செம்மை படரும் என்று கூறப்படுகிறது. இது பற்றியே திருஞானசம்பந்தர் "ஐயன் நல் அதிசயன்" என்று பாடுகிறார். கோயிலிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருமஞ்சன மேடை எனப்படும் இடத்தில் உள்ள தீர்த்தம்தான் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. வேறு தீர்த்தங்களால் அபிஷேகம் செய்தால் சுவாமி மீது சிற்றெறும்புகள் படரும். இங்கு உச்சிக்கால அபிஷேகத்திற்கான பால், பிஞ்சிவாக்கம் கிராமத்திலிருந்து தலைச்சுமையாகக் கீழே வைக்காமல் ஆயர் ஒருவரால் கொண்டு வரப்படுகிறது. கோயிலுக்கு வெளியே கரியமாணிக்கப் பெருமாள் சந்நிதி உள்ளது. திரிபுர சங்கார காலத்தில் தேர் அச்சு முறிந்த போது, சிவபெருமானை, விடையாக இருந்து தாங்கியவர் இப்பெருமாள் என்று கூறப்படுகிறது. இப்பொழுது கூவம் என்றழைக்கப்படும் இக்கோயில் தலபுராணம் திருக்கூவப் புராணம் எனப்படுகிறது. இது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் பாடப் பெற்றது. இந்தச் சிவாலயத்தில் தேவகோட்டை ராம.பெரி. பிச்சப்ப செட்டியார் தம்பொருள் கொண்டும், நகரத்தார் பொருளுதவி கொண்டும் இரண்டு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து, ஆனந்த ஆண்டு, சித்திரை மாதம், 17-ஆம் நாள் (29.4.1914) முதற் குடநீராட்டும், பிரபவ ஆண்டு, ஆனி மாதம், 27-ஆம் நாள் (11.7.1927) இரண்டாம் குடநீராட்டும் செய்தார்.

126) திருவாலங்காடு (Pincode - 631 210):

அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கால் அம்மையார் ஆகியோரால் பாடப் பெற்ற இத்தலம் சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக அரக்கோணம் செல்லும் பாதையில் உள்ளது. வடாரண்யம் எனப்படும் இது இறைவன் காளியுடன் நடனமாடிய திருத்தலம். காரைக்கால் அம்மையார் இருந்து பாடச், சிவபெருமான் நின்று ஆடும் இத்தலம் பஞ்ச சபைகளில் இறைவன் ஊர்த்துவ தாண்டவமாடும் இரத்தின சபை ஆகும். இறைவர் தேவர் சிங்கப் பெருமாள் எனப்படும் ஆலங்காட்டு அப்பர். இறைவி வண்டார்குழலி. தீர்த்தம் சென்றாடு தீர்த்தம். இக்குளக்கரையில் நடனமாடித் தோற்ற காளியின் உருவம் உள்ளது. இரத்தின சபையில் பெரிய ஸ்படிக லிங்கமும், சிறிய மரகத லிங்கமும் உள்ளன. ஆனந்தத் தாண்டவ நடராஜர் சன்னிதியில் மூடப்பெற்ற சுரங்கப் பாதை உள்ளது, இந்தச் சிவன் கோயிலில் சுவாமி கோயில், நடராஜர் கோயில் ஆகியவை கோட்டையூர் பெ.மு.அ. குடும்பத்தாரால் புதிதாகக் கட்டப்பெற்றுத் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. கொத்தமங்கலம் ராம.அ. பொதுவில் முப்பதாயிரம் ரூபாய் செலவில் வேத பாடசாலையும், சென்னை நகரத்தார்களால் ஏழாயிரம் ரூபாய் செலவில் நகர விடுதியும் அமைக்கப் பெற்றன.

127) திருவெண்பாக்கம் (Pincode - 602 023):

திருவள்ளூருக்கு அருகில் திருவிளம்புதூரில் குசஸ்தலை ஆற்றின் கரையில் இருந்த இக்கோயிலில் சுந்தரர் பதிகம் பாடி ஊன்றுகோல் பெற்றார். 1942-ல் பூண்டி நீர்த்தேக்கம் அமைப்பதற்காக, இக்கோயில் பெயர்த்து எடுக்கப்பெற்றுப் பூண்டியில் புதிய கோயிலாகக் கட்டப்பெற்று 05.07.1968-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது. இறைவர் ஊன்றீஸ்வரர். இறைவி மின்னொளியம்மை. இங்குள்ள நந்தியின் வலக்கொம்பு ஒடிந்துள்ளது. தேவகோட்டை நகரத்தார் சுவாமி கோயில் மண்டபம், அம்மன் கோயில் மண்டபம் ஆகியவற்றைக் கட்டினர்.

128) திருக்கள்ளில் (Pincode - 601 103):

இத்தலம் இப்பொழுது திருக்கள்ளம் என்றும், திருக்கண்டலம் என்றும் வழங்கப்படுகிறது. இது சென்னையிலிருந்து பெரிய பாளையம் செல்லும் பேருந்துச் சாலையில் கன்னிப் புத்தூருக்கு அருகில் உள்ளது. சம்பந்தர் பாடிய இத்தலம் தூங்கானை மாட அமைப்புடையது. இறைவன் பெயர் சிவானந்தேஸ்வரர். இறைவி ஆனந்தவல்லி. இக்கோயில் தேவகோட்டை ராம. அரு.அரு. (சத்திரம்) அருணாசலம் செட்டியாரின் (ஏஜெண்டாக) மேலாளராக இருந்த தேனப்ப செட்டியார் முயற்சியால் 1900-ஆம் ஆண்டில் பதினைந்தாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்றது. பிருகு முனிவர் வழிபட்ட இத்தலம் இப்பொழுதும் திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

129) திருக்காளத்தி:

இப்பொழுது ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் (சென்னையிலிருந்து 110 கி.மீ. தூரத்தில்) உள்ள இத்தலம் மக்கள் வழக்கில் காளாஸ்திரி என்று வழங்கப்படுகிறது. தென் கயிலாயம் என்று போற்றப்படும் இத்தலம் பஞ்சபூதத் தலங்களில் வாயுவின் தலமாகும். இறைவர் காற்றாக இருப்பதால் இங்கு சிவலிங்கத்திற்கு அருகில் உள்ள விளக்கு ஒளி அசைந்து கொண்டே இருக்கிறது. வடக்கு நோக்கி உத்தரவாகினியாகப் பாயும் சுவர்ணமுகி எனப்படும் பொன்முகலி ஆற்றின் கரையிலுள்ள இத்தலம் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவராலும் பாடப் பெற்றது. இத்தலத்தில் அன்புப் பிழம்பாகத் திரிந்து குடுமித் தேவர் என்ற சிவலிங்கப் பெருமானுக்குத் தன் கண்ணைத் தோண்டி அப்பிய வேடனான கண்ணப்பர், மாணிக்கவாசகராலும், ஆதிசங்கரராலும் பாடப் பெற்றவர். “அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி” என்று திருஞானசம்பந்தர் போற்றிய இத்தலத்தில் நடந்தாலே மோட்சம் என்பதால் காளத்தி பிரவேச முத்தி என்று சொல்வதுண்டு. ஸ்ரீ என்றால் சிலந்தி, காளம் என்றால் நஞ்சுடைய பாம்பு. அத்தி என்றால் யானை. மூன்றும் வழிபட்டதால் இத்தலம் ஸ்ரீகாளத்தி எனப் போற்றப்படுகிறது. இது ராகு கேது திருத்தலம். இங்குள்ள காளி கோபுரம் 1516-ல் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பெற்றது. இங்கு அகத்தியர் வழிபட்ட பாதாள விநாயகர் 35 அடி ஆழத்தில் இருக்கிறார். இத்தலத்தில் இறைவர் காளத்திநாதர். இறைவி ஞானப் பூங்கோதை. சிவலிங்கத் திருமேனி தீண்டாத் திருமேனி, ஆவுடையார் பின்னால் கட்டப் பெற்றது. சிவலிங்கத்தின் மீது பட்டையான தங்கக் கவசம் உள்ளது. இதைச் சார்த்தும் போதும் எடுக்கும் போதும் சுவாமி மீது கைபடக் கூடாது. இக்கவசத்தில் 27 நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத் திருமேனி உயரமானது. இதன் அடிப்பாகத்தில் சிலந்தி வடிவமும், மத்தியில் யானைத் தந்தங்களும் மேற்புறத்தில் ஐந்து தலைப்பாம்பு வடிவமும், வலப்பக்கம் கண்ணப்பர் கண் அப்பிய வடுவும் அழகாக அமைந்துள்ளன.

மேற்கு நோக்கிய இறைவர் சந்நிதியில் மூலவர் அருகில் மனோன்மணி என்ற சக்தியின் திருமேனியும், கீழே காளத்திநாதரின் போகமூர்த்தத் திருமேனியும் உள்ளன. சந்நிதியில் கண்ணப்பரும் காட்சி தருகிறார். இவரைக் கும்பிடுவது சிவபெருமானைக் கும்பிட்டதால் கிடைத்த புண்ணியப் பலன் அல்லவா? இந்தக் காளத்திநாதர் அப்பருக்கு மட்டுமா கண்ணுக்குள் இருக்கிறார்? நமக்குமல்லவா கண்ணுக்குள் நிற்கிறார். கண்ணப்பரால் அபிஷேகம் செய்யப்பெற்ற மூர்த்தியாதலின் இச்சந்நிதியில் திருநீறு தருவதில்லை. பச்சைக் கற்பூரத்தைப் பன்னீர் விட்டு அரைத்துத் தீர்த்தத்தில் கலந்து சங்கில் வைத்துக் கொடுக்கிறார்கள். இங்கு அர்த்தசாம பூஜை கிடையாது. நவக்கிரகங்கள் இல்லை. சனி பகவான் மட்டும் உள்ளார். காளத்தியப்பர், பொன்முகலி ஆற்றில் நீராடி வழிபட்ட முனிவர்களுக்குக் காட்சி தருவதற்காக மேற்கு நோக்கி இருக்கிறார். ஞானப் பூங்கோதை கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். இவள் திருவடியில் ஆதிசங்கரர் வைத்த அர்த்தமேரு உள்ளது. இடுப்பில் உள்ள ஒட்டியானத்தில் கேது உருவம் உள்ளது. அம்மை சந்நிதியில் தென் மேற்கு மூலையில் சக்தி மிக்க யந்திரம் வைக்கப்பட்டுள்ளது. ஆலயத்திற்கு அருகில் கைலாச கிரி (மலை) உள்ளது. இங்கு கயிலை பாதி, காளத்தி பாதி அந்தாதி பாடிய நக்கீரர் சிலை உள்ளது. தெலுங்கில் இவரைச் சித்தலையா (சித்தி பெற்றவர்) என்கிறார்கள்.

(திருப்பணிகள் தொடரும்)

# நாதன் கோயில் என்னும் திருநந்திபுர விண்ணகரம் - (21)




நா. சௌரிராஜன், கோட்டையூர்



நந்திபுர விண்ணகரப் பெருமாளே போற்றி!
ஜகம் புகழும் ஜகந்நாதா போற்றி!
செண்பகவல்லித் தாயே போற்றி!!

*****

கும்பகோணத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. நாதன் கோயில் என்றால் தான் எல்லோருக்கும் தெரியும்.

பாற்கடலில் எம்பெருமானின் பாதம் பற்றிக் கொண்டிருந்த பிராட்டிக்கு தேஜஸ் பொருந்திய பெருமாளின் திருமார்பு கண்டு, அவ்விடத்திலேயே எப்போதும் நித்யவாசம் செய்ய வேண்டுமென எண்ணங் கொண்டு, செண்பகாரண்யம் என்ற இவ்விடத்தில் கடுந்தவம் செய்ய, தேவியின் எண்ணப்படியே நெஞ்சில் திருமகளை ஏற்றுக்கொண்டார்.

கிழக்கு நோக்கித் தவஞ் செய்த நிலையில் இருந்த பிராட்டியை பெருமாள் எதிர்கொண்டு ஏற்றுக்கொண்டமையால் இத்திருத்தலத்தில் பெருமாள் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். செண்பகாரண்யத்தில் தேவி தவம் செய்தபடியால் செண்பகவல்லி என்ற திருநாமம். உற்சவரின் பெயர் ஜெகந்நாதன், எனவே தான் உற்சவரின் பெயரைக் கொண்டே இவ்வூர் நாதன் கோயில் என்று பெயர் பெற்றது.

சிவபெருமானின் வாகனமான நந்தி, ஒரு சமயம் மகாவிஷ்ணுவைக் காண வைகுண்டம் வந்தபோது, வெளியில் காவலில் நின்ற துவாரகபாலகர்களைக் கேளாது உள்ளே நுழைய முயன்ற போது, துவாரகபாலகர்கள் தடுத்தும், அவர்கள் அனுமதி பெறாது செல்ல முயன்ற காரணத்தால், “காரணம் காணா அளவுக்கு” உன் உடம்பில் உஷ்ணம் பற்றி எரிந்து கொண்டிருக்கக் கடவது என்று சபித்துத் திருப்பி அனுப்பினர். அதனால் பெரும் அவதியுற்ற நந்தி தேவன் தன் நிலையைச் சிவனிடம் உரைக்க, விஷ்ணுவின் துவாரகபாலகர்கள் இட்ட சாபம் விஷ்ணுவின் சாபத்திற்குச் சமமானதாகும். இதைத் தீர்க்க ஒரே வழி, யாரும் காணவியலா மகா விஷ்ணுவின் நெஞ்சில் இடம் பிடிக்கத் திருமகள் தவம் புரிந்த செண்பகாரண்யம் தான், காரணம் காணா இவ்வியாதியைப் போக்க, நீ தவமிருக்கச் சிறந்த இடமாகும். எனவே, நீ அங்கு சென்று திருமாலைக் குறித்துத் தவமிருந்து சாபத்தைப் போக்கிக் கொள் என்று கூற, அதன்படி இங்கே வந்து நந்தி தேவர் தவம் செய்து சாபம் நீங்கப் பெற்றார், அப்போது தனக்குக் காட்சி தந்த திருமாலிடம் இத்தலம் எனது பெயராலேயே விளங்கிட வேண்டும் என்று விரும்பிக் கேட்க, நந்திபுர விண்ணகரமாயிற்று.

தற்போது இது ஒரு சிறு கிராமமாகத் திகழ்ந்தாலும், இந்த இடம் ஒரு காலத்தில் விண்ணை முட்டும் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் சூழ இருந்ததாகவும், சோழ மன்னர்களின்



தலைநகரமாகவும் விளங்கியது என்பதைக் கல்கி அவர்கள் எழுதிய பொன்னியின் செல்வன் நூலால் அறியலாம்.

இப்பகுதியின் மண் மிகப் பிரசித்தி பெற்றது. இந்த மண்ணால் செய்யப்பட்ட மண்பாண்டங்கள் இப்பகுதியில் மிகவும் பெயர் பெற்றவை. மண்பாண்டங்கள் செய்வது இப்பகுதியின் குடிசைத் தொழிலாகும்.

திருமங்கையாழ்வாரால் மட்டும் 10 பாசுரங்கள் பாடப்பட்ட இத்தலத்தில் பெருமாள் மேற்கு நோக்கி இருப்பதற்கான காரணத்தை இத்தல வரலாற்றில் முன் கண்டோம். ஆனால், அதற்கு இன்னொரு கதையும் சொல்லப்படுகிறது சிபிச் சக்கரவர்த்தி, புறாவுக்கு அடைக்கலம் கொடுத்து, அந்தப் புறாவின் எடைக்குச் சமமான சதையை தன் உடம்பில் இருந்து அறுத்து வைத்தும், நிறையாமல், இறுதியில் தானே தராசில் அமர்ந்தார். இந்த அரிய நிகழ்வை – தர்மத்தின் சிறந்த நிகழ்ச்சியினைக் காணவே, கிழக்கு நோக்கி இருந்த பெருமாள் மேற்கு நோக்கித் திரும்பி விட்டதாகக் கூறுவர்.

சிவனின் நந்தி – இவ்விடத்தே திருமாலை எண்ணித் தவம் இருந்து சாப விமோசனம் பெற்றதும், நந்தியின் பெயராலேயே இத்தலப் பெயர் அமையத் திருமால் அருளியதும், சைவ வைணவ மத ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

மூலவர்: நாதநாதன், விண்ணகரப் பெருமாள், மேற்கு நோக்கிய வீற்றிருந்த திருக்கோலம். உற்சவர்: ஜெகந்நாதன். தாயார்: செண்பகவல்லி.

விஜயரங்க சொக்கப்ப நாயக்கர் எனும் நாயக்க மன்னர் தன் தாயாருக்கு இருந்த "காரணம் காண இயலா" (குணம நோய் மாதிரியான) நோயை நீக்க வேண்டி, இத்தலப் பெருமானிடம் வேண்டிட, அவ்விதமே நோய் நீங்கியதால் அவர் இக்கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்தார்.

பெருமாள் தாயார் அருள் வேண்டி நாமும் நோயற்ற நல்வாழ்வு பெற்றுச் சிறக்க இத்தலத் தாயாரையும் பெருமாளையும் சேவித்துப் பயன் பெறுவோம்.

*****

# திருவெள்ளியங்குடி - [22]

வெள்ளியங்குடி உறை ராமனே போற்றி!
கோல வில்லி ராமன் கோயிலே போற்றி!
கண்களுக்கு ஒளி தருவாய் போற்றி!
கண் நோய்கள் போக்கி அருள்வாய் போற்றி!
மரகத வல்லித் தாயே போற்றி! போற்றி!

*****

இது ஒரு மிகச் சிறிய கிராமம். தங்கும் வசதிகள் இல்லை. கும்பகோணம் அல்லது ஆடுதுறையில் தங்கி இருந்து, இங்கு வந்து சேவித்துச் செல்லலாம். இத்தலம் மிகவும் பழமை வாய்ந்தது. நவக்கிரகங்களில் சுக்கிரனோடு தொடர்பு கொண்டது. வாமன அவதாரக் கதையுடன் இணைந்து செல்லக் கூடியது.

மகா விஷ்ணு வாமன அவதாரங் கொண்டு மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்க, இதுவென்ன பிரமாதம், இந்தா பிடியும் எனத் தாரை வார்த்துக் கொடுத்தான். நில உலகே தனக்கடிமை என எண்ணிக் கொண்டிருந்த மாவலி, அப்படித் தாரை வார்த்துக் கொடுக்கும் போது, அங்கிருந்த அசுரகுல குருவான சுக்கிர பகவான், வந்திருப்பது யார் என்று உண்மை நிலை புரியாது மன்னன் இவ்வாறு செய்கின்றானே என்றெண்ணி, தாரை வார்க்கும் செம்புக் குடத்தின் துவாரத்தை ஒரு வண்டுப் பூச்சியாக உருவெடுத்து அடைக்க, ஏதோ அடைத்திருப்பதையறிந்த பெருமாள் ஒரு சிறு குச்சியால் அந்தத் துவாரம் வழியாகக் குத்த, ஒரு கண்ணினை இழந்த ஒற்றைக் கண்ணன் ஆனான் சுக்கிரன்.



இழந்த கண் பார்வையை மீண்டும் பெற்றிட, சுக்கிரன் இவ்விடத்தே தவம் செய்து திருமாலை வேண்ட, "வெள்ளியார் வணங்க விரைந்து அருள் செய்தான்". எம்பெருமான். அன்று சுக்கிரனுக்குக் கொடுக்கப்பட்ட ஒளி, இப்போதும் தூண்டா விளக்காக (நேத்திர தீபம்) கருவறை அருகே இரவும், பகலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது. சுக்கிரனுக்குப் பெருமாள் தந்த ஒளி, இன்றும், இந்தத் தீபத்தில் உயிர்ப்புடன் இருப்பதாக நம்பப்படுகிறது. கண் நோய்கள் தீரவும், கண் பார்வை குணமாகவும் பக்தர்கள் இங்கு வந்து பெருமாளை வேண்டி நலம் பெறலாம்.

சுக்கிர பகவான் வணங்கியதால், இது சுக்கிரபுரி ஆயிற்று. சுக்கிரனுக்குத் தமிழில் வெள்ளி என்ற பெயர். எனவே, இத்திருத்தலம் திருவெள்ளியங்குடி ஆயிற்று. தஞ்சை மாவட்டத்தில் உள்ள வைணவ நவக்கிரகத் தலங்களில் இது சுக்கிரனுக்கான திருக்கோயில் ஆகும்.

சுக்கிரன் அசுர குலக் குரு, அவருக்கு மட்டுமின்றி அசுரகுலச் சிற்பிக்கும் இத்தலப் பெருமான் கோலவில்லி ராமராகக் காட்சி தந்தார். தேவர்களின் சிற்பியான விஸ்வகர்மாவுக்குக் கிடைத்த பாக்கியம் போல, தனக்கும் கிடைக்க வேண்டி அசுரர்களின் சிற்பியான மயன் திருமாலை வேண்டித் தவமிருக்க, இறைவன் அவனுக்குச் சங்கு சக்கரதாரியாக மகா விஷ்ணு கோலத்தில் காட்சி தந்தார். ஆனால், அவனோ, தனக்கு இக்காட்சி வேண்டாம். இராமாவதாரத் திருக்கோலத்தையே தான் தரிசிக்க விரும்புவதாகக் கூற, உடனே, விஷ்ணு தன் கரத்தில் இருந்த சங்கு சக்கரங்களை கருடனிடம் கொடுத்து விட்டு, வில், அம்புகளுடன் அலங்காரக் கோலத்துடன் கோலவில் ராமனாகக் காட்சி தந்தார். எனவேதான், இத்தலப் பெருமானுக்கு கோலவில்லி ராமன் எனும் பெயர் ஏற்பட்டது.

மயனுக்குக் கோலவில்லி ராமனாகக் காட்சி தர வேண்டி. தன் கைகளில் இருந்த சங்கு சக்கரத்தைப் பெருமாள் கருடாழ்வாரிடம் கொடுத்தார் அல்லவா? அதை கருடாழ்வார் எப்படிப் பெற்றுக் கொண்டார் தெரியுமா? அமர்ந்த நிலையிலும் இல்லாமல், நின்ற நிலையிலும் இல்லாமல் எழுகின்ற ஒரு நிலையில் பெருமாளிடம் இருந்து அந்த ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டாராம். இங்கு கருடாழ்வார் 4 கரங்களுடன் கைகளில் சங்கு சக்கரங்களுடன் காட்சி தருவது போல உள்ளது வேறு எந்த ஒரு தலத்திலும் இல்லை.

இங்கு கோயிலில் கருங்கல் தரையில் செங்கதலி என்னும் செவ்வாழை முளைத்து. வருடத்திற்கு ஒரு தார் போட்டு வாழையடி வாழையாக இருந்து வரும் காட்சியை இன்றும் காணலாம். இவ்வாழையே இத்தல விருட்சமாகவும் ஆகிறது!

(பயணம் தொடரும்)

# தஞ்சாவூர் அழகு அகாடமி

## ஆளுமை மேம்பாட்டு பயிற்சி வகுப்பு 2025




தஞ்சாவூர் அழகு அகாடமி லைப் ஸ்கில் ட்ரெய்னிங் சென்டரின் சேர்மன் திரு. அழகு அழகப்பன் அவர்களின் சீரிய முயற்சியில் காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை (KNSC) மற்றும் நகரத்தார் வேர்கள் அறக்கட்டளை இணைந்து நம் நகரத்தார் மாணவ மாணவியர் 71 பேருக்கு ஆளுமை மேம்பாட்டு பயிற்சி வகுப்பு Personality development program ஏப்ரல் மாதத்தில் 27, 28, & 29 தேதிகளில் மூன்று தினங்கள் தஞ்சாவூர் அழகு அகாடமி லைப் ஸ்கில் ட்ரெய்னிங் சென்டரில் தங்கி இருந்து கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்நிகழ்ச்சியில் 12 வயது முதல் 16 வயது நகரத்தார் மாணவ மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் நகரத்தார் வேர்கள் அறக்கட்டளை புரவலர் பத்மபூஷன் திரு. M.V.சுப்பையா செட்டியார் முன்னிலையில், M.RM.RM கல்ச்சுரல் பவுண்டேஷன், நிறுவனர், திருமதி விசாலாட்சி ராமசாமி ஆச்சி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்கள். காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை சார்பாக தலைவர் திரு. CT. சொக்கலிங்கம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

அழகு அகாடமி சேர்மன் திரு. அழகு. அழகப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார். திருமதி விசாலாட்சி ராமசாமி ஆச்சி அவர்களின் அனுபவத்தை மாணவ மாணவியருக்கு எடுத்துக் கூறி சிறப்புரை ஆற்றினார்.

நகரத்தார் வேர்கள் அறக்கட்டளை CT.RM.CT. வள்ளி ஆச்சியும், ஆத்தங்குடி வணக்கம் சுப்பிரமணியம் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள். விருந்தினராக வந்த அனைவருக்கும் திரு. அழகு அழகப்பன் அவர்கள் சிறப்பு செய்தார். Dr.சிவகாமி வள்ளியப்பன், Principal, Blossom Bluebells, தஞ்சாவூர், நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கி, மூன்று நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சி நிரலை எடுத்துக் கூறினார். காரைக்குடி நகரத்தார் சங்கத்தின் செயலாளர் திரு. சபா. பழனியப்பன் அவர்கள் நன்றி உரை வழங்கினார். அதன் பின் முதல் நாள் நிகழ்ச்சிகள் துவங்கியது.

முதல் நாள் நிகழ்வில் திரு அழகு அழகப்பன் அவர்கள் Effective Communication பற்றியும், திருமதி. அழகம்மை பழனியப்பன் (vice president Temenos) அவர்கள் நகரத்தார் Business ethics and Family Value பற்றியும், Dr. சிவகாமி வள்ளியப்பன் அவர்கள் Creative Thinking பற்றியும் மாணவ மாணவியருக்குக் கற்றுக் கொடுத்தார்கள். அன்று மாலை மாணவ மாணவியருக்கு விளையாட்டுடன் கலை நிகழ்ச்சியும் இனிதே நடைபெற்றது.

இரண்டாம் நாள் காலை 6:00 மணி அளவில் Zumba Dance உடன் நிகழ்ச்சி தொடங்கி Dr.செந்தில்குமார், Chairman, Helikx Open School, Salem, Special Faculty – மாணவ மாணவியர்களுக்கு Interpersonal skill, Problem Solving மற்றும் Emotional Intelligence ஆகிய தலைப்புக்களைக் கற்றுக் கொடுத்தார்.

திருமதி கவிதா உடையப்பன், Young Adults Workshop, Facilitator நகரத்தார் History and Roots பற்றியும் திருமதி N.A. சிந்து மீனாட்சி, Architect, ADSAIN ARCHITECTS, Chettinad Architecture, Culture and Heritage பற்றியும் கற்றுக் கொடுத்தார்கள். அன்று மாலை கலை நிகழ்ச்சி



# காஞ்சி சங்கர மடத்திற்கு இளைய மடாதிபதி நியமனம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் இளைய மடாதிபதியாக, ஆந்திர மாநிலம் துனி நகரை சேர்ந்த, சத்ய வெங்கட் சூர்ய சுப்ரமண்ய கணேச சர்மா திராவிட் நியமிக்கப் பெற்றுள்ளார். 30-ஆம் தேதி, அட்சய திருதியை அன்று, சங்கராச்சாரியார் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடத்தின் இளைய மடாதிபதியாக, சன்யாச தீட்சை வழங்கி ஆசி வழங்கினார்கள். இளைய மடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள, கணேச சர்மா, ஆந்திர மாநிலம் அன்னவரத்தில் ரிக்வேதம் முழுதும் படித்தவர். அதன்பின், தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் மாவட்டம் பசாராவில் உள்ள ஸ்ரீ ஞான சரஸ்வதி தேவஸ்தானத்தில் சேவை புரிந்தார். 2006-ல், வேதபாடங்களை கற்கத் துவங்கிய காலம் முதலே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் பூரண அருளாசியை பெற்றார். இளைய மடாதிபதியை நமது செட்டிநாடு வரவேற்று வணங்கி மகிழ்கிறது.

மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

மூன்றாம் நாள் நிகழ்வாக காலை 6:00 மணிக்கு மாணவர்களுக்கு Yoga பயிற்சியும், காலை 9 மணி அளவில் திருமதி Dr.மேரி சாந்தி, Principal, Blossom Public school, Time Management பற்றியும் திருமதி Dr. சிவகாமி வள்ளியப்பன் நகரத்தார்களின் பாரம்பரிய உணவு முறையும் அதன் செயல் விளக்கத்தையும் மாணவர்கள் பங்கேற்க கற்றுக் கொடுத்தார்கள். அன்று மதியம் மாணவர்களின் பெற்றோர்களும் ஏற்பாடு செய்து இருந்த மதிய விருந்திலும் நிறைவு விழாவிலும் கலந்து கொண்டார்கள்.

நிறைவு விழாவிற்கு திரு. PL.A. சிதம்பரம் செட்டியார், திருமதி அலமேலு ஆட்சி இருவரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நல்ல அறிவுரை வழங்கிக் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் Alagu Academy சான்றிதழும், குரூப் போட்டோவும் வழங்கினார்கள்.

மூன்று நாட்களுக்கும் மாணவர்கள் தங்குவதற்கும், நல்ல உணவும் அழகு அகாடமி நிர்வாகம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். மாணவர்களும் மூன்று நாள் அனுபவத்தை எல்லோரிடமும் மிகுந்த ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டார்கள். மற்றும் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் மீண்டும் இது போல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தருமாறு அழகு அழகப்பன் அவர்களிடமும், அழகு அகாடமி நிவாகத்திடமும், காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை மற்றும் நகரத்தார் அறக்கட்டளையிடமும் கேட்டுக் கொண்டார்கள்.

காரைக்குடி நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. RM. ராமசாமி அவர்கள், சிறப்பாக ஏற்பாடு செய்த அழகு அகாடமி நிர்வாகத்திற்கும் திரு. அழகு அழகப்பன் அவர்களுக்கும் மற்றும் இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த சாலா கணேஷ், உமா சொக்கலிங்கம், MT. பழனியப்பன், கல்யாணி சபா பழனியப்பன், MT. சொக்கலிங்கம், அழகு பழனியப்பன் ஆகியோர் மாணவர்கள் கூடவே தங்கி அவர்களுக்கு வேண்டியதை ஏற்பாடு செய்து கொடுத்ததை நினைவுகூர்ந்து நன்றியுரை வழங்கினார். அன்று மாலை அனைவரும் தஞ்சை பெரிய கோவில் சென்று வர ஏற்பாடு செய்து விழா சிறப்பாக நிறைவுபெற்றது. ♦






# நன்றியும் பாராட்டும்



வாரணாசி அருள்மிகு விஸ்வநாதர் திருக்கோவில் டிரஸ்ட்டின், தலைமை நிர்வாக அதிகாரி, திரு. விஸ்வபூஷன் மிஸ்ரா. பி.சி.எஸ் அவர்களுக்கு, கோவிலூர் ஆண்டவர் திருமண மண்டபத்தில், 'நன்றியும், பாராட்டும்' தெரிவிக்கும் நிகழ்வு 20.4.2025, ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. கோவிலூர் ஆதீனம், சீர்வளர் சீர் நாராயண தேசிக சுவாமிகளும்,பழனி சாதுசுவாமிகள் மடாலய சண்முகானந்த சுவாமிகளும் ஆசியுரை வழங்கினார்கள். நீதி அரசர் டத்தோ ஸ்ரீ டாக்டர். M.சொக்கலிங்கம் அவர்கள் தலைமை உரை ஆற்ற, குழந்தை கவிஞர். திரு. செல்லகணபதி, சிங்கப்பூர், ஆடிட்டர் திரு. R.தினகரன், கோவை, நகரத்தார் சங்க தலைவர், ஆடிட்டர் திரு. சுந்தரேசன் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். மேற்படி நிகழ்வில் காசி விஸ்வநாதர் கோவில் தலைமை நிர்வாக அதிகாரி திரு.விஷ்வபூஷன் மிஸ்ரா நீதி அரசர் அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றார். நிகழ்வில் பெருமளவில் நகரத்தார்,ஆண்கள்,பெண்கள் மற்றும் ஏராளமானோர் கலந்து கொள்ள நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

– அண.வயிரவன், கருங்குளம்.

# ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்





ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பாக 11-4-2025 வெள்ளிக் கிழமை 35-ஆம் ஆண்டு பங்குனி உத்திரத்தை முன்னிட்டு செட்டிநாட்டு பேலஸிலிருந்து திண்டல்மலை வேலாயுதசாமிக்கு வேல் மற்றும் சக்கரக்காவடி 16-ம், பால், பன்னீர், சந்தன குடங்கள் 30-ம் எடுத்து வரப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டது. காலை மற்றும் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது.

27 கிளைகள், 36 வருட அனுபவம்



சுற்றுலாவா யோசிக்கவே வேண்டாம்

Incredible India

www.incredibleindia.org

**ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி**

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS

www.srimurugantravel.com

- 10 நாள் ஆக்ரா-காசி அயோத்தியா — மாதந்தோறும் 9,21 — Rs. 13500/-
- 13 நாள் டெல்லி-ஆக்ரா அயோத்தியா — மாதந்தோறும் 6,18,27 — Rs. 17500/-
- 6 நாள் ஸ்ரீரடி பண்டரிபுரம் — மாதந்தோறும் 1,8,15,22 — Rs. 8000/-
- 10 நாள் குஜராத்-துவாரகா பட்டேல்சிலை — மாதந்தோறும் 17 — Rs. 17000/-
- 17 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 30000/-
- 13 நாள் பத்ரிநாத் கேதார்நாத் — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 25000/-
- 14 நாள் முக்திநாத்-நேபாள் கொல்கத்தா — மாதந்தோறும் 18 — Rs. 27000/-
- 15 நாள் நவஜோதிர்லிங்கம் — மாதந்தோறும் 18 — Rs. 20000/-
- 10 நாள் சிம்லா-மணாலி ஆக்ரா — ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 — Rs. 18000/-
- 13 நாள் அமர்நாத் — ஜூலை முதல் — Rs. 16000/-

- 2 நாள் மும்பை-ஸ்ரீரடி — தினந்தோறும் — Rs. 14990/-
- 4 நாள் கோவா SPL — Rs. 24990/-
- 4 நாள் டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் — வாரந்தோறும் வியாழன் — Rs. 26990/-
- 5 நாள் அந்தமான் ஹேவலோக் — தினந்தோறும் — Rs. 29990/-
- 5 நாள் காஷ்மீர் குல்மார்க் — வாரந்தோறும் புதன் — Rs. 44990/-
- 5 நாள் டார்ஜலிங் கேங்டாக் — வாரந்தோறும் புதன் — Rs. 39990/-
- 7 நாள் NORTH EAST — வாரந்தோறும் திங்கள் — Rs. 44990/-
- 3 நாள் பூரி புவனேஸ்வர் — வாரந்தோறும் வெள்ளி — Rs. 24990/-
- 7 நாள் குஜராத் துவாரகா — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 35990/-

- 6 நாள் காசி அயோத்தியா — Rs. 34990/-
- 8 நாள் பத்ரி-கேதார் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 44990/-
- 12 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — வாரந்தோறும் திங்கள் — Rs. 54990/-
- 6 நாள் முக்திநாத் நேபாள் — ஏப்ரல் 1,18 மே 1,10,18 — Rs. 29990/-
- 6 நாள் பூடான் SPL — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 44990/-
- 8 நாள் காஷ்மீர் லே-லடாக் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 64990/-
- 5 நாள் சிம்லா-குளு மணாலி — வாரந்தோறும் புதன் — Rs. 27990/-
- 5 நாள் லே-லடாக் — வாரந்தோறும் — Rs. 54990/-
- 6 நாள் நைனிட்டால் முசௌரி-கார்பெட் — வாரந்தோறும் புதன் — Rs. 34990/-

- 6 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 84,990/-
- 5 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 74,990/-
- 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 1,34,990/-
- 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 94,990/-
- 5 நாள் பாங்காக் பட்டாயா Standard — Rs. 52,000/-
- 4 நாள் பாங்காக் பட்டாயா Basic — Rs. 37,990/-
- 5 நாள் புக்கட் கராபி — Rs. 64,990/-
- 8 நாள் Exclusive தாய்லாந்து — Rs. 94,990/-
- 4 நாள் மாலத்தீவு Special — Rs. 59,990/-

- 5 நாள் ஸ்ரீலங்கா Special — Rs. 44,990/-
- 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா — Rs. 64,990/-
- 5 நாள் இந்தோனேசியா பாலி — Rs. 64,990/-
- 6 நாள் வியட்நாம் கம்போடியா கலாங் விரிகுடா — Rs. 94,990/-
- 7 நாள் Exclusive சீனா — Rs. 1,54,000/-
- 10 நாள் ஹாங்காங் மக்காவ் — Rs. 1,34,990/-
- 6 நாள் ரஷ்யா Special — Rs. 1,34,990/-
- 4 நாள் எகிப்து Special — Rs. 1,29,990/-
- 8 நாள் எகிப்து Cruise — Rs. 1,65,990/-

- 5 நாள் துபாய் அபுதாபி — Rs. 74,990/-
- 7 நாள் சௌத்கொரியா — Rs. 1,69,990/-
- 7 நாள் கென்யா — Rs. 1,59,990/-
- 9 நாள் ஆஸ்திரேலியா — Rs. 2,94,990/-
- 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து — Rs. 5,29,990/-
- 9 நாள் ஜப்பான் — Rs. 2,94,990/-
- 12 நாள் ஈரோப் Special — Rs. 2,74,990/-
- 4 நாள் உஸ்பெகிஸ்தான் — Rs. 54,990/-
- 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி — Rs. 74,990/-

## அதிரடி ஆஃபர்

- 12 நாள் ஈரோப் SPL — மே 12, ஜூன் 12, ஜூலை 12
- 10 நாள் ஸ்காண்டிநேவியா பின்லாந்து — செப். 17
- 7 நாள் ஜப்பான் — நவம்பர் 20
- 5 நாள் துபாய் அபுதாபி — வாரந்தோறும் வியாழன்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416



PALANI

HOTEL PL GRAND

PLEASANT STAY



KARAIKUDI

98421 62416 / 97918 48265

www.hotelplgrand.com

# 7 உங்களுடன் உரையாடுங்கள்



எம். சிதம்பரம்

## அறிவோம் ஆங்கிலம்...

பல மொழிகளைப் போல் ஆங்கிலமும் அற்புதமான ஒரு மொழியே. அதற்கென தனி விசேஷங்களும், குணாதிசயங்களும் உண்டு. அவற்றுள் மிக மிக வித்தியாசமான மற்றும் முக்கியமான ஒன்றினைத் தான் நாம் இக்கட்டுரையில் அலசி ஆராயப் போகிறோம்.

Knowledge, Wrong, Tsunami, Psychology, Mnemonics, Hour, Honesty, Government, Country மற்றும் Car போன்ற வார்த்தைகளில் ஒரு ஒற்றுமை உள்ளது. அது என்னவாக இருக்கும்? அது சற்று நேரம் ரகசியமாக இருந்துவிட்டு போகட்டுமே.

ஒரு பள்ளியில் ஆய்வு நடந்து கொண்டிருந்தது. ஆங்கில வகுப்பில் நுழைந்த ஒரு ஆய்வாளர் அந்த வகுப்பு ஆசிரியரிடம் மாணவர்களை நான் சோதித்து பார்க்க வேண்டும். எனவே, அவர்களிடம் கேள்வி கேளுங்கள் என்றார். ஆசிரியரும் உடனே ஒரு மாணவனிடம், “What’s the spelling of க்னாலெட்ஜ் (knowledge) என கேட்டார். சட்டென ஒரு மாணவன் எழுந்து, “I don’t க்னோ (know) madam”, என்றான். வெகுண்டு எழுந்த ஆய்வாளரோ, “All of you are speaking வரங்ங் (wrong) English, என்றார்.

இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும் ஆங்கிலத்திற்கான விசேஷமான குணாதிசயம் என்னவென்று. ஆங்கிலத்தில் சில வார்த்தைகளில் சில எழுத்துக்கள் silent, அதாவது அவ் எழுத்துக்களை நாம் உச்சரிக்கவே கூடாது.அந்த எழுத்தின் ஒலி கேட்போருக்கு கேட்கவே கூடாது. உதாரணத்திற்கு knowledge மற்றும் know-வில் K silent. Wrong-ல் W silent. Tsunami-யில் T silent. CAR-லே R silent, Psychology-யில் P silent. Mnemonics-யில் M silent. Government-ல் N silent. Country-யில் O silent. Hour மற்றும் honest-ல் H silent. மேற்கூறிய அத்துணை எழுத்துக்களும் எப்பொழுதும் silent கிடையாது. சில இடங்களில் தான். பல இடங்களில் அவற்றை நாம் உச்சரிக்கத்தான் வேண்டும். Horse-ல் H-ஐ உச்சரிக்க வேண்டும். Horse மற்றும் honest-ல் O silent இல்லை. O-வை உச்சரிக்கத்தான் வேண்டும்.

ஆங்கிலத்தில் இது போன்ற அரிய பல நுணுக்கங்களை அறிந்து கொண்டு, அதில் பாண்டித்துவமும் பெற்றால் ஆங்கிலம் பேசுவது என்பது நமக்கு கை வந்த கலையாகி விடும்.

ஆங்கிலத்தில் சரளமாக பேசுவது என்பது அல்வா சாப்பிடுவது மாதிரி. அதுவும் பாதாம் அல்வா சாப்பிடுவது போல். இனிமையாகவும் இருக்கும், எளிதாகவும் இருக்கும். அது எப்படி சாத்தியம் என்று தானே கேட்கிறீர்கள்?

இந்த 5 பாயின்ட் பார்முலாவை கடைபிடிக்க வேண்டும்.

1) நீங்கள் ஆங்கிலத்தில் பேசும் போது இதுவரை நீங்கள் பயன்படுத்திய வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தாதீர்கள். தினம் ஒரு புது வார்த்தையாவது கற்றுக் கொள்ளுங்கள்... எங்கிருந்து கற்றுக் கொள்வது? ஆங்கில செய்தி தாள்கள், நூல்கள், ஆங்கில படங்கள், வீடியோக்கள், வர்ணனைகள், சிறந்த பேச்சாளர்கள் ஆகியோரை கேட்கும் போது கற்றுக் கொள்ளலாம்.

2) அடுத்தது Spelling.. ஒவ்வொரு புது வார்த்தை நமக்கு அறிமுகமாகும் பொழுதும், அவ்வார்த்தையின் சரியான ஸ்பெல்லிங்கை நாம்அறிந்து கொள்ள வேண்டும். பல வார்த்தைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஸ்பெல்லிங் இருக்கும். உதாரணத்திற்கு their, there. இரண்டிற்கும் வேறு வேறு ஸ்பெல்லிங்.

3) அடுத்து உச்சரிப்பு. நிறைய வார்த்தைகளுக்கு இரண்டு அல்லது மூன்று உச்சரிப்புகள் உண்டு. உதாரணத்திற்கு Content. இதற்கு இரண்டு உச்சரிப்புகள் உண்டு. கண்டென்ட் மற்றும் க்கோண்டென்ட். எனவே ஒவ்வொரு புதிய வார்த்தைக்கும் சரியான உச்சரிப்பை தெரிந்து கொள்ளுங்கள்.

4) அடுத்து அந்த புதிய வார்த்தையின் சரியான அர்த்தத்தை தெரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலம், நாம் ஏற்கனவே கூறியது போல் ஒரு வித்தியாசமான, சுவாரஸ்யமான மொழி. ஒரே வார்த்தைக்கு பல ஸ்பெல்லிங், பல உச்சரிப்பு, பல அர்த்தங்கள் உண்டு. content கண்டெண்ட் என்றால் subject matter என்று பொருள். க்கோன்டெட் என்றால் திருப்தி என்று பொருள். ஒரே வார்த்தை இரு வேறு இடங்களில் இரு வேறு அர்த்தங்களை குறிக்கும். உதாரணத்திற்கு Pretty என்றால் அழகு என்று பொருள். Pretty sure என நாம் சொல்லும் பொழுது அங்கு அழகை குறிக்காது. அங்கு நிச்சயமாக என் பொருள் வரும்.

மேற்கூறிய நான்கு விஷயங்களுக்கும் அத்தியாவசிய தேவை ஆங்கில அகராதி.

5) அடுத்தது Usage - அதாவது பயன்பாடு. எதையுமே பயன்படுத்தாமல் விட்டால் அது பாழாகி விடும். வலது கை தனை மிக சாதுர்யமாக லாவகமாக பயன்படுத்தும் நம்மால் இடது கை தனை அவ்வாறு ஏன் பயன்படுத்த இயலவில்லை. ஆனால் இடக்கை பழக்கம் உள்ளவர்கள் மட்டும் இடக்கையையே பயன்படுத்துவதால் அவர்களால் லாவகமாக இடது கையை பயன்படுத்த முடிகிறது. அதே போல் தான் ஒரு மொழியும் அதன் வார்த்தைகளும். இப்படி நாம் தினந்தோறும் கற்கும் ஒவ்வொரு புதிய வார்த்தையையும் அடிக்கடி பயன்படுத்தினால் அவ்வார்த்தைகள் நம் வசப்படும். நாமும் ஆங்கிலம் பேசும் கலையில் உன்னத இடத்தை அடைந்து விடுவோம்.

# தொழில் தொடங்கலாம் வாங்க 77



சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

# கடைகளில் திருட்டுகளைத் தடுக்க...






ஒவ்வொரு சில்லறை விற்பனைக் கடையும் சமாளிக்க முடியாத பிரச்சனை என்னவென்றால் கடையில் நடக்கும் திருட்டுகள், அது வேலை செய்பவர்கள் செய்யும் திருட்டுகள், கடையில் பொருட்கள் வாங்க வருபவர்கள் செய்யும் திருட்டுகள். இதை தடுப்பது என்பது சிறிய விற்பனை கடைகளுக்கு ஒரு பெரிய பிரச்சனை.

டெண்டர்கட்ஸ் என்ற சுகாதாரமான இறைச்சிக் கடைகளை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் ஸ்டார்ட் அப் கம்பெனியின் இன்னொரு ஸ்டார்ட் அப் கம்பெனி தான் விசு.ஏஐ (visu.ai). டெண்டர்கட்ஸை ஒரு கடையிலிருந்து 60 க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களாக மாற்றியதில் பல அனுபவங்கள் மற்றும் அதன் நியாயமான சவால்களை எதிர் கொண்டது, அவற்றில் மிகப்பெரியது உள் திருட்டு மற்றும் திருட்டு. இதற்கு மார்க்கெட்டில் பயனுள்ள தீர்வுகள் எதுவும் இல்லாததால், டெண்டர்கட்ஸ் கம்பெனி நிறுவனர்களே ஒரு தீர்வை கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள்.

இறைச்சி விநியோக ஸ்டார்ட்அப்பில் பெற்ற அனுபவங்களால் ஈர்க்கப்பட்டு, Visu.ai–ஐ தொடங்கப்பட்டது. விசு.ஏஐ என்பது சில்லறை விற்பனை கடைகளில் பாதுகாப்பில் கவனம் செலுத்தும் ஒரு ஆர்ட்டிபிஷியல் இண்டெலிஜென்ஸ் மூலம் இயக்கப்படும் தளமாகும்.

சில்லறை விற்பனைக் கடைகளுக்கு 24 மணி நேரமும் கண்காணிப்பை வழங்க இந்த தளம் மேம்பட்ட கம்ப்யூட்டர் விஷன்–ஐ பயன்படுத்துகிறது. அதன் AI மூலம் இயங்கும் கருவிகளான கேஷியர் கண்காணிப்பு, மற்றும் வாடிக்கையாளர் கண்காணிப்பு, சந்தேகத்திற்கிடமான சைகைகள், கடைத் திருட்டு மற்றும் உள் மோசடியைக் கண்டறிய CCTV அமைப்புகளுடன் தடையின்றி ஒருங்கிணைக்கிறது.

இந்த அமைப்பு காட்சிகளை மட்டும் பதிவு செய்வதில்லை, இது பணம் கையாளுதல், பொருட்களின் நகர்வுகள் மற்றும் திருட்டு பேட்டர்ன்களை தீவிரமாகக் கண்காணிக்கிறது. இந்த ஸ்டார்ட் அப்–ன் கூற்றுப்படி, இந்த நிகழ்நேர கண்காணிப்பு, திருட்டை 70% வரை குறைக்கும் என்கிறார்கள்..

### கேஷியர் மோசடியை நிறுத்துங்கள்.

இழப்புகளைக் குறைக்கவும், லாபத்தை அதிகரிக்கவும் கேஷியர் மோசடியை நிறுத்த வேண்டும். இந்த ஸ்டார்ட் அப்பின் AI– மூலம் இயங்கும் தொழில்நுட்பம் மோசடியை 90% வரை குறைக்கிறது, இறுதி மன அமைதிக்காக 24/7 POS கண்காணிப்பை வழங்குகிறது.

ஆபத்துக்களை குறைக்க நடத்தைகள் மற்றும் திருட்டு முறைகளைக் கண்காணிக்கும். பணம் கையாளுதல், பொருட்களின் நகர்வுகளைக் கண்காணிக்கிறது.

### வாடிக்கையாளர் திருட்டு

திருட்டு நடக்கும்போதே உடனடியாகக் கண்டறிந்து நிறுத்துகிறது. இவர்களின் AI தீர்வு கடையில் திருடுபவர்களை நிகழ்நேரத்தில் கண்டறிந்து, முக அங்கீகாரம் மூலம் மீண்டும் மீண்டும் குற்றவாளிகளைத் தடுக்கிறது, திருட்டை 70% வரை குறைத்து கடைகளின் லாபத்தை அதிகரிக்கிறது.

மீண்டும் மீண்டும் குற்றங்கள் செய்பவர்களை நிகழ்நேரத்தில் கண்காணிக்கிறது. சந்தேகத்திற்குரிய சைகைகளைக் கண்டறிகிறது திருட்டைக் குறிக்கக்கூடிய சந்தேகத்திற்கிடமான சைகைகள் மற்றும் அசைவுகளை உடனடியாக அடையாளம் காட்டுகிறது. இவர்களின் AI மூலம் செயல்படும் மேம்படுத்தப்பட்ட கம்ப்யூட்டர் விஷன் அமைப்புடன் ஏற்கனவே உள்ள கேமராக்களுடன் தடையின்றி செயல்படுகிறது.

### இவர்களை தொடர்பு கொள்ள

இவர்களின் இணையதள முகவரி www.visu.ai.

# இந்த மாத வழிகாட்டி
# பள்ளத்தூர் சு. நெல்லியான் செட்டியார்
## (ஸ்ரீதேவி கோல்டு கவரிங் ஒர்க்ஸ், சென்னை)



பல துறைகளிலும் நம்மவர்கள் இப்போது சிறப்பாக பரிணமித்து வருகிறார்கள். இமிடேஷன் ஜுவல்லரி தொழிலில் நம்மவர்கள் அதிகம் ஈடுபடவில்லை. தமிழகத்தில் கோல்டு கவரிங் பிசினஸில் ஒரு குறிப்பிடத்தக்க நிறுவனமாக இன்றைய தினத்தில் வளர்ந்து இருக்கும் ஸ்ரீ தேவி கோல்டு கவரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் பார்டனர் திரு. சு. நெல்லியான் செட்டியார் அவர்களை நமது செட்டிநாடு இதழுக்காக பேட்டி கண்டோம். இவர் குடிசையில் இருந்து கோபுரம் அளவிற்கு உயர்ந்தவர், உண்மையான ஸ்லம்டாக் மில்லியனர் என்றால் மிகையாகாது. இவரின் பேட்டி பலரை தொழில் செய்ய ஈர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சிவகங்கை மாவட்டத்தில் வர்த்தக மரபுக்கு (SRP Tools, TI Group, Amba Skywalk) பெயர் பெற்ற பள்ளத்தூரை பிறப்பிடமாகக் கொண்ட திரு எஸ். நெல்லியான் தனது வாழ்க்கைப் பயணத்தை 1981ஆம் ஆண்டு வெறும் 13-வது வயதில் தி.நகர். சாலையோரத்தில் உள்ள ஒரு சிறிய நிழல் கடையில் தொடங்கினார். சகோதரர்கள் மற்றும் குடும்ப உறவினருடன் இணைந்து கூட்டு முயற்சியாக ஆரம்பித்த இந்தப் பயணம் இன்று தமிழ்நாட்டின் முன்னணி கவரிங் நிறுவனம் ஸ்ரீ தேவி கோல்டு கவரிங்ஒர்க்ஸ் என்று சொல்லும் அளவிற்கு பிராண்டாக வளர்ந்துள்ளது.

**உங்கள் இளமைப் பருவம், தொழில் பற்றி கூறுங்கள்...**

அம்பத்தூரில் எனது மாமா வீட்டில் இருந்து பள்ளிப் படிப்பு படித்து கொண்டிருந்தேன். 9-ஆம் வகுப்புக்கு மேல் படிப்பு ஏறவில்லை. நினைவெல்லாம் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று தான் இருந்தது. எனது அயித்தான் பழநியப்பன் அவர்களுடன் இணைந்து ரூபாய் 500 மூலதனத்துடன் வியாபாரம் தொடங்கி விட்டேன். முதல் நாள் வியாபாரம் 23 ரூபாய். பின்னர் அங்கேயே ப்ரிட்ஜ், கிரைண்டர், வாஷிங் மெஷின், டி.வி., ஆகியவைகளுக்கு போடும் ப்ளாஸ்டிக் கவர்கள் விற்பனை செய்ய ஆரம்பித்தோம். வியாபாரம் சிறப்பாக நடந்தது. பின்னர் 1986ல் பேன்சி ஸ்டோர் ஆரம்பித்தோம். அங்கு இமிடேஷன் ஜுவல்லரியும் இருந்தது. அது பாஸ்ட் மூவிங் ஐயிட்டமாக இருந்ததால், அதையே முழு நேரத் தொழிலாக்கினோம். அதன் துவக்கம் தான் ஸ்ரீ தேவி கோல்டு கவரிங் ஒர்க்ஸ் நிறுவனம் ஆகும். இது எங்கள் குடும்பத்தின் கூட்டு முயற்சி ஆகும். எல்லோரும் சேர்ந்து பணியாற்றுகிறோம். தற்போது சென்னையில் மட்டும் எங்கள் நிறுவனம் இருக்கிறது.5 கிளைகள் இருக்கின்றன.

**தற்போது தங்கள் நிறுவனத்தில் என்னென்ன பொருட்களை விற்பனை செய்து வருகிறீர்கள்?**

கோல்டு கவரிங் வகைகளில் 1 கிராம் / 2 கிராம் செயின்கள் / வளையல்கள், பேஷன் ஜுவல்லரி, டெம்பில் ஜுவல்லரி, டான்ஸ் ஜுவல்லரி, காஸ்ட்யூம் ஜுவல்லரி, சுவாமி அலங்கார ஜுவல்லரி ஆகியவை ஆகும்.

எங்களுக்கு தேவையான டிசன்களை மெனுபாக்சர்களிடம் கொடுத்து மொத்தமாக செய்து வாங்குகிறோம். மசூலிப்பட்டினம், சிதம்பரம், மும்பை, கொல்கத்தா, அகமதாபாத் ஆகிய ஊர்களில் இருந்து செய்து வாங்குகிறோம். பேக்ஸ் வகைகளில் ஸ்கூல் பேக்ஸ், லேடீஸ் ஹாண்ட் பேக்ஸ், காலேஜ் பேக்ஸ், ஜுட் பேக்ஸ் போன்றவைகளையும் விற்பனை செய்து வருகிறோம்.

**வேறு என்ன தொழில் செய்து வருகிறீர்கள்...**

சமீபத்தில் எனது மனைவி திருமதி எஸ். என். மீனாட்சிக்கு தி. நகர்., பாண்டி பஜாரில் பெண்கள் ஆடைகளுக்கான தனியார் விற்பனை நிலையமான ஹுயூ அண்ட் ஹுயூ-வை ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு வழிகாட்டியாகவும் இருந்து வருகிறேன். குடும்ப உறவுகளின் முன்னேற்றத்தில் உறுதி மிகுந்து பங்காற்றுவது எனது முக்கிய நோக்கம் ஆகும்.

**அவரது மனைவியிடம் அந்த நிறுவனம் பற்றி கேட்ட போது.**

"சமீபத்தில் துவக்கப்பெற்ற இந்த நிறுவனம் பெண்களுக்கான ரெடிமேட் ஆடைகள் விற்பனையில் கவனம் செலுத்துகிறது, இதற்கான கொள்முதல்களை வட இந்தியாவின் பல நகரங்களில் இருந்து செய்கிறது எனவும், இந்த நிறுவனம் நண்பர் ஒருவருடன் கூட்டு முயற்சியாக தொடங்கப்பட்டுள்ளது எனவும், தான் மதியம் முதல் இரவு வரை கடையின் பணிகளில் நேரடியாக சென்று கவனிக்கிறேன்", என்றும் கூறினார்.

**உங்கள் குடும்பம் பற்றி...**

தந்தையார் பள்ளத்தூர் திரு சுப்பையா செட்டியார் அவர்கள், தயார் திருமதி உண்ணாமலை ஆச்சி. என்னுடன் கூடப் பிறந்தவர்கள் ஒரு மூத்த சகோதரி (SP. நாச்சாள்), ஒரு இளைய சகோதரி (SP. விசாலாட்சி) மற்றும் 3 சகோதரர்கள் (SP. பழநியப்பன், SP. பெரிச்சியப்பன், SP. சுப்பு குமார்). மனைவி திருமதி மீனாட்சி ஆச்சி. 1990ம் ஆண்டு திருமணம் ஆனது. என் மாமனார் ஓ.சிறுவயலை சார்ந்த திரு. முத்தையா செட்டியார் அவர்கள், மாமியார் திருமதி நாச்சம்மை ஆச்சி அவர்கள். என் மனைவியை அப்பத்தா சிவகாமி ஆச்சி, ஐயா பழ. பழநியப்ப செட்டியார்

# 'ஸ்டார்ட் அப்' தொழிலில் சாதிக்க உதவும் சேதுராமன் சாத்தப்பன் புத்தகங்கள்



சேமிப்பு, வர்த்தகம், பங்குச் சந்தை, ஏற்றுமதி/இறக்குமதி குறித்து நாடு முழுவதும் பல இடங்களில் கருத்தரங்குகளை நடத்தி வருபவர் சேதுராமன் சாத்தப்பன். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஏற்றுமதி சம்பந்தமாகவும், ஏற்றுமதி டாக்குமெண்ட்கள் சம்பந்தமாகவும் பல கருந்தரங்குகளில் சிறப்பு பேச்சாளராக இருப்பவர். ஏற்றுமதியில் ஆவணங்களுக்காக உலகளவில் நடத்தப்படும் தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற முதல் இந்திய வங்கியாளர். தமிழகத்தில் ஏற்றுமதியாளர்கள் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தமிழில் ஏற்றுமதிக் கருத்தரங்குகளை, தினமலர் பத்திரிகைக்காக திருப்பூர், சேலம், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், வேலூர் போன்ற நகரங்களில் நடத்தியுள்ளார். 'தினமலர்' நாளிதழில் தொடர்ந்து ஸ்டார்ட் அப் பற்றிய கட்டுரைகளை எழுதி வருகிறார். அவை புத்தகங்களாக இப்போது வெளிவந்திருக்கிறது. 'வெற்றிகரமான 100 ஸ்டார்ட் அப் தொழில்கள் பாகம் 1' ஏற்கனவே வெளிவந்திருக்கிறது. இப்போது பாகம் 2, 3, 4 மதுரையில் கடந்த 27-ஆம் தேதி தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் ரீஜினல் மேனேஜர் ஜெபநாத் ஜூலியஸ் வெளியிட, மதுரை தியாகராஜர் ஆர்ட்ஸ் காலேஜ் டைரக்டர் சுகுமார், நாராயணி நிதி ஆலோசகர் ஸ்ரீதரன் ஆகியோர் பெற்று கொண்டனர். புத்தகங்களை தமிழ் பிசினஸ் நியூஸ் மீடியா வெளியிட்டு இருக்கிறது. தொடர்புக்கு: எண் 99940 29969.

தான் வளர்த்தார்கள் என்று மிகவும் நன்றியுடன் நாங்கள் நினைவு கூறுகிறோம். என் மனைவியுடன் உடன் பிறந்தவர்கள் ஏழு பேர். என் மனைவி என் வாழ்க்கையின் மிகப்பெரிய தூண் என்றால் மிகையாகாது. மகன் SN. பழநியப்பன், BE., MBA (IIM Bangalore) முடித்துள்ளார். தற்போது கோயம்புத்தூரில் strategy கன்சல்டன்சி வைத்துள்ளார். மருமகள் வள்ளி அருணாச்சலம். ஆராவயல் திரு. அருணாசலம் செட்டியார் அவர்களின் மகள். தற்போது பொள்ளாச்சியில் தந்தையாரின் ரிசார்ட்டை மேற்பார்வை செய்து வருகிறார். பேரன் வைபவ் பழநியப்பன். மகள் நாச்சாள் நெல்லியான், B.Arch (Gold Medalist) தற்போது துபாயில் ஆர்க்கிடெக்ட் ஆக இருக்கிறார். மாப்பிள்ளை காசி விஸ்வநாதன் (ஆராவயல் திரு. சுப்ரமணியன் செட்டியார் அவர்கள் மகன்). துபாயில் Azizi நிறுவனத்தில் பைனான்ஸ் டிபார்ட்மெண்டில் பணிபுரிகிறார்.

**தங்களின் சமூக சேவைகள் பற்றி கூறுங்களேன்?**

நான் பல சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளேன். கற்பக விநாயகர் நற்பணி மன்றம், திருமலா திருப்பதி தேவஸ்தானம் சேவை குழு - தி. நகர், வைரவன் கோயில் திருவிழாக்கள் மற்றும் சென்னை எஸ்பி அறக்கட்டளை (நிறுவனர் திரு எஸ்பி சிங்காரம் செட்டியார்) போன்ற அமைப்புகளில் தன்னார்வ தொண்டராக சமூக நலத்திற்காக தொடர்ந்து பங்களித்து வருகிறேன். பக்தி மற்றும் பண்பாட்டு பணிகளில் ஈடுபாடும், பொது சேவையில் தொடரும் ஊக்கமும் என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றியுள்ளது

**நம் இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நகரத்தார் தொழில் சார்ந்த சமூகத்தை சேர்ந்தவர்கள். ஆதலால் நம் இளைஞர்கள் அதிக அளவில் தொழில் செய்ய முன் வர வேண்டும். நேரம் காலம் பார்க்காமல் உழைக்க வேண்டும். ஆனால் அதன் மூலம் கிடைக்கும் வருமானம் நீங்கள் வேலை பார்ப்பதை விட பல மடங்கு இருக்கும் என்பதை உணர வேண்டும். எனது மகன் எம்.பி.ஏ., முடித்தவுடன் நல்ல சம்பளத்தில் PEPSI-யில் வேலை செய்து கொண்டிருந்தார். ஆனால் ஏன் இன்னொருவருக்கு வேலை செய்ய வேண்டும் என்று நினைத்து, விலகி வந்து தற்போது stratgey கன்சல்டன்சி நடத்தி வருகிறார். நாம் முன் காலத்தில் தொழில் செய்ய இளைஞர்களை கைபழக வைத்து பின்னர் அவர்களையும் அந்த தொழில் செய்ய உதவி செய்தோம். அந்த கான்சப்ட் தற்போது இல்லாதது வருத்தமாக இருக்கிறது. இதற்கு தற்போதைய உதாரணம் முஸ்லிம் மற்றும் மார்வாடிகள் சமூகத்தினர்.

உழைப்பு, நேர்மை, சமூக சேவை ஆகியவற்றை வாழ்வின் அடிப்படையாகக் கொண்ட திரு நெல்லியான் அவர்கள் இன்றைய தலைமுறைக்கு ஒரு பரந்த பார்வையுடைய தொழில் முனைவோர் மட்டுமல்லாமல், சமூகத்திற்கான அர்ப்பணிப்பு கொண்ட மனிதராகவும் முக்கியமான முன்னுதாரணமாகவும் திகழ்கிறார். இன்றைய இளைஞர்கள் இவரின் முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்றுவது மிகவும் முக்கியம். வணிக தொடர்புக்கு: 99406 21006.

**ஈமெயில்:** Sethuraman.sathappan@gmail.com,
**மொபைல்:** 9820451259,
**இணையதளம்:** www.startupandbusinessnews.com


மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMARK


Maganlal
a precious legacy
நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
88 YEARS
#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 19



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

இஸ்ரோ நகரத்தார்களைப்பற்றி நகரத்தார் சமூகத்திற்கு அறிமுகம் செய்யும் வகையில் நமது செட்டிநாடு இதழில் நான் இதுவரை எழுதி வந்த கட்டுரைகள் முடிவுக்கு வந்துள்ளது. இதுவரை 18 நகரத்தார் விஞ்ஞானிகளையும் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளையும் விவரிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இங்கு இன்னும் மூன்று இஸ்ரோ விஞ்ஞானிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். 1. திரு. சிதம்பரம், கண்ட்ரமாணிக்கம் (Avionics Design), 2. திரு. சுப்பிரமணியம், ஆ. தெக்கூர் (Propulsion Components Quality), 3. திரு. நாகப்பன், கடியாபட்டி (Precision Fabrication) இந்த 21 பேரும் நகரத்தார் நல்லுலகத்தின் பாராட்டுகளையும் அங்கீகாரத்தையும் வாழ்த்துக்களையும் ஒருங்கே பெறத் தகுதியானவர்கள்.

இந்த கட்டுரைகள் வெளிவர காரணம் நமது செட்டிநாடு இதழ் ஆசிரியர் என்னை அணுகி இஸ்ரோ நகரத்தார்களை அறிமுகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பொழுது என்னால் இந்த உயரிய காரியம் செய்ய முடியுமா என்ற மலைப்பு எழுந்தது உண்மை. தமிழில் கட்டுரைகள் எழுதி பழக்கப்பட்டவனல்ல. ஆனால் ஆசிரியர் கொடுத்த ஆதரவும் தைரியமும் முயற்சி செய்யலாம் என்ற எண்ணத்தை விதைத்தது.

இதற்கு முன்னால் எங்களை கௌரவப்படுத்தி அறிமுகப்படுத்திய நிகழ்வு தேவகோட்டையைச்சார்ந்த துபாய் சொக்கலிங்கண்ணன் மற்றும் துபாய் நகரத்தார் பெருமுயற்சியால் மதுரை மாரியாட் ஹோட்டலில் எங்கள் குடும்பத்தினர் மற்றும் அழைக்கப்பட்ட நகரத்தார் முன் நடந்த பெருவிழாவாகும்.

இது வரை நான் எழுதி வந்த கட்டுரைகள், நகரத்தார் வாசகர்களுக்கு ராக்கெட்டின் கட்டமைப்பு எவ்வளவு High Technology-ஐக் கொண்டது, நுண்ணியமானது என்பதையும், நகரத்தார் விஞ்ஞானிகள் தொழில் நுட்பம் இல்லாத காலத்தில் எவ்வளவு சிரமப்பட்டு இதை சாதித்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும் என எண்ணுகிறேன். சிறப்பாக, நகரத்தார் குழந்தைகளுக்கு அவர்கள் பிற்கால வாழ்க்கையில் சிறந்த நிலையை அடையவும் ஒரு உந்துதலை ஏற்படுத்தவும் ஒரு ஊன்று கோலாக இந்த கட்டுரைகள் அமைந்திருக்குமேயானால் என் எழுத்துக்களின் பலனை அடைந்து விட்டதாகவே உணருகிறேன்.

ராக்கெட் என்பது மனித படைப்புகளில் மிக வேகமான உபகரணம் (Rocket is the fastest man made object. It pierces through the dense Ocean of air and ultimately reaches a velocity of around 11 kms/ sec.). அதில் உபயோகப்படுவது எல்லாமே வேறு எங்கும் உபயோகப்படுத்தப்படாத High Technology கண்டுபிடிப்புகள்தான். விண்வெளியில் பயணிக்கும்பொழுது எதுவும் தன் பணியை செய்யாமல் இருந்து விடக்கூடாது என்பதுதான் அதன் வெற்றியின் அடிநாதம். (The effort is to ensure that nothing fails in the flight). ஆனால் அது செல்லக்கூடிய பாதையோ சிரமங்கள் நிறைந்தது. சோதனைகள் ஒன்றே வெற்றிக்கு வழி. (Testing is the only way to success).

விண்வெளி ஆராய்ச்சி என்பது முழுக்க முழுக்க ஒரு கூட்டு முயற்சி (Team Work). ஒரு மனிதனால் மட்டும் எதுவும் செய்து விட முடியாது. அனைவரும் கைகோர்த்து ஒருமித்து செய்ய வேண்டிய பணி. ராக்கெட்டில் பல்லாயிரக்கணக்கான பாகங்கள் உள்ளன. அனைத்தும் ஒருமித்து பணி செய்ய வேண்டுமென்றால் அதை நிர்மாணிப்பவர்களும் ஒருமித்து பணி செய்ய வேண்டியது மிகவும் அவசியம்.

ஆரம்ப காலங்களில் நாங்கள் இந்த தொழில் நுட்பத்தை அறிந்து கொண்டது பெரும்பாலும் தோல்விகளின் மூலம்தான் (We learnt most part of this technology only through failures). தோல்வியின் காரணம் குறித்து ஆராயும் பொழுது நாம் செய்த தவறுகள் வெளிச்சத்துக்கு வரும். அவைகளை சரி செய்யும் போது வெற்றிக்கனி கைக்கு கிட்டும். சில சமயங்களில் வேறொரு அறியாத தவறினால் வெற்றி கிட்டுவதற்கு தாமதமாகலாம். ஆனால் நம்பிக்கை ஒன்றே வெற்றிக்கு வழி (Persistance is the only way to success). ஆனால் சிரமத்திற்கு பின் கிட்டும் வெற்றி தரும் ஆனந்தத்திற்கு நிகர் வேறு எதுவுமேயில்லை.

அதுபோல் ஆரம்ப காலங்களில் ராக்கெட்டுகளின் பல பாகங்களும் அதில் உபயோகப்படுத்தப்படும் சிறப்பு உலோகக் கலவைகளும் நமது நாட்டில் இல்லை. அயல்நாடுகளை நம்பி இருக்க வேண்டிய நிலை. ஆனால் ஆரம்பத்திலிருந்தே இஸ்ரோ இவைகளை உள் நாட்டிலேயே செய்ய வேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டு பெரும் அளவில் வெற்றியும் கண்டது. இதிலும் இஸ்ரோ நகரத்தார்களின் பங்கு உள்ளது என்பது ஒரு மகிழ்ச்சியான விஷயம்.

1963-ல் இந்தியாவின் விண்வெளி முயற்சி, டாக்டர் விக்ரம் சாராபாயின் தொலைநோக்கு பார்வையினால், ஆரம்பிக்கப்பட்ட போது அவர் தேர்ந்தெடுத்தது கேரளாவின் தலைநகரான திருவனந்தபுரம் நகரத்தைத்தான். கேரளாவின் வனப்பில் மயங்கித்தான் அவர் இதைத் தேர்வு செய்திருப்பாரென எண்ணுகிறேன். இஸ்ரோ நகரத்தார்களில் பலர் இந்த நகரத்தில் கடந்த 52 வருடங்களாக வாழும் பாக்கியம் பெற்றோம். ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, மலையாளம் ஆகிய நான்கு மொழிகளை அறியும் வாய்ப்பினையும் பெற்றோம்.

டாக்டர் விக்ரம் சாராபாய், டாக்டர் சதீஷ் தவான், Prof. பிரம்ம பிரகாஷ், Prof. U.R.ராவ், டாக்டர் கஸ்தூரி ரங்கன், டாக்டர் அப்துல் கலாம் போன்ற மாபெரும் தலைவர்களின் நிழலிருந்து அவர்களின் அறிவுரைகளையும், நிர்வாகத் திறனையும், இக்கட்டான சமயங்களில் அவர்கள் எடுத்த முடிவுகளையும், அவர்கள் ஆங்கிலத்தில் கடினமான விஷயங்களையும் எளிதாக விளக்கும் திறமையையும், அவர்கள் எங்கள் மேல் கொண்ட நம்பிக்கையையும் பார்த்தும் கேட்டும் நாங்கள் புது மனிதர்களாக மாறிய வாய்ப்பைப் பெற்றோம்.

எங்களுக்கு பின்னால் வந்த அடுத்த தலைமுறை விஞ்ஞானிகள் நாங்கள் இட்ட அடித்தளத்தில் பயணித்து இந்தியாவின் விண்வெளி முயற்சிகளை உலகமே வியக்கும் அளவுக்கு உச்சத்துக்கு கொண்டு செல்வதை வியந்து பார்த்து அளவிலாப் பெருமிதம் கொள்கிறோம். சமீபத்திய சந்திரயான் 3 வெற்றியே இதற்கு சான்று.

இனி வரும் காலங்களில் இஸ்ரோ முன் எடுத்து செல்லவிருக்கும் ககன்யான், சந்திரயான் 4, மங்கள்யான் 2, வீனஸ்க்கு செல்லும் சுக்ரயான் போன்ற மிக கடினமான முயற்சிகளிலும் இஸ்ரோ வெற்றி பெரும் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. எங்களுடைய ஒரே வேண்டுகோள் எங்களின் தொடர்ச்சியாக இன்னும் பல நகரத்தார் குழந்தைகள் இஸ்ரோவிலோ, நம் நாட்டில் வளர்ந்து வரும் விண்வெளி start-up களிலோ அங்கமாகி பல வெற்றிகளை கண்டு நம் சமூகத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்பதேயாகும்.

இஸ்ரோவின் இன்றைய தலைவர் (Chairman) டாக்டர் நாராயணன் அவர்கள் உழைப்பின் மறு வடிவம். இவர் எரிபொருள்களை மிகக் குறைந்த வெப்ப நிலையில் வைத்து உபயோகப்படுத்தும் இந்தியாவின் Cryo Technology-யின் தந்தை என்றால் மிகையாகாது. மிக எளிமையான மனிதர். நம் குழந்தைகள் இவரை முன்மாதிரியாக (Role model) வைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என எண்ணுகிறேன்.

இஸ்ரோவில் ஆரம்ப காலங்களில் நாங்கள் பயன்படுத்திய சில வாசகங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1. Sky is not the limit. 2. To strive, to seek and not to yield. 3. Time is more precious than money. 4. To solve a difficult problem, break it into smaller parts and solve one by one. You will reach success. இவை வாழ்க்கையில் வெற்றி பெற நினைக்கும் அனைவருக்கும் பொருந்தும் என நினைக்கிறேன்.



கடந்த இதழில் வெளியான கட்டுரையில் உள்ள இந்தப் படத்தில் இருப்பவர்களை ரெங்கநாயகி - பாண்டியன் என வாசிக்கவும். மேலும் Dr. ஜெயகிஷ்ண பாலாஜி மினுகிருத்திகா, B.Com., எனவும் திருத்தி வாசிக்கவும்

எங்கள் வெற்றியில் எங்கள் குடும்பத்தினருக்கும் சமபங்கு உள்ளது. அதற்கு காரணம் அவர்கள் செய்த அளவற்ற தியாகம். ஒரு விண்வெளி விஞ்ஞானியின் முழு கவனமும் அவன் தொழிலில் தான் இருக்கும். குழந்தைகளை வளர்ப்பதிலிருந்து மற்ற அனைத்து குடும்பப் பொறுப்புகளையும் தன்னந்தனியாக நிர்வகிக்க வேண்டிய நிலை. அதை அவர்கள் மிகச் சிறப்பாக நிர்வகித்தார்கள் என்பது உண்மை. இதை நாங்கள் எல்லா அலுவலக நிகழ்வுகளிலும் குறிப்பிடத் தவறுவதில்லை. ஆச்சிமார்கள் நிகழ்த்திய இந்த தொண்டிற்கு நான் தலை வணங்குகிறேன்.

இன்றைய நகரத்தார் குழந்தைகள் இளம் வயதிலேயே விண்வெளி தரும் வியப்புகளைப் பற்றி அறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். பல பெற்றோர்களும் இதைப்பற்றி சொன்னதன் பேரில் என் சிறிய பங்களிப்பாக Space Minds என்ற பெயரில் ஒரு WhatsApp group துவங்கி எனக்கு வரும் தகவல்களை பகிர்ந்து வருகிறேன். 20 குழந்தைகள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். Facebook-லும் இவைகளை பதிவிட நான் தவறுவதில்லை.மற்றபடி இந்த துறை குறித்து எதுவும் தகவல்கள் தேவைப்படுமானால் அதை உங்களுக்கு தரவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த கட்டுரைகள் மூலம் நகரத்தார் வாசகர்களுடன் பயணிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்த பொக்கிஷம். இதை நல்கிய நமது செட்டிநாடு இதழுக்கும் வாசகர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(குறிப்பு அடுத்த இதழ் முதல் இக்கட்டுரை ஆசிரியர் எழுதும் இஸ்ரோவின் மகத்தான பணியால் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் கிடைக்கும் மகத்தான பயன்கள் பற்றிய கட்டுரைகள் வெளிவரும்.) ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 46



# வயிரவன் கோயில் நகரத்தார்களும் இசைகுடிமான வரிகளும்



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

**1532-ல் காளையார்கோயில் திருப்பணி:**

காளையார்கோயிலில் திருவேட்பூருடையார் பிரிவு நகரத்தார்கள் செய்த திருப்பணி தொடர்பான செய்தியுடன் சென்ற தொடர் முடிந்திருந்தது. அதே போல இருண்ட காலங்கள் கடந்தன, இன்பங்கள் மலர்ந்தன என்பதற்கு அடையாளமாக மற்றொரு செய்திப் பதிவு அதே கோயிலில் உள்ளது. வயிரவன் கோயில் நகரத்தாரான அடைக்கலங்காத்தார் மகன் சிதம்பரநாதர் செய்த திருப்பணியைப் பதிவு செய்கிறது. இவ் ஊரில் உள்ள காளீசுவரர் கோயில் என்ற சோமனாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுத்தான் அது, 1532-ஐ சேர்ந்தது. இதே கல்வெட்டு 'பாடிகாவல்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையிலும் சான்றாகத் தரப்பட்டுள்ளது.

**ஏழகப்பெருந்தெருவான... :**

இந்தக் கல்வெட்டில் உள்ள வரி நமது இசைகுடிமானத்தில் எழுதப்படுகிற வரியை அப்படியே பதிவு செய்து, இசைகுடிமானத்தின் மாறாப் பழமையை எடுத்துக்காட்டுகிறது. பொதுவாக வணிகம், வணிகச் சமூகங்கள் தொடர்பான கல்வெட்டுகள் நம் பகுதியில் செறிவாகவும், தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் பரவலாகவும் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகளில் வணிகம் நடைபெற்ற இடங்கள் பெருந்தெரு என்ற சொல்லால் சுட்டிக் காட்டப்படுகின்றன. பெருந்தெரு என்ற வணிகச் சாலையில் வாழ்ந்த சமூகங்களில் ஒன்று, வரலாற்றின் நீட்சியாக இன்றும் இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக உள்ளது காளையார்கோயில் கல்வெட்டு.

**நகரத்தார்களையும், வரலாற்றின் பெருந்தெருக்களையும் இணைப்பது எது?**

வணிகம் சார்ந்த கல்வெட்டுகளில் 'பெருந்தெரு'எனக் குறிப்பிடப்படும் இடங்களில் வாழ்ந்தவர்கள் பெரும்பாலோர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே என்ற தெளிவான முடிவை எட்டுவதற்கு இந்த இசைகுடிமான வரிகளே துணையாக இருக்கின்றன. "பெருந்தெரு" என பதியப்பட்ட கல்வெட்டுடன் நகரத்தார் பெயரையும் கொண்டிருப்பதால், இக்கல்வெட்டு முக்கியமான கல்வெட்டுகளில் ஒன்றாக அமைகிறது. இந்தக் கல்வெட்டு என்ன சொல்கிறது? தெரிந்து கொள்வோம்.

காளையார்கோயில், காளீசுவரர் கோயிலிலுள்ள - சோமனாதர் கோயில் செல்லப்பிள்ளையார் கோயில் இசுலாமியர் ஆட்சியில் பெரிதும் இடிக்கப்பட்டு விடுகிறது அடைக்கலங்காத்தார் மகன் சிதம்பரநாதர் இடிந்த கோயிலை எடுத்துக் கட்டியிருக்கிறார். அடைக்கலங்காத்தார் மகன் சிதம்பரநாதர் பெயரைக் குறிப்பிடும் பொழுது இசைகுடிமானத்தில் வயிரவன் கோயில் நகரத்தார்களை எவ்வாறு இன்று எழுதுகிறோமோ அது போலவே கல்வெட்டிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வயிரவன் கோயில் - கழனிவாசல் பிரிவு நகரத்தாரைச் சுட்டுகிற வரியை, கல்வெட்டில் பதிவு செய்திருக்கிறார்கள். 'ஏழகப்பெருந்தெருவான வீரபாண்டியபுரத்து களனிவாசலுடையான்' - என்பது வரி. அந்த இசைகுடிமான வரி கல்வெட்டிலும் பதியப்படுகிறது.

மற்றொன்றையும் கவனிக்க வேண்டும் இன்று எழுதுவது போல் 'ஏழகப்பெருந்திரு' என்று எழுதவில்லை 'ஏழகப்பெருந்தெரு' என்றுதான் எழுதியுள்ளார்கள். சிதம்பரநாதர் இடிந்த கோயிலை மட்டும் எடுத்துக் கட்டவில்லை. வினாயகன் திருமேனியை நிறுவி பூசை முதலான சேவைகளுக்காக, அவற்றை நாள்தோறும் செய்யும் பண்டாரத்திற்கு நிலத்தை தேவதானமாக வழங்கியிருக்கிறார். அந்நாளில் கோயில் பூசைகள் அனைத்தையும் வேளாளர்கள், உவச்சர்கள், பண்டாரங்களே செய்துள்ளனர் என்ற செய்தியும் தெரிய வருகிறது. கல்வெட்டில் உள்ள சில வரிகளை மட்டும் தங்களின் கவனத்திற்குத் தந்துள்ளேன்.

- சகாத்தம் 1454 மெல் செல்லாநின்
- ற ஹெவிளம்பிவருசம் ஆடிமாதம் 10உ திருக்கானைப்பெருஉடைய நயினார்
- சொமநாதன்கொயிலில் எழகப்பெருந்தெருவான வீரபாண்டியபுரத்து களனிவா
- ச லுடையான் அடைக்கலங்காத்தார் சிதம்பரநாதர் உள்இட்டார் கொயிலும் சரிவு எடுத்
- து கட்டி வினாயகனையும் திருமெனிக்கொண்டு இவற்கு பூசைமுதலுக்கு சிறிபண்டார
- க்காரியத்துக்குக் கடவர் கையில் கொண்டுடைய நிலமாவது இன்நயினார் தெவதானம் . . . .

கொண்டாட்டங்களும், வழிபாடுகளும், திருப்பணிகளும் நடைபெறுகின்றன என்றால் நாட்டில் செல்வமும் செழிப்பும் நிறைந்திருக்கின்றன என்று தானே பொருள். (காளையார்கோயில் நகரத்தார் சிற்பம் படம் உதவி திரு.பழ.கைலாஷ், தேவகோட்டை)

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590

ADVT


### இரணியூர் அல்லது பிள்ளையார்பட்டி நகரத்தார் திருப்பணி – கோனாபட்டு கற்பக விநாயகர் கோயில்

கோனாபட்டு கற்பக வினாயகர் கோயில் கல்வெட்டு ஒன்று, 16-ம் நூற்றாண்டில் நகரத்தார்களின் திருப்பணிக்குச் சான்றாக உள்ளது. இளையாத்தங்குடியான குலசேகரபுரத்துத் திருவேட்பூருடையார் அளித்த நன்கொடை மூலம் கோயில் முன்மண்டபமும், அழகன் ஊரணியும் கட்டி எழுப்பப்பட்டது என்ற செய்தி வெட்டப்பட்டுள்ளது. கோனாபட்டு பழமையான ஊர் என்பதும், பெயர் மாறுதலுக்கு ஆட்படாமல் காலங்களைக் கடந்துள்ளது என்பதும் தெரிகிறது. (கி.பி.1585-ஆம் ஆண்டுக் கல்வெட்டு, புசக 861)

### கி.பி.1600-க்குப் பிறகு செட்டிநாட்டுச் சூழ்நிலை:

1600-க்குப் பிறகு நகரத்தார்கள் தொடர்பான கல்வெட்டுகளில் ஓர் ஒற்றுமையைக் காண முடிகிறது. இக்காலப் பகுதியில் கிடைத்த கல்வெட்டுகளில் உள்ள ஊர்ப் பெயர்கள் அனைத்தும் பாண்டியர்கள் மற்றும் சோழர்கள் காலத்தில் உள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்படாத ஊர்களாக உள்ளன. இப்பகுதியில் 7 கல்வெட்டுகள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதிகமான எண்ணிக்கையில் சான்றுகள் கிட்டவில்லை என்பதும் ஆய்வுக்குரியதே.

### 1650-ல் குழிபிறையில் மாத்தூர் – மணலூர் நகரத்தார்:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில் உள்ளது குழிபிறை கிராமம். இங்குள்ள சிவன் கோயில் முன்புறம் ஒரு சிறிய பிள்ளையார் கோயில் உள்ளது. கோயிலுக்குப் பின்புறம் ஒரு ஊருணி உள்ளது. இது பட்டபிளான் ஊரணி என அழைக்கப்படுகிறது. இக்கோயில் கட்டப்பட்ட பொழுது, பிள்ளையாரை ஒரு மேடையில் மட்டுமே வைத்திருக்கிறார்கள். பிற்காலங்களில் தான் கோயிலாக வடிவு கொண்டு கோபுரமும் அமைத்திருக்கிறார்கள் (ஆவணம் 28, 2018 பக். 150, படி எடுத்துப் படித்தவர்கள் கரு.இராசேந்திரன், மா.இளங்கோ)

1. தாருனு ஞு, ஆவணிமீ 10உ மாத்)தூ(ர்)
2. கோவில் மனலூருடையார்
3. பட்ட புள்ளான் வகை சிதம்பரஞ்செட்டி
4. யார் வீரப்ப செட்டியார்புள்ளையார்
5. கோவில் கட்டிய தருமம்.

மாத்தூரில், மணலூர் பிரிவு நகரத்தாரான பட்டபுள்ளான் வகை சிதம்பரம் செட்டியார் என்பவரால் கட்டப்பட்டுள்ளது. இந்தக் குடும்பத்தின் வழித்தோன்றல்களை இன்று குழிபிறையில் இனம் காண முடியவில்லை. தமிழ்நாட்டின் வடபுறம் உள்ள நாகலாபுரம் கல்வெட்டிலும் பட்டப்பிள்ளை செட்டியார் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டும் வணிகம் தொடர்பானதே. இரு கல்வெட்டுகளிலும் உள்ள பெயர் ஒற்றுமை ஆய்வுக்குரியதாக உள்ளது.

### குழிபிறைச் சந்தைப்பேட்டை வாழ்வியலின் ஒரு பகுதி:

செட்டிநாட்டுப் பகுதியின் வாழ்வியல் தொடர்பான கல்வெட்டு இது. அனைத்துச் சமூகத்தினருக்கும் பொருந்தும். தமிழகத்தில் வணிக மையங்கள் பல இடங்களிலும் இருந்திருக்கின்றன, நாயக்கர்கள் காலத்தில் உருவான சந்தைப்பேட்டையும் ஒரு வணிக மையமே. கடந்த காலங்களில் வணிக மையங்களின் தொடர்ச்சி சந்தைப்பேட்டை என்ற பெயரில் நாயக்கர்களின் காலத்தில் புதுப்பெயர் பெற்றது. குழிபிறையிலும் நாயக்கர்கள் காலத்தில் சந்தைப்பேட்டை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குழிபிறை நகரச்சிவன் கோயிலுக்கு முன்புறம் மேலே சொல்லப்பட்ட பிள்ளையார் கோயிலுக்கு அருகில் மற்றொரு கல்வெட்டு உள்ளது. மதுரையை ஆண்ட வீரப்ப நாயக்கர் காலத்தில் வெட்டப்பட்டுள்ளது. கல்வெட்டு வைக்கப்பட்டுள்ள பகுதி சிறிய வணிகப் பகுதியாக, சந்தையாக இருந்திருக்க வேண்டும். சந்தை கூடும் பழக்கம் செட்டிநாட்டுப் பகுதிகளில் இருந்திருக்கிறது என்பதற்கு இக்கல்வெட்டே சான்று. அந்தச் சந்தை கூடும் இடத்திற்கு எவ்விதத்திலாவது தீங்கு செய்ய நினைப்பவர்கள் துயர் அடைவர் என்பது செய்தியாகும் இந்நூலாசிரியரால் இக்கல்வெட்டு படி எடுக்கப்பட்டது. ஆவணம் இதழிலும் வெளியானது.

### பொன்னனூர் திருக்குமரீசுவரர் கோயில்– திருவேட்பூருடையார் அறப்பணி 1650/17-ம் நூற்றாண்டில்:



திருமயம் வட்டம், நற்சாந்துபட்டி – பனையப்பட்டி சாலையில் உள்ள பொன்னனூர் கிராமத்தில் உள்ளது. சின்னஞ் சிறிய அழகிய கோயிலை திருவேட்பூருடையார் பிரிவு நகரத்தார்கள் 350 ஆண்டுகளுக்கு முன் அமைத்திருக்கிறார்கள். நகரத்தார்களின் அறப்பணி தொடர்பானது. வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்தக் கோயில் இன்று பொலிவிழந்து இருக்கிறது. (ஆவணம் 2, 1992 பக்.2 கல்வெட்டுக் கலைஞர் கரு.இராசேந்திரன்).

(வரலாறு வளரும்)

# பெங்களூரு ராஜராஜேஸ்வரி ஆலய வசந்த நவராத்திரி உற்சவம்







பெங்களூரு ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் இந்த ஆண்டு வசந்த நவராத்திரி உற்சவம் சுபஸ்ரீ குரோதி ஆண்டு, பங்குனி மாதம், 13–ஆம் நாள் வியாழக்கிழமை முதல் 24–ஆம் நாள் திங்கள்கிழமை வரை (27.03.2025 முதல் 07.04.2025 வரை) வசந்த நவராத்திரி பிரம்மோத்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தினம்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும் வெள்ளி வாகனங்களில் திருவீதி உலா சிறப்பாக நடைபெற்றது 05.04.2025 சனிக்கிழமை அன்று தேரோட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை ராமநவமி அன்று வெள்ளி சிம்ம வாகனத்தில் அன்னை ராஜராஜேஸ்வரி திருவீதி உலா வந்து தீர்த்தவாரி உற்சவமும், நகரத்தார் மண்டகப்படியாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி மண்டகப்படியும் நாட்டுக் கோட்டை நகரத்தார் ஸ்ரீராஜராஜேஸ்வரி சாரிடபிள் டிரஸ்ட் என்ற அமைப்பின் மூலம் நடைபெற்று வருகின்றது. மேற்படி டிரஸ்ட்க்கும் கோட்டையூர் ஏ.எல். முத்தையா செட்டியார் அவர்கள் தலைவராக இருந்து வருகிறார்கள் அன்று தினம் நகரத்தார்களுக்கு பரிவட்டம் கட்டி மாலை மரியாதை செய்விக்கப் பெற்றது. அலங்கார மண்டபத்தில் நடந்த சூர்ணோத்ஸவம் நிகழ்ச்சியில் நகரத்தார்களுக்கு பரிவட்டம் கட்டி சிறப்பு செய்யப்பட்டது. தீர்த்தவாரி நிகழ்ச்சியின் போது நகரத்தார்களுக்கு மகா சுவாமிகள் மரியாதை செய்தார்கள். அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் திருவாளர்கள் ஏ.எல். முத்தையா செட்டியார், சொ. வள்ளியப்பா, முவீ.பெத்தபெருமாள், ஏ.எஸ்.சோலையப்பன், இஸ்ரோ. வள்ளியப்பன், நீலகிரீஸ் லட்சுமணன், ஸ்ரீ.அருணாசலம், பி.ஆர்.குமார், அரிமளம் செல்லப்பன், தேவகோட்டை ராம்தேவ் வந்து இருந்தார்கள். தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி தலைவர் அ.லட்சுமணன் அவர்களும் காரைக்குடி கொரட்டியார் வீடு நாராயணன் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார்கள்.

தகவல்: தண்டாயுதபாணி.அழ (செயற்குழு உறுப்பினர் – கர்நாடக நகரத்தார் சங்கம்)

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
13.10.1949

மறைவு
05.05.2022

**M.மீனாட்சி**
Former Staff, Chettinad Cement Corporation (P) Ltd, Chennai - 6

விழிகள் உன்னைத் தேடுகிறது.
விளிம்பினில் நினைவின் கண்ணீர்.
வழிகள் ஏதும் உண்டா உன்னை மீண்டும் காண?

**உன் நினைவாகவே வாழ்ந்து கொண்டிருக்கும்**

கணவன் TR.மெய்யப்பன்
மகன் M.திருநாவுக்கரசு
மருமகள் ராதா திருநாவுக்கரசு
பேரன்கள் அஸ்வின், அருண்
Cell: 8056001439 / 8754568140



## இரங்கல்

எல் எஸ் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட மூத்த பத்திரிகையாளர் நா.லெ. சுந்தரம் செட்டியார் (87 வயது) ஒக்கூரில் அவர்கள் இல்லத்தில் 30.04.2025 அன்று இறைவன் திருவடி அடைந்தார்கள். கலைத் தந்தை கருமுத்து தியாகராஜன் செட்டியார் அவர்களின் தமிழ்நாடு நாள் இதழ், ஆச்சி வந்தாச்சு, நகரத்தார் குரல் ஆகிய பத்திரிக்கைகளில் பணியாற்றியவர். அன்னாரின் மறைவுக்கு நமது செட்டிநாடு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

## வள்ளிமலை நகரத்தார் வழிபாட்டு மன்றம்

விசுவாவசு வருடம், சித்திரை மாதம், 1–ஆம் நாள் (14.04.2025) அன்று வள்ளிமலை நகரத்தார் வழிபாட்டு மன்றத்தின் 27–ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுசமயம் வள்ளியம்மைக்கு அபிஷேகம், முருகனுக்கு அர்ச்சனை ஆராதனைகள் மற்றும் பக்திப் பேச்சரங்கத்துடன், காலை, மதிய விருந்து நடைபெற்றது. ராணிப்பேட்டை, வேலூர் நகரத்தார் பெருமக்கள் பெருவாரியாக வருகைபுரிந்து விழாவை சிறப்பாக நடத்தினர். வருகின்ற 11.10.2025, சனிக்கிழமை அன்று இரவு வள்ளிமலையில் "ஸ்ரீ வள்ளி திருமணம்" நாடகம் நடைபெற உள்ளது. அனைவரும் நாடகத்தினை காண வருகை தர வேண்டுமாய் வள்ளிமலை நகரத்தார் வழிபாட்டு மன்றம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: கும. அழகப்பன், தலைவர், வள்ளிமலை நகரத்தார் வழிபாட்டு மன்றம்



## சித்திரைப் பெருந்திருவிழா

தூத்துக்குடி அருள்மிகு பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேஸ்வரர் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழா ஏழாம் (07-05-2025) மற்றும் எட்டாம் நாள் (08-05-2025) நிகழ்வுகள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மண்டகப்படியில் சிறப்பாக நடந்தேறியது. நகரத்தார் பெருமக்கள் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# நிகழ்ந்த தவறில் என் பங்கு என்ன?

டாக்டர் சோம வள்ளியப்பன்





மகாத்மா காந்தியின் பேரன் டாக்டர் அருண் காந்தி. அகிம்சைக்காவே ஓர் அமைப்பை ஏற்படுத்தியவர்.

அருண் காந்தி அவருடைய தந்தையுடன் (மகாத்மா காந்தியின் சகோதரர்), தென்ஆப்பிரிக்காவில், டர்பன் நகருக்கு வெளியே 18 கி.மீ தூரத்தில் அமைந்திருந்த ஒரு கிராமத்தில் கரும்பு தோட்டங்களுக்கு நடுவில் உருவாக்கியிருந்த ஓர் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தார்.

ஆனால், இளவயதினரான அருண் காந்திக்கும், அவரது சகோதரிக்கும் அந்த கிராமம் போரடித்தது. எப்போதாவது அந்த இடத்தை விட்டு வெளியில் நகர்புறங்களுக்கு எங்காவது செல்வது என்பது மிகவும் விருப்பமானதாக இருந்தது.

அருகில் இருக்கும் டர்பன் நகருக்குச் சென்றால் அங்குள்ள திரையரங்குகளுக்குச் சென்று மனதுக்கு பிடித்த திரைப்படங்கள் பார்க்கலாம். ஆனால், அதற்கு அடிக்கடி வாய்ப்பு கிடைக்காது.

ஒருசமயம், அருணின் அப்பாவுக்கு மாநாடு (கான்பிரன்ஸ்) ஒன்றிற்கு செல்ல வேண்டியிருந்தது. மகனிடம் சொல்லுகிறார், 'நீ நமது காரை ஓட்டி வாயேன். என்னை கான்பிரன்ஸ் நடக்கும் இடத்தில் இறக்கி விடு. பின்பு காரை மெக்கானிக் கடைக்கு எடுத்துப் போ. அங்கே காரை சர்வீஸ் செய்து வாங்கிக் கொண்டு, சரியாக மாலை 5 மணிக்கு கான்பிரன்ஸ் நடக்குமிடத்துக்கு வந்து விடு"

அருணுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. "டர்பன் நகருக்கா போகிறாய்? எனக்கு அங்கே சில பொருள்கள் வாங்க வேண்டும். அதையும் வாங்கி வந்துவிடு" என்று அம்மாவும் சொன்னார். அதனால் என்ன? தாராளமாக வாங்கினால் போச்சு. 'ஊர் சுற்றலாமே'!

கிளம்பிப் போனார்கள். அப்பாவை தகுந்த இடத்தில் இறக்கி விட்டு விட்டு, காரையும் சர்விஸூக்கு விட்டு விட்டு, அருண் நேராக ஓடியது ஒரு திரையரங்குக்கு. படம் ஆரம்பிக்க நேரமானது.

படம் பார்த்து விட்டு மணியைப் பார்த்தால், ஐந்தரை. அய்யய்யோ! வேகவேகமாகப் போய் காரை எடுத்துக் கொண்டு, கான்ஃபிரன்ஸ் இடத்துக்குச் சென்ற போது மணி ஆறாகி விட்டது. அப்பா வெளியிலேயே ஒரு மணிநேரமாகக் காத்திருக்கிறார். அடச்சே! ஒரு சினிமாவுக்குப் போனதால் அப்பாவுக்குத்தான் எவ்வளவு சிரமம்!

"ஏன் அருண் இவ்வளவு தாமதம்? என்ன ஆச்சு?"

சினிமாவுக்குப் போனதாகச் சொன்னால் எவ்வளவு அசிங்கம்! அருண் வாய் தன்னையும் அறியாமல் பொய் சொன்னது, 'கார் சர்வீஸ் செய்யுமிடத்தில் தாமதமாகிவிட்டது. இப்பத்தான் கொடுத்தார்கள்'.

அப்பா முகத்தில் ஆச்சரியம். "இல்லையே அருண். உன்னைக் காணாததால் நான் அந்த மெக்கானிக் கடைக்கு போன் செய்து கேட்டேனே. அப்போதே கார் தயாராக இருந்ததாக சொன்னானே!

தலை குனிந்தார் அருண். மன்னித்துக் கொள்ளுங்கள் அப்பா, நான் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தேன். தாமதமாகி விட்டது. அதைச் சொல்ல பயந்து கொண்டு தான் பொய் சொன்னேன்".

மகனையே சற்று நேரம் பார்த்த அப்பா, பின்பு சொன்னார், "இது, நான் உன்னிடம் நடந்து கொள்கிற விதத்தில் ஏதோ தவறு இருப்பதைத்தான் காட்டுகிறது. உன்னால் தைரியமாக என்னிடம் உண்மையைச் சொல்ல முடியவில்லையே!. அப்படியென்றால், உனக்கு என்னிடம் உண்மையைச் சொல்லுமளவு நம்பிக்கை வரவில்லை. அதாவது நான் அந்த அளவு உன்னிடம் நடந்து கொள்ளவில்லை. ஆக,


சிறு வயது அருண்காந்தி அவரது தாத்தா மகாத்மா காந்தியுடன் டாக்டர் அருண் காந்தி

என் அணுகு முறையில் எங்கோ தவறு இருக்கிறது. அதனால்..”

“அதனால்!”

“நான் காரில் வரவில்லை. நீ போ. நான் வீட்டுக்கு நடந்தே வருகிறேன். வரும் வழியில், என் தவறுகளைப் பற்றி யோசிக்கப் போகிறேன்.”

கான்பிரன்ஸுக்காகப் போட்டிருந்த கோட் சூட். காலில் கனமான பூட்ஸ். நடக்க ஆரம்பித்து விட்டார் அவர். நகரைத் தாண்டிய பிறகு சாலை கிடையாது. கரடு முரடான பாதைதான். இருட்டு வேறு. நடந்தார், நடந்தார், நடந்து கொண்டே இருந்தார். மொத்தம் 18 மைல். அவருக்கு பின்னாலேயே மெதுவாக காரை ஓட்டியபடி அருண். மொத்தம் ஐந்தரை மணி நேரம் ஆனது.

அந்த ஐந்தரை மணி நேரமும் அருணின் மனம் கிடந்து தவித்தது. தான் ஒரு பொய் சொன்னதற்காக, அப்பா பாவம் இப்படி நடக்கிறாரே!

முடிவு செய்து கொண்டார். இதுவே என் வாழ்க்கையில் நான் சொன்ன கடைசி பொய்.

நம்மைச் சுற்றி இருப்பவர்களும் மனிதர்கள் தான். அவர்கள் செய்யும் தவறுகள் நமக்குப் பெரிய குற்றமாகப் படலாம். அதற்காக அவர்களைத் தண்டிக்கக்கூட துணியலாம். ஆனால், ஒருமுறை யோசித்துப் பார்க்கலாம். அந்தத் தவறைச் செய்வதற்கு நானும் எந்த வகையிலாவது காரணமாக இருந்தேனா? ♦

உ ஸ்ரீ ராமஜெயம்

**சுவீகாரம்**

நாட்டரசன் கோட்டை, இளையாத்தங்குடி கோவில் – கழனி வாசல் பிரிவு
6 மாதம் அல்லது 1 வயதிற்குள் உள்ள ஆண் குழந்தை வேண்டும்.
சுவீகாரம் விட விரும்புவோர்.
தொடர்புக்கு : 9486905906

# புத்தக வெளியீட்டு விழா



டாக்டர் சோம. வள்ளியப்பன் எழுதி, வானதி பதிப்பகம் வெளியிட்ட, ‘நான் பேச நினைப்பதெல்லாம் – கண்ணதாசன் பாடல்களில் மேலாண்மை’ என்ற புத்தகத்தை 22.04.2025 அன்று, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், திரைப்பட இயக்குனர் திரு. கரு. பழனியப்பன் அவர்கள் வெளியிட்டார். விழாவில் பதிப்பாளர் வானதி இராமநாதன், சோமையா வள்ளியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்ற இதழ் தொடர்ச்சி

# அழகப்பரின் பிள்ளைகள்

கல்லூரிகளையும் பள்ளிகளையும் தொடர்ந்து அவற்றுக்கான விடுதிகளையும் நூலகங்களையும் ஆய்வகங்களையும் கூட்டரங்கங்களையும் கட்டினார் அழகப்பர். இந்தக் கல்விச் சாலைகளும் சிக்ரி மையமும் அமைந்திருக்கும் பரப்பு சுமார் 1000 ஏக்கர் இருக்கலாம். நாட்டின் தலை சிறைந்த அரசியலர்கள், அமைச்சர்கள், கல்வியாளர்கள், விஞ் ஞானிகள் காரைக்குடிக்கு வந்து இந்தக் கல்விக் கூடங்களைத் திறந்து வைத்தனர்.



அழகப்பரின் 48ஆம் வயதில் காலன் அவரைக் கவர்ந்து போனான். ‘கல்வி நிலைப் பெருங்கடலை கணப்பொழுதில் முடித்தாயே, பாவி! பாவி!’ என்று காலனை சபித்தார் கண்ணதாசன்.

இந்தியா வெள்ளி விழாக் கொண்டாடிய போது (1972) நாங்கள் எட்டாம் வகுப்பில் இருந்தோம். அதே ஆண்டு அழகப்பாக் கல்லூரியும் வெள்ளி விழாக் கொண்டாடியது. பிரதமர் இந்திரா காந்தி வருகை தந்தார். காரைக்குடியில் ராத் தங்கினார். அதிகாலையில் புறப்பட்டார். முதல் நாள் நிகழ்ச்சியில் அவரைப் பார்த்தும் கண் நிறையவில்லை. அடுத்த நாள் ஹெலிகாப்டர் தளத்தில் திரளாகக் கூடி நின்றோம். கூட்டத்தைப் பார்த்த இந்திரா, ஜீப்பில் சுற்றி வந்தார். கண்ணெட்டும் தூரத்தில் ஆசை தீரப் பார்த்துக்கொண்டோம். இப்படியாக இரண்டு பிரதமர்கள் காரைக்குடி வருவதற்கு அதன் கல்விக்கூடங்களே காரணமாகின.

## ஆசிரியர் பெருமை

எல்லாக் கல்விக் கூடங்களும் பன்னாட்டுத் தரத்தில் அமைந்தவை. நான் பயின்ற மாதிரி உயர்நிலைப் பள்ளியில் நான்கு மைதானங்கள் இருந்தன. இந்த மைதானங்களுடன் நினைவுக்கு வருகிற ஆளுமை உடற்பயிற்சி ஆசிரியர்- பழனியப்பன் சார். எங்கள் வட்டாரத்தின் எல்லா வசைச் சொற்களும் அவருக்கு அத்துப்படி. அவர் எப்படி ஏசினாலும் மாணவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். காரணம் அவருக்கு விளையாட்டிலும் மாணவர் நலனிலும் இருந்த அக்கறை. மாவட்ட மாநிலப் போட்டிகளில் எம் சகாக்கள் முன்னணி வகித்ததற்கு அவர்தான் காரணம்.



மு. இராமனாதன்

எனக்குப் பள்ளி நாட்களில் ஆதர்சமாக விளங்கிய ஆசிரியர்கள் இருவர். ஒருவர் அரசப்பன் சார். கணிதம் பயிற்றுவித்தார். மேல் சட்டையும் காற்சட்டையும் வெள்ளை நிறம்; இடையே மெலிதான கறுப்புப் பட்டியும் மினுக்கப்பட்ட காலணிகளும் அணிந்து வருவார். வகுப்பில் கணிதமன்றிப் பிறிதொன்றை அவர் பேசி யாரும் கேட்டிருக்க முடியாது.

நாங்கள் படித்த காலத்தில் பள்ளிப் படிப்பு 11 ஆண்டுகள். 11 ஆம் வகுப்பில் (எஸ்.எஸ்.எல்.சி) பொதுத் தேர்வு இருக்கும். ஒரு விருப்பப் பாடத்தை தேர்வு செய்ய வேண்டும். நான் எடுத்தது இயற்கணிதமும் வடிவகணிதமும் (algebra & geometry). ஆக, பொதுக் கணிதம் விருப்பக் கணிதம் என இரண்டு கணிதத் தேர்வுகள். நான் இரண்டிலும் நூறு மதிப்பெண் வாங்குவேன் என்று சார் நம்பியிருக்கிறார். அது எனக்குத் தெரியாது. சில ஆசிரியர்களிடம் சொல்லியிருக்கிறார். அது எனக்குப் பிற்பாடு தெரிய வரும். நான் பொதுக் கணிதத்தில் முழு மதிப்பெண் எடுத்தேன். விருப்பக் கணிதத்தில் குறைந்துவிட்டது. சான்றிதழ் கிடைத்ததும் சாரைப் பார்க்கப் போனேன். எனது மதிப்பெண்கள் அவருக்கு முன்பே தெரிந்திருந்தது. சார் என்னோடு பேசவில்லை. எனக்கு மதிப்பெண் குறைந்ததை விட சாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாமல் போய்விட்டோமே என்கிற வருத்தம் நெடுநாள் நீடித்தது.

அடுத்தவர் நாகலிங்க ஐயா. தமிழைப் பரிந்து ஊட்டியவர். கம்பனின் ‘கண்டெனன் கற்பினுக்கணி’யும் இளங்கோவின் ‘தேரா மன்னா’வும் மனதுக்கு நெருக்கமாகக் காரணமானவர். யாரும் நோட்ஸ் படிக்கக் கூடாது என்பதில் ஐயா கறாராக இருந்தார். ஆனால் திருத்தணியிலிருந்து தென்குமரி வரை சந்தையில் கிடைக்கிற எல்லா உரை நூல்களையும் வாங்கிப் படித்துவிடுவார். ஒரு முறை,

ரமேஷ் வட மாவட்டங்களில் மட்டும் புழக்கத்தில் இருந்த ஒரு நோட்ஸைப் படித்து எழுதிவிட்டான். ஐயா கண்டுபிடித்து விட்டார். அது முதல் அவனை 'நோட்ஸ்காரா' என்றுதான் விளிப்பார்.

### வீடும் கொடுத்த விழுச்செல்வன்

இன்னொரு ஆசிரியரையும் மறக்க முடியாது. அவர் எங்கள் பள்ளி ஆசிரியர் அல்லர். ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியர், கவிஞர், பேச்சாளர், மா. கண்ணப்பன். ஒரு முறை கல்லூரியில் அழகப்பர் பிறந்த தின விழாக் கூட்டம் நடந்தது. நாகலிங்க ஐயா பள்ளி மாணவர்கள் சிலரைக் கூட்டிக்கொண்டு போனார். மா.கண்ணப்பன் அன்று வ.சுப.மாணிக்கம், அழகப்பரைக் குறித்து எழுதிய பாடல்களை மையமாக வைத்துப் பேசினார்.

வ.சுப.மாணிக்கம், அழகப்பர் வாழ்ந்த காலத்திலேயே அழகப்பா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராக விளங்கியவர். அழகப்பரின் மறைவுக்குப் பின்னர் கல்லூரி முதல்வரானார் (1964-70). ஒரு தமிழாசிரியர் கல்லூரி முதல்வரானது அநேகமாக அதுதான் முதல் முறையாக இருக்கும். வ.சுப பிற்பாடு மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணை வேந்தராகப் பணிபுரிந்தார்.

வ.சுப அழகப்பரின் கொடைச் சிறப்பை பண்டைய அரசர்களோடு ஒப்பிடுகிறார். முதலில் கரிகாலன். அவன் காடு வெட்டி நாடாக்கினான். சரி, அதை மக்களின் வரிப்பொருளால் தானே செய்தான்? (அழகப்பரைப் போல்) சொந்தப் பொருளால் செய்யவில்லையே என்பது வ.சுப.வின் கேள்வி. அடுத்து, பாரி. அவன் முல்லைக்குத் தேர் ஈந்தான். ஆனால் அவன் மாளிகையை ஈந்தானா? மூவேந்தர்களை நோக்கி 'குன்றும் உண்டு' என்றுதானே கபிலர் பாடுகிறார்? ஆனால் அழகப்பர் அவரது மாளிகையை ஈந்தார்.

கலைக் கல்லூரிக்கு அனுமதி வந்தபோது கட்டடம் இல்லாமல் எப்படிக் கல்லூரி 'காந்தி மாளிகை'யில் இயங்கியதோ, அது போல் மகளிர் கல்லூரிக்கு அனுமதி வந்தபோதும் கட்டடம் தயாராகவில்லை. கோட்டையூரில் தனது மாளிகையைக் கல்லூரிக்காகத் திறந்து விட்டார் அழகப்பர். இதை வ.சுப இப்படிப் பாடினார்:

> கோடி கொடுத்த கொடைஞன்; குடியிருந்த
> வீடும் கொடுத்த விழுச்செல்வன்; - தேடியும்
> அள்ளிக் கொடுத்த அழகன்; அறிவூட்டும்
> வெள்ளி விளக்கே விளக்கு!

### மாணவர் மகிமை

படிப்பு எந்த அழுத்தத்தையும் தராத நாட்களாக அந்தக் காலம் இருந்தது. அவரவர்கள் விருப்பமான துறையையும் தொழிலையும் தேர்ந்தெடுத்தோம். இயற்பியலை ஆர்வத்தோடு படித்த சந்திரமோகன் முனைவராகி ஒரு கல்லூரி முதல்வருமாகினான். லெட்சுமணசாமி தனக்கு விருப்பமான வேதியியலைக் கடத்திக்கொண்டு போய் அமெரிக்காவின் தலை சிறந்த பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கிறான். சுந்தரம் பென்சில் ஓவியத்தில் விற்பன்னன். அவனது நகைக் கடை கல்லுக்கட்டியில் இருக்கிறது. கடையின் சுவர்களை அவன் அச்சு அசலாக வரைந்த ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. Rm.Rm. ராமசாமி பொறியாளன், இப்போது சிங்கப்பூர்க்காரன். மோகன் பெங்களூரில் மென்பொருள் எழுதுகிறான். கண்ணன் மின் பகிர்வில் கரை கண்டவன்.

MRT ராஜேந்திரன் கட்டுமான வேதிப்பொருட்களில் வல்லுநர். 'ஸ்டைல்' முரளி - வருமான வரி அலுவலர், லெட்சுமணன்- பல் மருத்துவர், ஷீலா சாந்தகுமாரி - விஞ்ஞானி, தெரசம்மா - ஆசிரியை. கே.எஸ். கிருஷ்ணனும், செல்வநாதனும், அப்துல் ஜபாரும் ஹர்ஷ்காந்தும் சொந்தத் தொழில் செய்கிறார்கள்.

### 'எவர் மகவும் சொல்ல மகிழ்வான்!'

இதில் ஹர்ஷ்காந்தைப் பற்றிச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். சேட்டு வீட்டுப் பையன்களின் சிவந்த நிறம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அவனது அப்பா காரைக்குடி நகைக் கடையொன்றில் எழுத்தராக இருந்தார். நாங்கள் எல்லோரும் பள்ளிப் படிப்பு முடிந்ததும் புகுமுக வகுப்புக்குக் (PUC) போனோம். ஹர்ஷ்காந்த் மும்பைக்குப் போனான். தந்தையாரின் உடல் நலம் குன்றியதால் இள வயதிலேயே ஆபரணத் தொழிலில் ஈடுபட்டான். பெரும்பாடுபட்டுக் கையூன்றி எழுந்தான். தம்பி, தங்கைகளைப் படிக்க வைத்தான். மணம் செய்வித்தான். நீண்ட நாள் மும்பை வாசத்திற்குப் பிறகு இப்போது சூரத்தில் வசிக்கிறான்.

கடந்த மாதம் ஓர் அலுவலின் பொருட்டு சூரத் போயிருந்தேன். ஹர்ஷ்காந்த் வீட்டுக்கும் போனேன். அந்த வீட்டை அவன் வாங்கி ஆண்டு சில ஆகியிருக்க வேண்டும். ஆகவே சுற்றிக் காட்டவில்லை. நாங்கள் இருவரும் அழகப்பரைப் பற்றியும் பள்ளி நாட்களைப் பற்றியும் பேசலானோம். ஹர்ஷ்காந்தின் மனைவி 'ஸ்கூலைப் பத்திப் பேச ஆரம்பிச்சா இவருக்கு வேற ஒண்ணும் வேண்டாம்' என்று என்னிடம் செல்லமாக சலித்துக் கொண்டார். ஹர்ஷ்காந்த் மனைவியிடம் சொன்னான்:

'அன்பே, நாங்கள் வேறு எதைப் பற்றிப் பேசுவோம்? நாங்கள் அழகப்பரின் பிள்ளைகள் அல்லவா?'

மு இராமனாதனின் சொந்த ஊர் அரியக்குடி. பன்னாட்டு அரசியல், பொறியியல், சமூகம், கல்வி, இலக்கியம் சார்ந்த கட்டுரைகளைத் தமிழில் தொடர்ந்து எழுதி வருகிறார். இதுவரை ஆறு நூல்கள் வெளியாகியுள்ளன.

மு. இராமனாதன் பிரிட்டனின் சார்ட்ட் பொறியாளராகவும் ஹாங்காங்கின் பதிவு பெற்ற பொறியாளராகவும் பட்டம் பெற்றவர். ஹாங்காங், சவுதி அரேபியா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் பணியாற்றியவர். இவரது பொறியியல் கட்டுரைகள் பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியாகியுள்ளன. ♦

# கம்பன் திருநாள்...




அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



ரசிகமணி (டிகேசி) சிதம்பரநாத முதலியார் என்கிற அறிஞர் திருநெல்வேலியில் வாழ்ந்தார்.அவர் வீட்டு முற்றம் வட்டமாகத் தொட்டி வடிவில் இருக்குமாம். இதை "வட்டத் தொட்டி" என்று அழைப்பார்கள். இங்கு நாள்தோறும் கூடுகிற இலக்கிய ஆளுமைகள் ஏராளம். இந்த வட்டத் தொட்டி சபை முன்மொழிந்த நல்ல நல்ல சேதிகள் ஏராளம். முக்கியமானது, தமிழக அரசுக்கு முத்திரைச் சின்னமாக திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரம் பரிந்துரைக்க முகிழ்த்த சிந்தனை.

அரசியலில், இலக்கியத்தில் இந்த வட்டத்தொட்டிக்கு வந்து சென்ற அறிஞர்களில் காரைக்குடி கம்பன் அடிப்பொடி ஐயா "சா.க." வும் முக்கியமானவர்கள். ஒருநாள் சபையில் கம்பராமாயணம் அரங்கேறிய திருநாளான பங்குனி மாதம், அத்தம் நட்சத்திரம் பற்றிய பேச்சு நடந்திருக்கு. அந்த நாளை கம்பன் திருநாளா பாட்டரசன் கம்பன் துயில் உறங்கும் நாட்டரசன் கோட்டையில் வைத்துக் கொள்ளுவோம். முந்தைய மூன்று நாளிலும் கம்பன் திருநாளா காரைக்குடியில் வைத்துக் கொள்வோம் என ஒரு வரலாற்று முன் வடிவம் அரங்கேறியிருக்கிறது.

இப்படி 1939, ஏப்ரல் 2-ஆம் தேதி (வெகுதானிய வருஷம், பங்குனி, 2) தொடங்கியதுதான் முதல் கம்பன் திருநாள். இது கம்பன் விழா இல்லை ஆத்தா. திருநாள். திருநாளுக்கு எழுதி வரும் அழைப்பிதழில் இருந்து திருநாட்களை நாட்டரசன்கோட்டையில் நிறைவு செய்யும் வரை அனைத்தும் ஒரு நாளும் ஒரு பொழுதும் நெறிபிறழாதவை....

திருநாள் தொடக்கமும் நிறைவும் "கம்பன் வாழ்க.- கம்பன் புகழ் வாழ்க. - கன்னித் தமிழ் வாழ்க" என கம்பன் அடிப்பொடி ஓங்கி ஒலிக்க, ஒவ்வொரு அடியின் நிறைவிலும் பார்வையாளர்கள் "வாழ்க ... வாழ்க" என சேர்ந்திசைக்கும் நடைமுறையும் அன்று தொடங்கியதுதான்.

"காரைக்குடியில் கம்பன் பணி தொடங்கி விட்டது. இனி அது உலகெங்கும் பரவி விடும்..." இது டி.கே.சி. ஐயா

ஆத்தா பகச்சாலி நீ பங்குனிப் பழம்... மகம், பூரம், உத்தரம், அத்தம்னு நாலு நாளும் பரபரப்பாய் இருப்பியே. உங்க சாமி அறையிலே எத்தனை வகையான கம்ப ராமாயணப் புத்தகங்கள் ....

ஆமா ... எனக்கு எல்லாம் ஆத்தா வீடு கொடுத்தது .... அதில ஆகச் சிறந்தது இந்த "இராமயணம்"... பள்ளிக் கூடம் முறையாப் படிக்கலை... ஐயாவோட மார்க்கண்டயன் கோயில்ல நடக்கிற கூத்து பார்க்க கிடைச்சதுதான் இந்த இராமயணச் சுவை. கூத்துக் கட்டுறவுக பவித்திரமா இருக்க, படுக்க, குளிக்க, சாப்பிட என ஆத்தா வீடே திருவிழாவாய் இருக்கும் .புரட்டாசியிலும், பங்குனியிலும் எனக்கு இராமாயணம் தவிர எந்த உலக நடப்பும் தெரியாது... பகச்சாலியின் வெண்கலக் குரலில் வந்தது பதில் ... இதைத்தானே எதிர்பார்த்தோம் சொல்லாத்தா... என்று ஆவலோடு சேர்ந்து கேட்கத் தொடங்கியது திருக்கூட்டம்.

## சுவீகாரம்

நன்கு படித்து வேலையில் இருக்கும்
25 வயது வரை உள்ள ஆண்
பையன் சுவீகாரத்திற்குத் தேவை.
எந்த கோவிலும் சம்மதம்
தொடர்புக்கு 63697 95483


முதன் முதல் திருநாளில் சொல்லிய ஆசியும் வாழ்த்தும்.

காலக் கெடிகாரம் ஐயா கம்பன் அடிப்பொடிக்கு என்று துள்ளியமாய் இயங்கும். திருநாளுக்கு வரும் விருந்தினர்கள் முக்கியமில்லை ... நேரம் மிக முக்கியம். கலைஞர் கருணாநிதி அவர்களே முதல்வராக பதவியிலிருந்த பொழுது திருநாளுக்கு அழைக்கப் பெற்று அரங்கிற்குத் தாமதமாய் வந்து சேர, அவருக்காக ஒரு நொடிப் பொழுதும் நிகழ்வுகள் நிற்கலையே... குறித்த நேரத்தில் கம்பன் அடிப்பொடி ஒலி பெருக்கி அருகே வந்தார் “கம்பன் வாழ்க.... எனும் பாஞ்ச சன்னியத்தை எடுத்தூத... தொடங்கி விட்டது விழா.

ஆத்தா... நேர எல்லைகளுக்குள் கட்டுப்பட்டு விடாத நம்ம கவிஞர் கண்ணதாசனே... பறந்து நேரத்திற்கு வந்து கவியரங்கில்,

கடிகாரம் என் பகைவன்
கணேசர் பயத்தினிலே
காலத்தை நானறிந்து
கடுகி இங்கே ஓடிவந்தேன்.

என்று கவியரங்கைத் தொடங்கியிருக்கிறார்.

டில்லிக்கு ராசான்னாலும் சரிதான்... நம்ம ஊர் திருநாளுக்கு வந்துட்டா விழா நடைமுறைகள் யாருக்காகவும் நூல் பிசகாது. திருநாள்ல நடக்கிற நிகழ்வுகள் எல்லாம் புதியதாகவும் அர்த்தம் பொதிந்ததாகவும் இருக்கும். இங்கே நடக்கிற பட்டிமன்றத்தை பார்ப்போமே என்று ஆசைப்பட்டிருக்கிறார் இன்னுமொரு முதலமைச்சர். செட்டிநாட்டில் ஒரு திருமண வைபவத்திற்கு வந்தவர், திருநாள் கூடத்திற்கு எந்த முன்னறிவிப்புமின்றி வந்து, பார்வையாளர்கள் மத்தியில் அமைதியாக அமர்ந்திருக்கிறார். கம்பன் அடிப்பொடிக்கே பிறகுதான் அவர் வந்திருப்பதே தெரிகிறது. நிகழ்வுகள் எந்தச் சலனமும் இன்றி முடிந்தது. முதல்வரின் வருகை காட்டுத்தீ போல் பரவி, விழா அரங்கு தொடங்கி வீதி வரை ஒரே மக்கள் வெள்ளம். முதல்வரை மேடையேற்றி ஓரிரு வார்த்தை பேச வைத்தால், கூட்டம் அமைதியாகக் கலைந்து விடும் என்ற யோசனையை முன் வைத்தார்கள். அதற்கு கம்பன் அடிப்பொடியும் சம்மதிக்கவில்லை. விழாவிற்கு தொடர்பில்லாதவர்களை மேடையில் தோன்றச் செய்வதோ, பேசச் சொல்வதோ கம்பன் மேடைக்கு உகந்ததல்ல என்பதால் முதல்வரும் இசையவில்லை. கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு வெளியே அமைக்கப் பெற்றிருந்த பந்தலில், ஒரு நாற்காலியைப் போட்டு, அதில் ஏறி நின்று முதல்வர் காட்சியளிக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த நாற்காலியில் ஏறி நின்று, ஒரு வார்த்தை கூடப் பேசாது, கையசைத்து, வணக்கம் மட்டும் சைகை வழியில் சொல்லி விடைபெற்றார் அந்த முதல்வர். அவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்றால் வியப்பாக இல்லையா பிள்ளைகளா....

“இறப்பினும், திருஎலாம் இழப்ப எய்தினும்
துறப்பிலர் அறம்எனில் சூரர் ஆவதே”

எனும் கம்பனிடம் பெற்ற ஆணிவேர், ஐயா கம்பன் அடிப்பொடி அவர்களிடம் விரவி இருந்ததே இந்த வைராக்கியங்களுக்குக் காரணம். வெற்றிலைச் செல்வத்தை நேர் செய்து கொண்டே தொடர்ந்தாள் பகச்சாலிப் பாட்டி.

உலகில் எங்கும், எம்மொழிக்கும் தமிழ்த் தாய்க்கு திருக்கோயில் இல்லை. காரைக்குடியில் தமிழ்த் தாய், அகத்தியர், தொல்காப்பியர், கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஒலித்தாய், வரித்தாய் ஆகியோரின் சிலா வடிவங்களோடு அறுகோண அமைப்பிலான கல் திருப்பணியை தமிழக அரசு உதவியோடு செய்வித்த பெருந்தகை கம்பன் அடிப்பொடி அவர்கள் தான்.

கம்பன் அடிப்பொடி தன் முனைப்பால், வைராக்கியத்தால் தொடங்கிய கம்பன் திருநாள், 87 ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. எந்த வெற்றியும் தொடங்குவதில் மட்டும் இல்லை அது தொடர்வதில் தானே இருக்கிறது, என நிறைவு செய்தாள் பகச்சாலிப் பாட்டி.

நல்லவர்கள் எல்லாரும் நலம்சிறந்து
மகிழ்பூத்து நாளும் வாழ்க
அல்லவர்கள் அவர்எல்லாம் நல்லவர்கள்
ஆகி, நலம் அரும்பி வாழ்க
பல்லவர்கள் சோழரோடும் பாண்டியர்கள்
வளர்த்தகலை படர்ந்து வாழ்க
எல்லைஇலான் திருஅருளால் இடுக்கண்ஒழிந்து
இந்தியநாடு இனிது வாழ்க...

இது சா.கணேசன் ஐயா தனது அகவை அறுபது நிறைநாளில் எழுதிய வாழ்த்து. உலகம் தழைக்கச் செய்ய வழங்கிய மொழி வடிவ ஆசி ...

கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன் அவர்கள் தொகுத்து, கம்பன் அடிப்பொடி நூற்றாண்டு விழாவில், “கம்பன் அடிப்பொடி கலைக் களஞ்சியம்” எனும் ஒரு நூலை உமா பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. இதில் கம்பனை கம்பன் அடிப்பொடியை கொண்டாடுபவர்களுக்கான ஆயிரமாயிரம் செய்திகள் குவிந்து இருக்கிறது.

வாருங்கள் கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்.

11-ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 10.06.1953

மறைவு : 25.05.2014

"திருப்பணிச் செம்மல்" வேகுப்பட்டி

திரு.சா.அண. முத்துப்பழனியப்ப செட்டியார்

முத்தாய்ப் பிறந்து முதிர்ந்து பழமாகி
முத்துப்பழனியப்பர் என்ற பெயருக்கு இணையாகி
சொத்தாய் இருகோவில் ஊருக்கு உவந்து
வித்தாய் பல தர்மம் விதைத்து வளர்ந்து
நற்தாய் மனமறிந்து நலியாமல் பேணி
கொத்தாய் மணம்பரப்பும் குழந்தைகளைப் பெற்று
சித்தாய் பவனிவரும் பேரன்பேத்தி கண்டு
வற்றாமல் ஊறும் விஜயவாடா தொழிலமைத்து
உற்றார் உறவினருக்கு ஒளிவிளக்காய் திகழ்ந்து
உமையொரு பாகமான மனையாளைப் பிரிந்து
கொடியவன் அவசரமாய் கூப்பிட்டான் என்றதனால்
கூற்றனவன் குரலுக்கு கைலாயம் சென்றீரோ?
குடும்பத்தார் கலங்குகிறோம் மீண்டும் வந்து சேர்வீரா?
குவலயத்தார் நலம்பேணத் திருப்பணிகள் செய்வீரா?
கொண்டாடும் கல்யாண வெங்கடேசர் காண்பீரா?
விண்ணார்ந்த ஆஞ்சநேயர் தரிசனம் பெறுவீரா?

மனைவி : மு. மீனாட்சி
மகள்கள் : S. சொர்ணவள்ளி, T. சிங்காரம்,
V. கற்பகவள்ளி, S.விஜய் அழகப்பன்,
S. கிருஷ்ணவேணி, M. சொக்கலிங்கம்

பேரன், பேத்திகள் : S. திருப்பதி,
S. முத்துப்பழனியப்பன்,
V. அஜய் சுப்பிரமணியன்,
V. அலமு காத்யாயினி, S.அழகு மீனாட்சி,
S. ஹன்ஷிகா சொர்ணலெட்சுமி
மற்றும் முத்துப்பழனியப்பா & கோ ஊழியர்கள்,
விஜயவாடா


# திருமந்திரச் சுவை – 46

# பிறவாமை வேண்டும்



பூங்குன்றம் இராமசாமி

அனைவரும் வேண்ட வேண்டிய ஒன்று எது?

முத்தி இன்பமே!

அஃதாவது, இறையடி இணைந்து இறைப் பேரின்பம் அனுபவித்தல் ஒன்றே!

அஃதாவது, மறுபடி வேறோர் தாய் வயிற்றில் கருவெனத் தோன்றாது, உயிர் இறையோடு இணைய வேண்டும். அப்போதே மறுபிறவி உண்டாகாது.

அஃது உடனே கிட்டிவிடுமா?

கிட்டாது.

அதற்கு வழி, நாம் செய்துற்ற பாவத்தையும், புண்ணியத்தையும் முதலில் நாமே அனுபவித்துத் தொலைக்க வேண்டும். பின், இனிப் 'பாவபுண்ணியங்களின் இருப்பு இல்லை' என்கிற சமநிலை உண்டானதும்தான் நற்குருவின் வழிப் பிறவாமை சித்திக்கும்.

இதனைத் திருமூலர் பாடல் வழிக் காண்போம்.
இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத்து இவ்வுடல் வந்தெமக்கு ஆனதென்று
அக்காலம் உன்ன அருள்பெற லாமே (10.2106)

இவ் உடலை நீக்கி இனி ஓர் உடலிலே போய்ப் பிறவாவண்ணம் உய்யும் வழியை நாடுங்கள். எமக்கு எக் காலத்தில், எப்படி இவ்வுடல் வந்தது என்று அக்காலத்தை (மூலம்) எண்ணி ஆராயச் சிவனருள் சித்திக்கும்.

இதனை இன்னோர் இடத்து,
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே (10.2104)

நம் குலம் (மக்கள் குலம்) ஒன்றே. நம் தெய்வம் (சிவம்) ஒன்றே. ஆதலால், நல்லனவே நினைக. நமக்கு நமன் இல்லை. நாம் சென்று அணுகும் கதியும் வேறில்லை. நும் மனத்து இறை எண்ணம் நின்று நிலவ அவனை நீர் நினைந்து உய்யுங்கள்.

சிவன் ஒருவனை நினைந்து வழிபடுவர். அவனோடு ஒன்றுவார். அவர் மீளப்பிறவார். அவன் நல்வழி காட்டுவான். அவரிடத்து எமன் வாராது சிவகணங்களே வந்து சிவகதி நல்கும். ✶

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



# இராம காவியம்

## அனுமன்- ராவணன் சந்திப்பு - (16)

வந்ததை பதிவு செய்ய வானரத் தன்மையாலே
சொந்தமாய், ராமன் சொல்லாத வேலையை செய்தான்.
அழகிய இலங்கையை அசிங்கப் படுத்தினான்.
இந்திரஜித்தால் கட்டுண்டு இலங்கை வேந்தன் முன்
விந்தி நடப்பவனாய் வேடிக்கை செய்து நின்றான்.
அன்னையை விட்டு அடிபணிவாய் இல்லையேல்
என் அண்ணலால் மிதிபட்டு அழிவாய் என்றான்
உன்னவனை போரில் வெல்வேன்
இன்னவளை மணந்து கொள்வேன்
எடுத்துச் சொல் என்றான் ராவணன்
தடுத்தவன் வாலில் தீயை வைத்தான்
இட்ட தீ இவனுக்கு இல்லை
இலங்கைக்கு என்பதை அறியான்
அன்னையின் ஆசியால் சுடவில்லை தீயது
இலங்கை எரிந்தது எங்கும் படர்ந்தது
நீரிலே தீயை அணைத்தான் மற்ற
ஊரிலே இட்ட தீ அணையும் முன்னர்
ராமனை காணவே திரும்ப லானான்

## ராமன் வசம் சூடாமணி கொடுத்தல் - (17)

அன்னை தன் உடையில் பொத்தி
அருமையாய் காத்த சூடாமணியை – கண்ணொத்த
என்னவர் அறிய எடுத்துச் செல் என்றதை
மன்னவனிடம் தந்தான் மண்டியிட்டான்
பொருள் பொதிந்த பொன் நகையை
அருள் பெருக்கோடு அணைத்து – தன்
உருவோடும் உளமோடும் உறைந்தவளை நினைத்தே
பெருமை கொண்டான் ராமன்.
இட்ட பணி ஏற்றுச் செய்து
பட்ட துயர் நீங்க – என்
உயிர் ஒத்தவனே உத்தமனே என
கட்டித் தழுவினான் அனுமனை.
தடைகளை தகர்த்தெறிந்து வானர
படைகளை நடத்திச் செல்ல– பாதை
அமைக்கும் வழியை அனைவரும் பேச
இமைக்க மறந்தே கேட்டான்.

(தொடரும்)



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 41 (கல்லாமை)

408) நல்லவர்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.
நல்லார் பட்ட வறுமை கொடியதா
நன்றாய் யோசி இல்லவே இல்லை
கல்லார் பட்ட செல்வம் பெரியதா
கருத்தாய் யோசி இல்லவே இல்லை
கல்லார் பெற்ற செல்வம் தன்னிலும்
கற்றார் பெற்ற வறுமை பெரியது
நல்லார் கல்லார் பொல்லார் யாரையும்
நாளும் உயர்த்திடக் கல்வியே திறவுகோல்.

410) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.
மனிதரை நோக்க விலங்குகள் இழிவெனில்
மனிதரில் இழிந்தவர் கல்லா தாரே
மனிதரில் விலங்கினை விடவும் இழிந்தவர்
வாழும் இளமையில் கல்வியை இழந்தவர்
கல்வியை இழப்பது கண்களை இழப்பதாம்
கண்களை இழப்பது காட்சியை இழப்பதாம்
காட்சியை இழப்பது கருணையை இழப்பதாம்
கருணையை இழப்பது வாழ்வையே இழப்பதாம்.

அதிகாரம் – 42 (கேள்வி)

411) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் –அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.
செல்வத்துள் சிறந்தது எச்செல்வம் அச்செல்வம்
செவிவழிக் கேட்டு சிந்தையில் உணரும்
செல்வமாம் கல்விச் செல்வமே சிறந்தது
செல்வத்தில் முதன்மையாய் திகழ்வதும் அதுவே
எதையும் கேட்டு சிந்தையுள் வாங்கி
என்றும் மேம்படும் அறிவே உயர்ந்தது
இதயம் பதிய நல்லுரை கேட்பின்
எண்ணம் வளம்பெறச் செய்யும்செவிச் செல்வம்.

412) செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.
செவிக்குணவு மட்டுமே அறிஞரின் தேடல்
செவிக்குணவு கொஞ்சம் கிடைக்காத நேரம்
அவர்உணர்வார் வயிற்றின்பசி அப்போது மட்டும்
அவர்பசிக்கு சிறிது உணவை உண்பதுவும் உண்டு
செவிக்குணவால் சிந்தைவளம் பசிக்குஉணவு மிகுதி
தின்பவர்கள் சிந்தனையில் மதமதப்பே மிஞ்சும்
தவிக்கும்பசி தனைஅடக்கும் ஆற்றல்வரப் பெற்றால்
தனைஉணரும் தகுதிவரும் சிந்தைசீர் அடையும்.



ஆச்சி வீடு அமர்க்களப்பட்டது. மகன்கள், மருமகள்கள், மகள்கள், மாப்பிள்ளைகள், பேரன் பேத்திகள் என்று மொத்தம் 27 பேர்கள் என்று அந்தக் காலத்துக் கூட்டுக் குடும்பமாய் குதூகலமாக இருந்தது. அங்குமிங்கும் கொண்டு வந்த பெட்டிகளைப் போட்டிருந்தார்கள். அதை எல்லாம் ஆச்சி ஒவ்வொன்றையும் வைக்க வேண்டிய இடத்தில் வேலையாட்களை வைத்துச் சரி செய்து கொண்டிருந்தார். ஆனாலும், ராஜ்மோகனுக்குக் கொடுத்த அறையை அப்படியே அவர் உபயோகத்திற்கு மட்டும் வைத்து விட்டார்.

சமையல்காரர், குட்டியோடு இன்னம் இரண்டு பேர்கள் தற்காலிகமாக வேலைக்குச் சேர்த்திருந்தார். பிள்ளைகள் விருப்பப்பட்ட பலகாரம், சாப்பாடு என்று தடபுடலாக நடந்தது.

இத்தனை சந்தோஷத்திலும் ஆச்சிக்கு ஒரு மனக்குறை இருக்கத்தான் செய்தது. ஆச்சியின் ஒரே தம்பி திருச்சபை. தம்பி மனைவி உண்ணாமலையும் இப்போது உயிருடன் இல்லை என்றாலும், அவர்களுக்குப் பல காலத்திற்குப் பிறகு பிறந்த ஒரே மகன் ரத்னசபாபதி மட்டும் பல காலமாக இந்தக் குடும்பத்தில் ஒட்டுவதில்லை. அவன் பிறந்து வளர்ந்து பெரியவனாகிப் படிப்பதற்கு அமெரிக்கா போனவன், அத்தை மகன் என்றோ, அத்தை குடும்பம் யாருடனும் மொஃபைலில் கூடப் பேசுவதில்லை. ஆனாலும், தன் குடும்ப உறவுகளுக்குப் பெண் பார்த்து முடிவு செய்த போது, ரத்னசபாபதிக்கும் பெண் பார்த்து முடிவு செய்தாள். ஆச்சி இதை அவனிடம் சொன்ன போது அவன் சம்மதத்தைச் சொல்லாமல் நேரில் வரும் போது பேசிக் கொள்ளலாம் என்று கூறினான். அதையும் மீறி ஆச்சி வீட்டுக் கல்யாணம் மூன்றோடு இந்தக் கல்யாணத்தையும் சேர்த்து நான்கு கல்யாணங்கள் என்று ஆச்சி முடிவு செய்தார். எல்லோரும் வந்த நிலையில் அவன் மட்டும் நேற்றுத்தான் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டிருக்கிறான். அவனை மதுரை ஏர்போர்ட்டுக்குச் சென்று அழைத்து வர ஆச்சி காரை அனுப்பி வைத்தார்.

அன்று வெள்ளிக்கிழமை. முருகப்பன் ஜோஸ்யரை கூட்டி வருவதாகப் போனில் சொன்னான். பிள்ளைகள் ஜாதகத்தை எல்லாம் ஒரே நாளில் பார்த்துவிட்டுப் பரிகாரம் செய்யச் சொன்னால் செய்ய வேண்டும் என்று செட்டியாரிடம் சொன்னார். ஆச்சி, எல்லோரையும் ஒன்றாக நிற்க வைத்துக் குட்டியைத் திருஷ்டி சுத்தச் சொன்னார். குட்டி திருஷ்டி சுத்தும் போது ஆச்சி சத்தமாகச் சொன்னார்.

பரப்பாக் கண்ணு, பாவி கண்ணு, முட்டைக் கண்ணு, மூளிக் கண்ணு, நாய்க் கண்ணு, நரிக்கண்ணு, பேய்க்கண்ணு, பிசாசுக் கண்ணு, பாம்புக் கண்ணு, பல்லிக் கண்ணு, உற்றார் கண்ணு, பெற்றோர் கண்ணு, கடுகடுகடுகடு, சுடுசுடுசுடுசுடு, தூத்தூத்தூ, தூத்தூத்தூ.

# நகரத்தார் 114 சிகரத்தார்



காரைக்குடி நாராயணன்

எல்லோரும் துப்புங்க.

ஆச்சி சொன்னபடி எல்லோரும் துப்பினார்கள். பேரன் பெரியண்ணன் மட்டும் சிகப்பி ஆச்சியைக் கேலி செய்தான்.

ஆயா, என்ன பழக்கம் இது. துப்பச் சொல்றீங்க. டர்ட்டி, டர்ட்டி யாரும் பாத்தா அசிங்கம்பாங்க.

அடே என் கண்ணு. பெரியண்ணன் செல்லம். அயல்நாடுகள்ல வீட்டுல சமைக்குற பழக்கமே கிட்டத்தட்ட அழிஞ்சு போச்சு. ஹோட்டல்ல கூகுளில் ஆர்டர். வீடெல்லாம் விடுதிகளாயிடுச்சு. பெண்களாத் தனியா இருக்குற வீடுகள் 65%, அப்பா, அம்மாவோட இருக்குறது 29%, எல்லாரும் ஒன்னா இருக்குறது 6%. இப்படி குடும்ப உறவுகள் பிரிஞ்சு கெடக்குறதாலதான் உடல்நலம், மனநலம் கெட்டுப் போகுது. இந்த SWIGGI. ZAMOTO, UBBER-ன்னு ONLINE ORDERகள் வந்து குடும்ப சந்தோஷங்களே OUT OF ORDER ஆயிடுச்சு. இதபாருடா பெரியண்ணன். பிறர் நினைக்குறதை எழுதுற காகிதமா இருக்காதே. நீ நினைக்குறதை எழுதுற பேனாவா இரு. நான் படிச்சதை உனக்குச் சொல்றேன் கேட்டுக்க.

ஆயா, EVERY ONE HAS A DIFFERENT CLOCK.

I KNOW. BUT WE HAVE TO WAIT FOR OUR TIME. YOU DON'T CARE WHAT OTHER PEOPLE THINK OF YOU. YOU ENJOY YOUR LIFE WITH YOUR OWN RULES.

ஆச்சி பேசிய ஆங்கிலத்தில் பெரியண்ணன் கொஞ்சம் அசந்து போனான். ஆனாலும், சமாளித்தான்.

GRANDMA LIFE MEAN CHILDREN. WEALTH, COMMUNITY, SOCIETY, IS IT?

NO. LIFE HAS FIVE PILLARS. GOOD FAMILY. FAITHFUL FRIENDS, HONESTY, HUMANITY, AND ABOVE ALL FOUNDATION IS LOVE.

இப்போது கைக்குழந்தை சிவகாமி வாந்தி எடுத்ததைப் பார்த்த ஆச்சி ஓடிச்சென்று தன் பட்டுப்புடவையால் துடைத்தாள்.

இதைப் பார்த்த பேரன் சேவகன் செட்டி கேலி செய்தான்.

அய்ய, அவ வாந்தியை அப்பத்தா பட்டுப் புடவையால துடைக்குறாங்க.

சேவகன் செட்டி, எவ்வளவு உயர்ந்த பட்டுப் புடவையா இருந்தாலும் பேரன், பேத்திகள் வாந்தியை, சிறுநீரை, மூக்கைத் துடைக்குறவங்கதான் அப்பத்தாவும், ஆயாவும். அலமு, புள்ளைய வந்து பாரு. ஓக்களம் புடுங்குறா. வெரசா வா. ஆளுக்கொரு கடவா எங்கே போனீங்க.

ராஜ்மோகன் கைதட்டிக் கொண்டே வந்தார். ஆச்சியின் பட்டுப்புடவை விளக்கம் தன் ஆவணப் படத்துக்கு நல்ல வசனம் கிடைத்தது என்று புகழ்ந்தார். சேவகன் செட்டிக்கோ ஆச்சி பேசிய பாதி வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியவில்லை.

அப்பத்தா நீங்க பேசுறதுல பாதி புரியலே.

என்ன புரியலே.

ஓக்களம் புடுங்குறா. வெரசா வா என்ன அர்த்தம்.

வாமிட் பண்றான்னு சொன்னேன். குயிக்கா வான்னு சொன்னேன்.

ஓ. அப்படியா?

இதுக்குத்தான் கண்ணதாசன் அமெரிக்கா போன போது நகரத்தார்களுக்கு நாலு வரி பாடுனாரு.

மனதால் ஒன்றுபட்டுச் சேர்ந்திருப்பீர் – இங்கு
மழலைகள் தமிழ்பேசச் சொல்லி வைப்பீர்
தமக்கெனக் கொண்டு வந்தது ஏதுமில்லை
தமிழையும் விட்டு விட்டால் – வாழ்க்கையில்லை.

ராஜ்மோகன் கை தட்டினார். அலமு உள்ளே இருந்து ஓடி வந்தாள். ஆச்சி சொன்னார்.

பிள்ளையை, எண்ணெய் தடவி இளம் வெயில்ல போடு. இதமான வெந்நீரில் குளிப்பாட்டு. கை கால்களை எண்ணெய் தடவி நீவி விடு. தாய்ப்பால் கொடுத்ததும் இதமா முதுகுல தட்டிக் கொடு. பிள்ளைக்கு ஏப்பம் வரணும். அப்புறம் ஏழு மாதம் வரை சவ்சவ், பலாப்பழம், பூசணிக்காய் சாப்பிடாதே. பிள்ளைக்குச் சளி பிடிக்கும். அப்படிச் சளிப் புடிச்சா துளசி, கற்பூரவல்லியைக் கொதிக்க வச்சுச் சங்குல ஊத்திக் கொடு. வயித்த வலிச்சு அழுதா வசம்பை உரசிப் போடு. சிறு குழந்தை இல்லாதது வீடும் இல்லை. சீரகம் இல்லாதது கறியும் இல்லை.

அலமு பிள்ளையை வாங்கிக் கொண்டு உள்ளே போனாள்.

ராஜ்மோகன் ஆச்சியின் அத்தனை குணநலன்களையும் பாராட்டினார்.

ஆச்சி, YOU ARE GREAT WOMAN.

W - WONDERFUL MOTHER

O - OUTSTANDING FRIEND

M - MARVELLOUS DAUGHTER

A - ABSOLUTE SISTER

N - NICEST GIFT TO MEN FROM GOD.

இதைக் கேட்டுக் கொண்டே கைதட்டியபடி வந்த செட்டியார், ஜானகி ஆச்சி பேசுவதாகச் சொல்லி மொஃபைலை ஆச்சியிடம் தந்தார்.

ஆச்சி பேசினார்.

சொல்லுங்க ஜானகி அய்த்தியாண்டி.

ஜானகி கண் கலங்கியபடி பேசினாள்.

சிகப்பி அண்ணமுண்டி, உங்க வீட்ல எல்லாப் பிள்ளைகளும் அயல்நாட்டுலேருந்து வந்திட்டாங்க. என் பொண்ணு பரிபூரணத்தை உங்க தம்பி மகன் ரத்னசபாபதி கட்டிக்குவானா? இல்லை வேண்டாம்னு விட்டுட்டுப் போயிடுவானான்னு என் தாய புள்ளைகள்லாம் கேக்குறாங்க. உங்க வீட்டுல எல்லாப் புள்ளைகளும் வந்திட்டாங்க. ஏன் அந்தப் புள்ளை மட்டும் வரலே. நான் என் புருஷன் சரியில்லாம என் பொண்ணுங்களைக் கட்டிக் கொடுக்குறதுக்குள்ள அறுந்த நூலாப் போனேன். அடகுபிடிக்கந்தையாய்ப் போனேன். தயவு செஞ்சு எல்லா ஏற்பாடும் பண்ணுனதுக்கப்புறம் அவன் மாட்டேன்னு சொல்லிட்டான்னு மட்டும் சொல்லிடாதீங்க. அப்புறம் நாங்க ரெண்டு பேரும்............

அதற்கு மேல் சொல்லாமல் மொஃபைல் ‘கட்’ ஆனது.

ஆச்சி சிறிது நேரம் பேச முடியாமல் இருந்ததைப் பார்த்த செட்டியார் ஆறுதல் சொன்னார்.

சிகப்பி, ஒன்னும் யோசிக்காதே. நீ எல்லாருக்கும் நல்லது செஞ்சுதான் பழக்கம். திருமணத் தடை நீங்க பங்குனி உத்திரத்தன்னைக்கு விரதமிருந்தா தடை நீங்கும். ரத்னசபாபதி வந்ததும் வர்ர வாரம், வர்ர பங்குனி உத்திரத்தன்னைக்கு விரதமிருந்து, திருமணக் கோலத்தில இருக்குற தெய்வத்தைக் கும்பிட்டு வரச் சொல்லலாம். நிச்சயம் திருமணம் நடக்கும்.

ராஜ்மோகன் தனக்கும் நீண்ட காலமாகப் பெண் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தை மனதில் வைத்துக் கொண்டு கேட்டார்.

அய்யா பங்குனி உத்திரம் அவ்வளவு விசேஷமா?

ஆமா. டைரக்டர் சார். மாதங்கள்ல பங்குனி 12&–வது மாதம். நட்சத்திரங்கள்ல 12–&வது நட்சத்திரம் உத்திரம். ரெண்டும் சேர்ந்ததுதான் பங்குனி உத்திரம். சிவபெருமான் மீனாட்சியைத் திருமணம் செஞ்சது பங்குனி உத்திரம். முருகப் பெருமான் தெய்வானையைத் திருமணம் செஞ்சது பங்குனி உத்திரம். ராமபிரான் சீதையைத் திருமணம் செய்தது பங்குனி உத்திரம். ஆண்டாள் ரெங்கமன்னாரைத் திருமணம் செய்தது பங்குனி உத்திரம். தேவர்களின் தலைவன் இந்திரன் இந்திராணியைத் திருமணம் செய்தது பங்குனி உத்திரம். 27 நட்சத்திரங்களும் சந்திரனைத் திருமணம் செய்தது பங்குனி உத்திரம். இது மட்டுமில்லை. சுவாமி ஐயப்பன் அவதரித்தது, ஸ்ரீ வள்ளி அவதரித்தது, மகாலெட்சுமி அவதரித்தது, மகா விஷ்ணு மார்பில் மகாலெட்சுமி அமர்ந்தது, பிரம்ம தேவன் நாவில் சரசுவதி அமர்ந்தது எல்லாமே பங்குனி உத்திரம் தான்.

செட்டியார் சொன்னதை ராஜ்மோகன் கேட்டுக் கொண்டிருந்தார். ஆச்சி வாசலைப் பார்த்த படியே இருந்தார். கார் வாசலில் வந்து நின்றது. அதை விட்டு டிரைவர் மட்டும் ஒரு பெட்டியை இழுத்துக் கொண்டு வந்தான். ஆச்சி கேட்டார்.

ஏம்ப்பா டிரைவர் மனோ, மதுரை ஏர்போர்ட்டுக்குப் போய்ட்டு நீ மட்டும் வந்திருக்கே, ரத்னசபாபதி வரலே.

டிரைவர் ஆச்சியைப் பார்த்துப் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்தான். (தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

# ஓவியம்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



### நடுவீட்டுக் கோலங்கள்:

பொங்கல், பிள்ளையார் நோன்பு முதற்கொண்டு நம் இல்லங்களின் அனைத்து விழாக்களிலும் அரங்கேறுபவை 'நடுவீட்டுக் கோலங்கள்'. அதில் உள்ள முதல் சதுரம் தெய்வ வழிபாட்டுக்கும், இரண்டாவது சதுரம் நம் முன்னோர் வழிபாட்டுக்கும் உரியவை. கோலம் வரையும் போது எடுக்கப்படும் எட்டுக் கால்களும் எட்டுத் திசைகளைக் குறிப்பவை. செம்மாந்து நிற்கும் தேர் நம் எழுச்சிக்கும், வள்ர்ச்சிக்கும் சான்று கூறுபவை. புள்ளிகள் நம் இனத்தின் பெருக்கத்தைக் குறிப்பவை. நடுவில் உள்ள கட்டம், சிறு சிறு அடைப்புகள், தூண்கள், நம் இல்லத்தைக் குறிக்கின்றன என்று பெரியவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள்.

நகரத்தார் குலத்தின் அடையாளங்களாகத் திகழ விரும்பும் பெண்கள் கோலம் இடும் கலையையும், தாலாட்டுப் பாடும் திறமையையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

### மோனா லிசா:

இனிப்புகளைப் பற்றிப் பேசும் போது பாசந்தியை நினைக்காமல் இருக்க முடியாது. ஓவியங்களைப் பற்றிப் பேசும் பொழுது புன்னகை அரசி 'மோனா லிசா' ஓவியத்தை நினைக்காமல் இருக்க முடியாது. 1503-ம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த லியோனார்டோ டா வின்சி, மோனா லிசா ஓவியத்தை வரையத் தொடங்கினார். 1519-ல் அவர் இறந்த போதும் ஓவியத்தை நிறைவு செய்யாமலே மறைந்தார்.

### மோனா லிசா யார்?:

இத்தாலியில் ஃப்ளாரென்ஸ் நகரைச் சேர்ந்த பட்டு நூல் வியாபாரி ஃப்ரான்செஸ் டெல் ஜியோ கோண்டோவின் வேண்டுகோளுக்காக அவர் மனைவி லிசா டெல் ஜியோகோண்டோவின் உருவத்தை டா வின்சி வரைந்தார். படத்தின் தலைப்பு: மோனா லிசா. அதன் பொருள்: "LISA MY LADY" ("லிசா என்னவள்"). ஒரு மரப் பலகையில் எண்ணெயில் கலந்த வர்ணத்தில் (Oil paint) வரையப்பட்ட 30"X21" அளவுள்ள சித்திரம்.



### பிரான்சுக்குப் பயணம்:

1516-ல் பிரான்சு நாட்டு அரசர் ஃப்ரான்சிஸிடமிருந்து அழைப்பு வரவே, டா வின்சி பிரான்சுக்குச் சென்ற போது முடிக்கப்படாத சித்திரத்தைத் தன்னுடன் எடுத்துச் சென்று வரைவதைத் தொடர்ந்தார். ஆனால் 1519-ல் அவர் இறந்த போதும், சித்திரத்தில் கண் புருவங்கள் தீட்டப்படாமலே இருந்தன. அவர் மறைவுக்குப் பிறகு, மோனா லிசா ஓவியம் பிரான்சு அரசால் தத்தெடுக்கப்பட்டு, தற்போது பாரிஸ் நகரத்தில் லோவெர் அருங்காட்சியகத்தில், குண்டு துளைக்காத, பருவநிலை பாதிக்காத கண்ணாடிப் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

### நெப்போலியன் மாளிகையில்:

பிரெஞ்சுப் பேரரசர் நெப்போலியனுக்கு மோனா லிசா ஓவியத்தின் மீதிருந்த தீராத வேட்கையால், அதைத் தன் மாளிகைக்கு எடுத்து வந்து நான்காண்டுகளுக்கு சுவற்றில் மாட்டி வைத்து, அழகு பார்த்தார்.

### நேயர் கடிதங்கள்:

அருங்காட்சியகத்தில் இருக்கும் லட்சக்கணக்கான ஓவியங்களில், மோனா லிசாவுக்கு மட்டுந்தான் தனியாகத் தபால் பெட்டி இருக்கிறது. அவ்வளவு காதல் கடிதங்கள் வந்து குவிகின்றன.

### கள்வன் கையில்:

1911-ல் லோவெர் அருங்காட்சியக ஊழியர் ஒருவர் 'மோனா லிசா ஓவியம் இத்தாலியர்களுடையது, அது ஏன் பிரான்ஸில் இருக்க வேண்டும்' என்ற கோபத்தில் அதைத் திருடிச் சென்று விற்க முயன்ற போது பிடிபட்டு, ஓவியம் மீட்கப்பட்டது.

### சித்திரத்துக்குச் சேதம்:

1956-ல் அருங்காட்சியகத்தைப் பார்வையிட வந்த ஒரு ரசிகர் என்ன காரணத்தாலோ மோனா லிசா ஓவியத்தின் மீது ஆத்திரம் கொண்டு அக்னித் திராவகத்தை வீசினார். அதனால் உருவத்தின் இடது தோள் சேதமடைந்தது. அதன் பிறகுதான் குண்டு துளைக்காத பெட்டிக்குள் வைக்கப்பட்டது.

### அழகியின் ஊர்வலம்:

1960-களில் 100 மில்லியன் டாலர்களுக்குப் போக்குவரத்து காப்புறுதி (Transit Insurance) எடுத்து, மோனா லிசா ஓவியத்தை ஊர்வலமாகப் பல இடங்களுக்கு எடுத்து வந்தார்கள். லோவெர் மியூசியத்திலிருந்து ஒரு



கலைப் படைப்பாக வெளியே வந்த மோனா லிசா மக்களின் ஏகோபித்த சொத்தாகத் திரும்பி வந்தது.

**புன்னகையின் பொருள் என்ன?:**

மோனா லிசாவின் மெலிதான புன்னகைக்குப் பொருள் என்ன என்ற ஆராய்ச்சி இன்றளவும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் புன்னகையில் ஏதேனும் மர்மம் ஒளிந்திருக்கிறதா அல்லது அவள் உள்மனத்தில் இருக்கும் சஞ்சலம் வெளிப்படுகிறதா என்று புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**ரவிவர்மா ஓவியங்கள்:**

இந்தியாவைப் பொறுத்தவரை நவீன ஓவியக் கலையின் தந்தை என்று புகழப்படுபவர் ராஜா ரவிவர்மா. அவர் பிறந்ததென்னவோ திருவிதாங்கூரில் கலையும், கல்வியும் குடிகொண்டிருந்த பிரபுக்களின் உயர் குடும்பத்தில். 14 வயதில் மகாராஜா ஆயில்யம் திருநாளின் அரண்மனை ஓவியரிடம் நீர் ஓவியம் (Water Painting) கற்றுக் கொண்டவர். பிறகு டச்சு நாட்டைச் சேர்ந்த ஓவியரிடம் எண்ணெய் ஓவியம் (Oil Painting) கற்றுக் கொண்டார்.

**சியாரோஸ்க்யூரோ:**

பொதுவாக ஓவியர்கள் மனிதர்கள், விலங்குகள் மற்றும் இயற்கைக் காட்சிகளை வரைவதற்காக எடுத்துக் கொள்ளும் போது அந்த உருவங்களின் முப்பரிமாண (நீள, அகல, ஆழம்) அழகைக் கொண்டுவர சில யுக்திகள் பொதுவாகக் கையாளப்படும். அதில் ஒன்று வெளிச்சத்தையும், நிழலையும் பொருத்தமாகக் கலப்பது. இது ஐரோப்பிய ஓவியர்களின் பாணி. இதற்கு சியாரோஸ்க்யூரோ என்று பெயர். இந்த பாணியை ரவிவர்மா பின்பற்றியதுதான் அவரின் இமாலய வெற்றிக்குக் காரணம்.

**ஓவிய நாயகர்கள்:**

அவர் ஓவியங்களில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச, புராண மாந்தர்கள், நளன், தமயந்தி, துஷ்யந்தன், சகுந்தலை எல்லாம் மீண்டும் உயிர் கொண்டு நடமாடினார்கள்.

**தங்கப் பதக்கம்:**

அவர் தன் 22-வது வயதில் (வருடம் 1873) மதராஸ் நுண்கலைக் கண்காட்சியில் கவர்னரின் தங்கப் பதக்கம் பரிசாக வாங்கினார். அவருக்குப் பதக்கம் வாங்கிக் கொடுத்த ஓவியம் “நாயர் குல மங்கை தன் கூந்தலை அள்ளி முடியும்” சித்திரம்.

**தந்தை மகளுக்குத் தந்த பெருமை:**

ரவிவர்மாவின் மூத்த மகள் மஹாப்ரபா தன் தந்தையின் இரண்டு புகழ் பெற்ற ஓவியங்களில் தோன்றி இருக்கிறார்: 1. “அதோ வருகிறார் அப்பா”, 2. “நிலவொளியில் அழகு மங்கை”.

**ரவிவர்மா லித்தோகிராஃபிக் அச்சகம்:**

1888-ல் பரோடா மகாராஜா சாயாஜிராவின் அரண்மனை தர்பார் ஹாலை அலங்கரிக்க இதிகாச மாந்தர்களின் உருவங்களை 14 பெரிய அளவு ஓவியங்களாக ராஜா ரவிவர்மா வரைந்து கொடுத்தார். பரோடா மகாராஜா தன் அன்பின் வெளிப்பாடாக 50000 ரூபாய் செலவில் “ரவிவர்மா நுண்கலை லித்தோகிராஃபிக் அச்சகத்தை பம்பாயில் (இன்றைய மும்பை) அமைத்துக் கொடுத்தார். அந்த அச்சகம் ரவிவர்மாவின் ஓவியங்களைப் பாமர மக்களிடையே கொண்டு சேர்த்தது.

**சரித்திர நாயகன்:**

ராஜா ரவிவர்மா, தான் வரைந்த ஓவியங்களைத் தன்னுடைய அச்சகத்திலேயே நிறையப் பிரதிகள் எடுத்து மலிவு விலையில் எல்லோருக்கும் வழங்கினார்.

மேல்தட்டு மக்களின் ரசனைக்கும், கலை விற்பன்னர்களுக்கும் விருந்தாகப் படைக்கப்பட்ட ஓவியங்களை, நடுத்தட்டு மக்களுக்கும், விளிம்பு நிலை மனிதர்களுக்கும் அறிமுகப்படுத்தியது ரவிவர்மாவைச் சரித்திர நாயகனாக்கியது.

**புதிய பரிணாமம்:**

இவ்வாறு ஓவியக் கலைஞர்கள் மனிதர்களையும், இயற்கைக் காட்சிகளையும், விலங்குகளையும் துல்லியமாகச் சித்தரிக்கும் எதார்த்த ஓவியக் கலை (Realism Art) முதிர்ச்சி அடைந்திருந்த நிலையில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இதன் நீட்சியும், வீச்சும் வேறு கோணத்தில் வளர்ந்தன. சித்திரம் என்பது பார்க்கிற காட்சிகளைப் பார்க்கிற மாதிரியே வரைவது மட்டும்தானா, அதைத் தாண்டி வேறு பரிணாமமே கிடையாதா என்ற சிந்தனை, விவாதமெல்லாம் சித்திரக்காரர்களிடமும், ரசிகர்களிடையேயும் விரிவடைந்தது. அதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றியதுதான் “உணர்வு ஓவியம்” (Abstract Art). ஓர் உருவத்தை அல்லது உயிரைக் காணும் ஓவியர் அதை அப்படியே தன் சித்திரத்தில் பதிவு செய்யாமல். தன் கற்பனையில் அந்தக் காட்சியை இருத்தி, அது தனக்குள் ஏற்படுத்திய உணர்ச்சிகளைச் சித்திரமாக்குவது ‘உணர்வு ஓவியம்’. இதற்கு விதவிதமான நிறங்கள் (Colours), வடிவங்கள் (Shapes), தோற்றங்கள் (Forms) இவற்றைப் பயன்படுத்துவார்கள்.

**உணர்வு ஓவியங்கள் (Abstract paintings):**

அச்சத்தையோ, சினத்தையோ குறிப்பதற்குச் சிவப்பு வண்ணத்தையும், அமைதியைக் குறிப்பதற்கு

வெண்மையையும், மகிழ்ச்சியை, செழிப்பைக் குறிக்கப் பச்சையையும் தெரிவு செய்து கொள்வார்கள்.

தான் கண்ட காட்சியைக் கூறு கூறாகப் பிரித்து, பல கோணங்களிலிருந்து கற்பனையில் ஆய்வு செய்வார்கள். பிறகு அந்தக் கூறுகளை வட்டம், சதுரம், முக்கோணம், செவ்வகம் என்ற கணித வடிவங்களாக (Geometric shapes) மாற்றுவார்கள். கண்ட காட்சி தன் மனத்தில் ஏற்படுத்திய விளைவுகள் சித்திரத்தில் வெளிப்படும் விதத்தில் வடிவங்களை அடுக்கிச் சித்திரத்தை வரைந்து முடிப்பார்கள்.



**கியூபிஸம்:**

'உணர்வு ஓவியங்கள்' (Abstract Art) என்பது ஒரு கொள்கை (Concept). அதிலிருந்து பல நவீன ஓவியங்கள் தோன்றின. அவற்றில் மிகவும் புகழ் பெற்ற கலை வடிவம் "கணித வடிவங்களின் கூட்டு" (CUBISM). இதை வடிவமைத்தவர்கள் உலகெங்கும் நன்கு பிரபலமான பேப்லோ பிக்காஸ்ஸோ (Pablo Picasso) வும், ஜார்ஜெஸ் ப்ரேக்கும் (Georges Braque).

பிக்காஸ்ஸோவின் ஓவியங்கள் உலகெங்கும் எண்ணற்ற ரசிகர்களை அவருக்குத் தேடித் தந்தன. அவரது ஒவ்வொரு சித்திரமும் என்னென்ன உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றது என்று கருத்துச் சொல்வதில் மக்களிடையே போட்டி நிலவியது. கியூபிஸம் சித்திர வடிவம் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒன்று பகுப்பாய்வு கியூபிசம் (Analytical Cubism). மற்றது செயற்கை கியூபிசம் (Synthetic Cubism).

பகுப்பாய்வு கியூபிசம் காணும் உருவத்தைக் கற்பனையில் கணித வடிவங்களாக உடைப்பது. செயற்கை கியூபிசம் அவற்றை அடுக்கி ஒரே சித்திரத்தில் ஒன்று சேர்ப்பதும், அதற்கு பளிச்சென்ற வண்ணங்கள் சேர்ப்பதும் ஆகும். கியூபிசம் என்பது மலையின் உச்சியில் நின்று கொண்டு சுற்றி உள்ள காட்சிகளைக் காண்பதற்கு ஒப்பானது என்பார்கள். ஓர் அறுவை சிகிச்சை நிபுணர் ஒரு சடலத்தைக் கூறு போட்டுப் பார்ப்பது போல் பிக்காஸ்ஸோ ஒரு காட்சியைக் காண்கிறார் என்பார்கள்.

**செம்மல் வ.சுப.மாணிக்கனாரின் ஏழிளந்தமிழ்**
உரை அடுத்த இதழில் தொடரும்...

**கலைப் போட்டி:**

நவீன ஓவியக் கலை உலகத்தில் இன்றளவும் பிக்காஸ்ஸோவின் பாணி பின்பற்றப்படுகிறது. காலப்போக்கில் பிக்காஸோ, ப்ரேக் இருவருக்கிடையே போட்டி மனப்பான்மை வலுத்தது. இருவரும் வேறு வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தார்கள். பிக்காஸோ யதார்த்த உலகிலிருந்து மிகவும் விலகிப் போய்விடாமல் இருக்க, தன் சித்திரங்களில் உண்மை உருவங்களின் சாயல் கொஞ்சம் இருக்கிற மாதிரிப் பார்த்துக் கொண்டார். ப்ரேக் தான் உபயோகித்த வர்ணங்களோடு மணலையும், மாவுப் பசையையும் கலந்து கொண்டார்.

**நவ யுகத்தில் புரட்சி:**

தற்கால நவ நாகரீக யுகத்தில், பிக்காஸோ, ப்ரேக்கின் கியூபிசம் பெரும் புரட்சிகளைச் செய்துள்ளது. நாம் அணியும் ஆடைகள் நம் மானம் காக்கும் தேவைகள் என்பதைத் தாண்டி, மனங்கவரும் கலைப் படைப்புகளாக விளங்குவதில் கியூபிசம் என்ற மாடர்ன் ஆர்ட்டுக்குப் பெரும் பங்குண்டு. ஆடைகளின் வடிவமைப்புகளிலும், வண்ணமயமான சித்திர வேலைப்பாடுகளிலும் கியூபிசம் மேலாதிக்கம் செலுத்துகிறது. ஆடைகளில் மட்டுமா, நம் இல்லங்களை அலங்கரிக்கும் திரைகளிலும், துப்பட்டாக்களிலும்கூட நவீன ஓவியக் கலையின் உன்னதம் வெளிப்படுகிறதல்லவா?

**புதிய தளங்கள்:**

சமூகக் கலாச்சாரங்கள், திருவிழாக்கள், நடனங்கள் எல்லாம் கியூபிசக் கலைக் கண்ணோட்டத்தின் வழியே மாடர்ன் ஆர்ட் ஓவியங்களாகத் தீட்டப்பட்டு. துணி அலங்காரங்களாக, பீங்கான் கலைப்பொருட்களாகப் பல தளங்களில் பவனி வருகின்றன. நம் செட்டிநாட்டு ஊர்களில் பெண்கள் துணிகளில் வண்ண வண்ண நூல்களால் குரோஸ்ஸா, எம்பிராய்டரி பின்னல் வேலைகள் மூலம் தங்கள் ஓவியக் கலைத் திறமைகளைக் காட்டி வருகின்றனர்.

**கணினியின் துணை:**

இன்றைய கணினி யுகத்தில் மென்பொருள்கள் (Software) வழியாகச் சிக்கலான வடிவங்களையும், வடிவமைப்புக்களையும் (Patterns and designs) உருவாக்கி விட முடிகிறது. அத்துடன் தற்காலத்தில் ஆடை, அணிகலன், கலைப் பொருட்களின் சந்தைகள், கண்காட்சிகள் நாட்டில் பல்கிப் பெருகி வருவதால் நவீன ஓவியக் கலைஞர்களின் புத்தாக்க (Innovation) முயற்சிகளில் புத்துணர்ச்சியையும், புது எழுச்சியையும், காண முடிகிறது. பொறியாளர்கள், உள்ளரங்க அலங்கார நிபுணர்கள் மற்றும் ஓவியர்களிடையே ஒருங்கிணைந்த ஒத்துழைப்பையும் காண முடிகிறது.

கணினியின் தொழில் நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு இவற்றின் பக்க பலத்தோடு, நவீன ஓவியக் கலைஞர்களுக்குப் புதிய தொழில் துறைகளின் வாயிற் கதவுகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.



NAGARATHAR™
CHAMBER OF COMMERCE
SAIL TO PROSPER

# நகரத்தார் சேம்பர் ஆப் காமர்ஸ் (NCC)

நகரத்தார் சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பின் சார்பாக 04.05.2025 அன்று காலை 10 மணிக்கு சென்னையில் (காஸ்மோ கால்ப் கிளப், நந்தனம்) சென்னை வாழ் நகரத்தார்கள் சங்க பிரதிநிதிகள் மற்றும் NCC உறுப்பினர்கள் கலந்து கொண்ட கருத்துப் பரிமாற்ற நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் NCC-யின் தொழில் முனைவோர் மற்றும் நகரத்தார் இளைஞர்கள் முன்னேற்றம் குறித்த வருங்கால முன்னெடுப்புகள், திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக கோவிலூர் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ நாராயண ஞான தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்வில் NCC அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, செயல்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் பற்றிய காணொலி பவர் பாய்ண்ட் மூலம் சிறப்பாக விளக்கப்பட்டது. நகரத்தார் பெருமக்களே தொழில் முனைவோர்கள், தொழில் தொடங்க ஆர்வமுள்ள ஆண்கள் மற்றும் ஆச்சிமார்கள் NCC-யில் இணையலாம்.

JOIN NCC

+91 **63806 60796**
admin@nagaratharcoc.com




## Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

**இலவச பல் பரிசோதனை செய்யப்படும்**

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற **Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு** வருகை தாருங்கள்.

**Dr.S.மணிகண்டன்**,BDS., MBA(HM)
9551624126 / 7904079923




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 May - 2025
Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.

